விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 02 ஞாயிற்றுக்கிழமை (19.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 304

# ரணிலின் ஐரோப்பிய பயணமே புலிகளின் தடையை நீக்கியது



## ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவே ரணில் விக்கிரமசிங்கவின் ஐரோப்பிய விஜயம் இடம்பெற்றதாக ஜனாதிபதி பரபரப்புக் குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.

பொது பல சேனாவிற்கு ஆதரவான பௌத்த பிக்குகளுக்கு அறநெறிப் பாடசாலை (தஹம்பாசல்) ஆசிரியர் நியமனம் வழங்கும் வைபவம் அலரிமாளிகையில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜெயலலிதா விடுதலை



(சென்னை)

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பெங்களூர் சிறையில் இருந்து விடு

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்தேவி டிசம்பரில் கே.கே.எஸ் செல்லும்

(யாழ்ப்பாணம்)

யாழ்தேவி ரயில் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் காங்கேசன்துறை வரை பயணம் செய்யும். கொழும்பு-தலைமன்னார் ரயில் சேவையும் டிசம்பரில் மீண்டும் ஆரம்பிக்கப்படும என புதிய ரயில்வே பொது முகாமையாளர் விஜய அமரதுங்க தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளின் பயங்கரவாதத்தை எங்களால் நிரூபிக்க முடியும்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் என்பதனை நிரூபிக்க முடியும் என இலங்கை அரசாங்கம், ஐரோப்பிய ஒன்றியத்திடம் அறிவித்துள்ளது.

உத்தியோகபூர்வமாக இலங்கை அரசாங்கம் இதனை அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பாரியளவில் குற்றச் செயல்களில் ஈடுபட்டனர்.

அது தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்கத் தயார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் 171 அரசியல்வாதிகளை` படுகொலை செய்துள்ளனர்.

12 பேருந்துகள் மீது குண்டுத் தாக்குதல், 21 கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தி மக்களை கொலை செய்தல் உள்ளிட்ட 3 ஆயிரத்துக்கு

24ஆம் பக்கம் பார்க்க....

## புலிகள் மீதான தடை இந்தியாவில் நீக்கப்படாது

### அமைச்சர் வெங்கையா நாயுடு உறுதி

(புதுடில்லி)

இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை நீக்குவது குறித்து மத்திய அரசு இதுவரை ஆலோசிக்கவில்லை என்று மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது, சொத்து குவிப்பு வழக்கில் அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்கு நீதிமன்றம்



வழங்கிய தீர்ப்பை அனைவரும்

23ஆம் பக்கம் பார்க்க...

## பரந்தனில் விபத்து இளைஞன் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்த விபத்து நேற்று சனிக்கிழமை இரவு 8 மணிளவில இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் தர்மபுரத்தைச் சேர்ந்த வி.ஜதார்த்தன் (வயது 24) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற குறித்த இளைஞர் வேக கட்டுப்பாட்டை இழந்து முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானார் என்று தெரிவிக்

23ஆம் பக்கம் பார்க்க....

## வட மாகாண சபை உறுப்பினர் கஜதீபனிடம் தீவிர விசாரணை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாணசபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபனிடம் இராணுவத்தினர் நேற்றுத் தீவிர விசாரணை நடத்தியுள்ளனர்

யாழ்.ஏழாலைப்பகுதியில் அமைந்துள்ள உறுப்பினர் பா.கஜதீபனின் வீட்டுக்கு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் சீருடையுடன் சென்ற இராணுவத்தினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

வசாவிளான் இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி பண்டார எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அதிகாரியே இவ்வாறு விசாரணைகளில் ஈடுபட்டதாக கஜதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மாகாணசபை உறுப்பினரிடம் கேட்டபோது, எனது வீட்டுக்கு வந்த பண்டார தலைமையிலான மூன்று சீருடை அணிந்த இராணுவத்தினர் எனது தந்தையிடம், உங்கள் மகன் எங்கே? அவரை விசாரிக்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

பின்னர் என்னிடம் விசாரணை

23ஆம் பக்கம் பார்க்க....

## மின்சாரம் தாக்கி சிப்பாய் பலி

(கரணவாய்)

புதிய இராணுவ முகாம் ஒன்றினை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் உள்ள 551 ஆவது படைப்பிரிவு இராணுவ முகாமில் இடம்பெற்றுள்ளது.

நேற்றைய தினம் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்து கொண்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி தேர்தல் திகதியை மாற்றுமாறு வலியுறுத்தல்

### பாப்பரசரின் வருகையை முன்னிட்டு

(கொழும்பு)

புனித பாப்பரசர் பிரான்சிஸ் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதை கவனத்தில் கொண்டு ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியைத் தீர்மானிக்குமாறு அரசாங்கத்துக்கு தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

ஒரு நாட்டில் தேர்தல் இடம்பெறும காலங்களில் புனித பாப்பரசர் அந்



23ஆம் பக்கம் பார்க்க....

தீபாவளியை முன்னிட்டு
SISIL WORLD இன்
சலவை இயந்திரங்களுக்கான சிறப்புத் தள்ளுபடி
04 வருடம் வரை நீடித்த உத்தரவாதம்
விசேட விலைக்கழிவு
பண்டமாற்றுக் கொடுப்பனவு
வட்டி இன்றிய இலகு தவணைக் கொடுப்பனவு முறை
இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம்
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(சி-8798)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

WESTERN UNION
MONEY TRANSFER

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

## கேள்வி கோரல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலுக்கு 'அன்னதான மடம்' ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளதால்- தகுந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரத்தை 20.10.2014 தொடக்கம் ஆலய நிர்வாக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களை 29/10/2014 இன் முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலிலும் அனுப்பி வைக்கலாம்.

அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் 29/10/2014 பி.ப 4.00 மணிவரை இடலாம்.

கேள்விப் பத்திரத்துக்கான - மீளப்பெற முடியாத கட்டணம் ரூ.500/-
கேள்விப் பத்திரங்கள் திறத்தல்: 30/10/2014 பி.ப 2 மணி

செயலாளர்
நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்

(C-8810)

## கண்ணீரில் கரைந்த 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கனகசபாபதி தேவிகா



அன்னை மடியில் 22.01.1962
ஆண்டவன் அடியில் 30.10.2013

திதி : 19.10.2014 (இன்று)
அபரபக்ஷ ஏகாதசித்திதி

சென்ற உன் செல்வ முகம் கண்டு
ஆண்டொன்று ஆகுதம்மா
செல்லும் இடமெல்லாம் சென்ற உன்
செல்வ முகம் தோன்றுதம்மா
செல்லமாக என்னை ஊட்டி
வளர்த்தாய் அம்மா
இன்று உன் பிள்ளை நான்
படும் துயரம் அறிவாயோ அம்மா
என் அப்பாவின் வாடிய முகம்
கண்டாயோ அம்மா
இன்னொரு ஜென்மம் இருந்தால்
நான் உன் மகளாய் பிறக்க
அருள்வாய் அம்மா

"நியதிகளை வெல்ல யாரம்மா உள்ளார்"
உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர் : கணவர், மகள் - சதுர்சனா, சித்தப்பா

(8109)

## மாபெரும் மலிவு விற்பனை



| | |
|---|---|
| சல்வார் | 500/= |
| ஸ்கேட் | 400/= |
| பிளவுஸ் | 300/= |
| சாறி | 500/= |

தீபாவளியை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு மலிவு விற்பனை என்பதனை அறியத் தருகின்றோம்

## மகா சில்க்ஸ்

இல. 33, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

(8112)

TCT MULTI TRADE CENTRE
527, Navalar Road, Nallur, Jaffna.

# TCT MULTI TRADE CENTRE

## ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்

## ரிசிரியில் தீபத்திருநாள் வியாபாரக் கொண்டாட்டம்

## 19.10.2014 - 23.10.2014

### உங்களுக்காக விசாலமாக்கப்பட்ட ரிசிரி புடவையகத்தில்

**மனம் விரும்பிய நவீன புடவை வகைகள் உங்கள் தெரிவிற்காக..... சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சகல வயதினர்களுக்கும் ஏற்ற ஆடை வகைகள் மிக குறைந்த விலையில்....**

- ரூபா 5000/-க்கு புடவைகளை கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு அழகிய குடை அல்லது மணிக்கூடு அன்பளிப்பாகவும், ரூபாய் 8000/-க்கு கொள்வனவு செய்பவர்களுக்கு சேட் அல்லது ரிசேட் அன்பளிப்பாக வழங்கப்படும்.
- Emarald சேட் வகைகள் மற்றும் ஏனைய சேட் வகைகளுக்கு 10% விலைக்கழிவும், அத்துடன் தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கான, சிறுவர்களுக்கான புடவைகளுக்கு 40% வரையான விலைக்கழிவும் வழங்கப்படும்

### பான்சியகத்தில்

- குடை, மழைக்கவசம், நுளம்பு வலைகள் ஆகியவற்றிற்கு 15% விலைக்கழிவும் வழங்கப்படும்.



### பல்பொருள் விற்பனை நிலையத்தில்

- தெரிவு செய்யப்பட்ட கேக் வகைகள், பிஸ்கட் வகைகளுக்கு 10% விலைக்கழிவு
- Prima முழுக் கோழி இறைச்சி 1Kg - 330/- ஆகவும், Pepsi, Mirinda 2.25L சோடா - 220/- ஆகவும் விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.
- தெரிவு செய்யப்பட்ட Elephant Ice Cream வகைகள் 10% விலைக்கழிவும் வழங்கப்படும்.

(சி-8809)

**தீபாவளி நாளில் உங்கள் அன்பானவர்களுக்கு வழங்குவதற்காக வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட Sweet, Chocolate வகைகள் மிகக் குறைந்த விலையில்**

தீபத்திருநாளை மகிழ்ச்சியாக கொண்டாட ரிசிரி மல்ரி ரேட் சென்ரருக்கு வருகை தாருங்கள்

**நேர்த்தி, வாடிக்கையாளர் திருப்தி, சிறப்பு என்பவற்றை தேடுபவர்களுக்கான எமது ஆரம்பப்புள்ளி இது. உங்கள் திருப்திகரமான பெருமிதப்பார்வையே எமது நோக்கம்.**


## எமது வாடிக்கையாளர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துக்கள்

முகவரி:- 527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

HAPPY Deepavali

தொ.பே இல : 021 7451895

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





ஆட்கடத்தல்காரர்களின் பொய்களுக்கு ஏமாந்து
நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை வீணாக்க வேண்டாம்.

- வீசா இல்லாமல் படகில் ஏறும் நீங்கள் அவுஸ்திரேலியாவைச் சென்றடைய மாட்டீர்கள்.
- குடும்பத்தினர், சிறுவர்கள், ஆதரவற்ற பிள்ளைகள், கல்வித்தகைமை கொண்டவர்கள் அல்லது விசேட தகுதிகளையுடையோர் அனைவருக்குமே இச்சட்டம் பொருந்தும்.
- நீங்கள் யாராக இருந்தாலும், எங்கிருந்து வந்தாலும் அவுஸ்திரேலியாவில் குடியமர முடியாது.

Australian Government

அவுஸ்திரேலிய அரசாங்கம் விடுக்கும் செய்தி ... மேலதிக விபரங்களுக்கு www.australia.gov.au/novisa


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விழிப்புணர்வு ஊர்வலம் இன்று யாழில்

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு வட பகுதி லயன்ஸ் கழகங்களும் யாழ்ப்பாணத்திலுள்ள விழிப்புலனற்றோர் அமைப்புக்களும் இணைந்து நடத்தவுள்ள விழிப்புணர்வு ஊர்வலம் இன்று ஞாயிற்றுக்கிழமை 8.30 மணிக்கு சுன்னாகம் பேருந்து தரிப்பிடத்திலிருந்து ஆரம்பமாகி யாழ் இராமநாதன் கல்லூரியை சென்றடைந்து தொடர்ந்து பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளது.

வெள்ளைப்பிரம்பு தின வடமாகாண ஒழுங்கமைப்பாளர் லயன் செ.மகாதேவா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி லய்ன் வை.தியாகராஜாவும் சிறப்பு விருந்தினராக லயன் டாக்டர் கே.எம்.பத்மநாதன் மற்றும் வலி தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஸ் ஆகியோரும் கௌரவ விருந்தினராக வாழ்வகம் விழிப்புலனற்றோர் இல்லத் தலைவரும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளருமாகிய ஆர். ரவீந்திரன் மற்றும் வலி. தெற்கு பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் வி.கே. முருகையா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்

இந்நிகழ்வில் வரவேற்புரையினை லயன்ஸ் கழக வலயம் 21இன் தலைவர் லயன்.சி. ஹரிகரனும் நன்றியுரையினை வலயம் 22 இன் தலைவர் வைத்திய கலாநிதி எஸ். குணதாசனும் நிகழ்த்தவுள்ளனர்.

மேலும் இந்நிகழ்வில் விழிப்புலனற்ற சிறார்களின் நடனநிகழ்வுகள்,பட்டிமன்றம், இன்னிசை நிகழ்வு என்பனவும் லயன்ஸ் கழகங்களின் சேவைத்திட்டமும் இடம்பெறவுள்ளது.(இ)



# வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் ஆறாம் கட்டம் ஆரம்பம்

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

**வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்ட ஆறாம் கட்டத்தின் கீழ் மரக் கன்றுகளை நடும் ஆரம்பவிழா நாளை 20 ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பண்டத்தரிப்பில் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

எங்கள் வீட்டுத் தோட்டத்திலிருந்து எங்கள் மரக்கறிகள் என்ற தலைப்பை அடிப்படையாகக் கொண்டு மனையலகு மட்டத்தில் விஷங்கள் மற்றும் நச்சுக் கலப்பற்ற புதிய மரக்கறிகளை தமது வீட்டுத் தோட்டத்திலிருந்து பெற்றுக்கொள்வதன் மூலமும் மரக்கறி உற்பத்திக்கு பங்களிப்பதன் மூலமும் வீட்டிலிருந்து வெளியே மரக்கறிக்காகச் செலவாகும் பணத்தை குறைந்தளவாக்கிக் கொள்ளல் மற்றும் பயனாளி மக்களுக்காக வழங்கப்படுகின்ற விதைகள் மற்றும் கன்றுகள் ஆகியவற்றை வீட்டுத்தோட்ட அபிவிருத்தியின் மூலம் தக்கவாறு பராமரித்து விளைச்சலைப் பெற்றுக் கொண்டு தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்காக சமுதாயத்தினுள் சரியான மனநிலையைக் கட்டியெழுப் பல் இத்தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஆறாம் கட்டத்துக்கான மாவட்ட ஆரம்ப விழா சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த யா/ பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் அமைச்சரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் 2014 ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி முற்பகல் 10.07 மணியளவில் வரும் சுப முகூர்த்தத்தில் கிழக்குத் திசை நோக்கி நடைபெறவுள்ளது.

இத்துடன் இணைந்ததாக மாவட்டத்தில் 15 பிரதேச செயலக பிரிவு ரீதியாக ஆரம்ப விழா பிரதேச ஒருங்கிணைப்பு தலைவர்களின் தலைமையின் கீழ் அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் நடத்துவதுடன் 435 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தி யோகத்தர், வாழ்வின் எழுச்சி அபி விருத்தி உத்தியோகத்தர்கள் மேற்பார்வையில் ஆரம்பவிழா நாளின் போது மாதிரி வீட்டுத் தோட்டங் களை அமைப்பதற்கு ஏதுவாக மரக்கறி விதைத் தொகு தி, ஒருவீட்டு க்கு 4 மரக்கறி வகையைச் சேர்ந்த 9 கன்றுகள், பழமரக்கன்றுகள், தென்னங்கன்று, அகத்தி கன்றுகள் என்பன வழங்கப்படவுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் யாழ்ப்பாண மாவட் டத்தில் 78 ஆயிரத்து 300 குடும்பங்களுக்கு மாவட்டச் செயலாளரின் வழிநடத்தலின் கீழ் பின்வரும் உள்ளீடுகள் வழங்கப்படவுள்ளன.

32ஆயிரத்து 625 அகத்திக் கன்றுகள், ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 506 பழமரக் கன்றுகள், 43 ஆயிரத்து 500 விதைத் தொகுதிகள், 405 மரமுந்திரிகைக் கன்றுகள், ஒரு இலட்சம் தென்னங்கன்றுகள், ஆயிரத்து 13 பாடசாலைகளுக்கான பழமரக்கன்றுகள், 12 ஆயிரத்து 294 அரசாங்க உத்தியோகத்தர்கள், ஆயிரத்து 404 அரசாங்க கட்டடங்களுக்கான பழமரக்கன்றுகள் மற்றும் 3 ஆயிரத்து176 கோழிக்குஞ்சுகள் என்பன மாவட்டத் திட்டமிடல் செயலகத்தின் ஒருங்கிணைப்புடன் வாழ்வின் எழுச்சித் திணைக்களம், விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், தென்னைப் பயிர்ச்செய்கை சபை என்பவற்றினூடாக பிரதேச செய லாளரின் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்படவுள்ளன என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)

# சமுர்த்தி பயனாளிகளுக்கு இரண்டு தென்னங்கன்றுகள்

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு நேற்றைய தினம் பயன்தரு தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. சமுர்த்திப் பயனாளி ஒருவருக்கு இரண்டு தென்னங் கன்று வீதம் வழங்கப் பட்டன.



கரவெட்டி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சமுர்த்திப் பயனாளிகள் பலர் கலந்து கொண்டனர். இத் தென்னங் கன்றுகளை கரவெட்டி பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் பயனாளிகளுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் இவ்வாண்டிற்கான இரண்டாம் பருவகால மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பங்களை மேற்படி நிறுவனத்தில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் நிர்வாகப் பகுதியில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் யாழ்.புகையிரத நிலையத்திற்கு அண்மையில் 1 பரப்பு 7 குளி கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

(8071) 0779845854

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

NORTH LEAD
Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing

ALL LAPTOPS, DESKTOP REPAIRS ONE DAY SERVICE
QUICK REPAIR & SERVICE
QUICK PICK-UP AND DELEVERY
Laptop & Desktop Accessories Available



LED, LCD TV & Monitor, Printer, UPS, Subwoofer etc.

Laptop LED Screen : 7850 | Laptop DVD Writer : 3850
Laptop Keyboard : 3750 | Lap Hard Disk 500GB : 6950
Laptop Battery : 5850 | Lap Motherboard From : 18750

கணனிகளின் அனைத்து உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

No: 328, Stanley Road, Jaffna. (Near to Ariyakulam Junction) Tel: 021-222 4459, 0774192275
(சி-8808)
Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel) Tel/Fax: 021-206 0909, 0772533390

**பவள விழா அழைப்பு**



அகவை எழுபத்தைந்து
காணும்
கலைப்பிரவாகம்
கலாபூஷணம்
சங்கீதபூஷணம்
உயர்திரு.சுப்பையா
கணபதிப்பிள்ளை
(ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப்
பணிப்பாளர்)

தலைவர்:- சங்கீதபூஷணம் ச.பாலசிங்கம்
இடம்:- இளங்கலைஞர் மன்ற மண்டபம்
காலம்:- இன்று (19-10-2014) ஞாயிறு பி.ப.2.30 மணி

விழாநாயகன் கொண்டலடி வைரவர் ஆலயத்திலிருந்து யாழ். பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்கள் சகிதம் அழைத்து வரப்பட்டு விசேட நாதஸ்வரக் கச்சேரியும் சிறப்பு இசையரங்கும் இடம்பெறும்.

கலைஞர்கள், ரசிகர்கள், ஆர்வலர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(8086)

இங்ஙனம்:-விழா ஏற்பாட்டுக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்கு பூரண ஆதரவு வழங்கத் தயார்

## விக்ரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

'எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிர மசிங்கவின் ஜனநாயகத் தன்மை மிக்க அரசியல் தீர்வு ஆலோசனைக் கருத்துக் களை மகிந்த அரசு தேசத் துரோகம் என்று கூறினாலும் அவரின் கருத்துக்களை நாம் ஏற்றுக் கொள்கின்றோம்."இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். "ஜனாதிபதித் தேர்தலில் எதிர் க்கட்சித் தலைவர் ரணில், மகிந்தவுக்கு எதிராகப் போட்டியிடும் பட்சத்தில் அதனை வரவேற்கின்றோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் தோற்றுவிடுவேன் என்ற அச்சம் ஜனாதிபதி மகிந்தவுக்கு வந்து விட்டது. ஆயினும் பொலிஸ், இராணுவ பலத்தோடு வன்முறை களை உருவாக்கி எவ்வாறேனும் மீண்டும் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று மகிந்த முயற்சிப்பார்" என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள நவசமசமாஜக் கட்சியின் அலுவலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே விக்ரமபாகு மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"மகிந்த அரசுக்கு எதிரான போராட்டங்கள் இன்று அனைத்துத் தரப்பில் இருந்தும் வலுவடைந்து வருகின்றன. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து என்று அனைத்துத் தரப்பினருமே அரசின் நடவடிக்கையினால் - ஊழல் நிறைந்த ஆட்சியினால் அதிருப்தி அடைந்துள்ளனர்.

எனவே, இன்று நாட்டில் ஊழலுக்கு எதிரான, இன ஐக்கியத்தை உருவாக்கக் கூடிய ஆட்சி மாற்றம் அவசரம் தேவை. அந்தவகையில் ரணில் விக்ரமசிங்கவின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக உள்ளது. அதனை நாம் வரவேற்கின்றோம்"என அவர் மேலும் தெரிவித்தார். (இ)


**வாடகைக்கு**

கே.கே.எஸ். வீதி, இணுவில் (நியூ லங்கா பாம்) முன்பாக கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-0776568972 (8085)

**கார் விற்பனைக்கு உண்டு**

302 XXXX தொடரிலக்கமுடைய Toyato Camry நன்கு பராமரிக்கப்பட்ட AC யுடன் கூடிய கார் விற்பனைக்குண்டு

T.p: 0718617949 (8093)

**உடனடியான வேலை வாய்ப்புகள்**

இன்றே அழையுங்கள்... உங்கள் கைகளில் நிரந்தர தொழில் வாய்ப்பைப் பெற 17-55 வயது ஆண்- பெண் இருபாலாருக்கும். "கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள ஜேம், கோடியல், காமெண்ட், தேயிலை, PVC, கிளவுஸ், பிளாஸ்டிக், மின் உபகரணம் மற்றும் பல தொழிற்சாலைகளில் தயாரிப்பு பிரிவுகளுக்கு லேபல்/ உற்பத்தி/ தரம்பிரித்தல்/ களஞ்சியப்பிரிவு/பொதியிடல் ஆட்சேகரிப்பு. உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளில் வசதி செய்து தரப்படும். (நண்பர்கள்/ குழுக்கள்/ தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்/ கல்வி, மொழி அவசியமில்லை. சம்பளம் 20000/=, 35000/= மேலதிக விபரம். (சி-8713)

கொழும்பு:- 0777889185, 0778128194

**புதிய கட்டடம் வாடகைக்கு உண்டு**

யாழ்.நகரில் மத்திய பேருந்து நிலையத்துக்கு அண்மையில் மின்சார நிலைய வீதியில் 1ஆம்,2ஆம், 3ஆம் மாடிக்கடைக்கட்டடம் வாடகைக்கு உண்டு. தேவைக்கு ஏற்ப மாடிகள் பிரித்து கொடுக்கப்படும். ஒரு மாடி ஆனது 1200 சதுர அடிகளை கொண்டது.சகல வசதிகளும் உண்டு.அனைத்து தேவைகளுக்கும் உகந்தது. வாடகையினை நேரடியாக பேசித்தீர்மானிக்க முடியும்.

தொடர்புகள்:-0779934740 ,0758496310 (8104)

Study & Work in Singapore
Hotel Management
Learn & Earn up to Rs. 70,000/- Month
அடிப்படை தகைமை O/L மட்டும்
Study & Work in Malaysia / Study & Work in Canada
Study in UK
UK, EUROPE VISA
Study / Visit / Business Visit / Tourist / Special Occasions
flex Institute
Step Towards a Bright Future
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel : 2364157 Fax : 2501766
www.flexinstitute.lk
FLEX Graphic
(8080)


# UNIVERSITY OF JAFFNA INVITATION FOR BIDS

1.*The Chairperson, Procurement Committee of University of Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the following works.*

| No | Bid ID | Description of Work | Estimated Cost ( Rs. In million) | Contract Period | Minimum Required ICTAD Grade/ Buildings | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| 1 | YA/CWP/ RE/ 2015-01 | Associated Works for the 2 Nos four storied Hostels in Jaffna for University of Jaffna | 15.5 | 60 Calendar Days | C6 | Rs. 150,000 | 6th March, 2015 |
| 2 | YA/CWP/ RE/2015-02 | Associated Works for the Four Storied Hostel for the Vavuniya Campus of the University of Jaffna | 11.5 | 60 Calendar Days | C6 | Rs. 115,000 | 6th March, 2015 |

2.Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction with the Institute for Construction Training and Development (ICTAD) as indicated in the above table.

4.Bids shall be accompanied by a Bid Security as per the information given in the above table.

5.Interested bidders may obtain further information from **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.

6.A complete set of Bidding Documents in English language may be purchased by interested bid ders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna from 20th October, 2014** until **5th November, 2014** from **9.00 hrs to 15.00 hrs** upon payment of a non refundable fee of rupees two thousand **(Rs.2000/-)** for each bid.

7.Bids shall be delivered or sent by registered post to the **Chairperson, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Registrar's office** to reach **on or before 14.00 hrs on the 7th November 2014.** Bids will be opened immediately thereafter **on 7th November 2014** in the Board room of the University in the presence of the bidders' representatives who choose to attend.

8.Bids shall be valid for a period for **90 days** from the date fixed for closing of Bids or any extend period.

9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
- In the form included in Section 09 in the Bidding document.
- In favour of "**Vice Chancellor, University of Jaffna.**"
- Issued by one of the agencies indicated in the clause 16 of ITB of the schedule.

10. Pre Bid meeting will be held at Board room, University of Jaffna at 10.00 hrs on the **31st October, 2014.**

**Chairperson, Procurement Committee,**
**University of Jaffna,**
**Thirunelvely,Jaffna.**
**17.10.2014**

(C-8801)

# இராசி பலன்

19.10.2014
(ஐப்பசி 02, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை- 5.57 மணிக்கு
ஏகாதசி முன்னிரவு-10.10 மணிவரை
மகம் முன்னிரவு -9.17 மணிவரை
இராகுகாலம்-4.32-6.02 மணிவரை
சுபநேரம்-9.02-10.32 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

**மேடம்:** அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்:** வீட்டில் விருந்தினர் வருகை அதிகரிக்கும், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், வாகன சுகமுண்டு.

**மிதுனம்:** சுபநிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்களால் பலனுண்டு, போசன நன்மையுண்டு.

**கடகம்:** நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்ச்சிகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்:** குடும்பச்சுமை கூடும், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி:** காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுபசெலவுகள் கூடும், தேவையற்ற சங்கடங்களைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** உறவினர்களின் உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையலாம், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**தனுசு:** தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பயணங்கள் கைகூடும்.

**மகரம்:** குடும்பத்தில் சில வாக்குவாதங்கள் ஏற்படலாம், ஆரோக்கியக் குறைவான நாள், வேலைச்சுமை கூடும், போசன சுகமுண்டு, பிரயாண பயமுண்டு.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**மீனம்:** சச்சரவைவிட்டு சாதித்துக் காட்டுவீர்கள், தேகநலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், கௌரவமான நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகியற் கலைகளை அழியவிடாது பாதுகாக்க விசேட நடவடிக்கைகள்

## வடக்கு பண்பாட்டு அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழரின் அழகியற் கலைகளை அழியவிடாது பாதுகாப்பதற்கு வடமாகாண கல்வியமைச்சினால் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

முதற்கட்டமாக நவம்பர் மாதம் 5 ஆம் திகதி யாழ்.நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் ஈழத்தமிழர் அழகியற் கருத்தரங்கொன்றினை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆடல்வடிவமென்றால் அந்த இனத்துக்குரிய மொழிவழியில் தானே அமைதல் வேண்டும். ஆக அழகியற்கல்வி அலகில், ஆடல் கல்விக்கான அறிமுக இலக்கு நான்கு தசாப்த காலங்கள் கடந்தும் எட்டப்பட்டுள்ளதா? அழகியல் கல்வி சார்ந்த நம்மவர்கள் இனத்துவ உணர்வுடன் செயற்பட வேண்டியவர்கள், மற்றைய ஆசிரிய பணியாளர்கள் போன்றல்லாது ஈழத்தமிழர் சால்பு பண்பாட்டு விழுமியங்களின் குறியீட்டுக் கவசங்களாகத் தங்களை செயல் வடிவில் இனங்காட்ட வேண்டியவர்கள் அவர்கள்.

ஒரு சில நிமிடங்களாவது தென்னிலங்கை அழகியல் கல்வி ஆசிரியர்களதும் ஆற்றுகைக் கலைஞர்களதும் அவர்களது நிழலில் நிற்கும் பள்ளிப்பிள்ளைகளதும் செயற்பாடுகளைக் கண்ணுற்றால் நாம் எங்கு நிற்கிறோம் என்பது தெளிவாகும்.

அவர்கள் எங்கு சென்று எத்தகைய கலைவடிவங்களைக் கொண்டு வந்தாலும் அவற்றைத் தமது மயப்பட்டதாக்குவதுடன் அந்த ஆக் கங்களில் தமது முத்திரையையும் பதித்து விடுவர். தங்கள் இனத்தினது அசல் அடையாளங்களை அதனுடனிணைந்த பெறுமானங்களைப் பேணிப் பாதுகாத்து முன்னெடுக் கும் முயற்சியில் அவர்கள் என்றும் சோர்வு கண்டதில்லை. அங்குதான் அவர்களது இனத்துவம் சார்ந்த மாண்பு வெளிப்படுத்தப்படுகிறது.

இச்சிறு குறிப்பின் நிறைவாக, குறைச்சேடம் இழுக்கும் ஒருவனது உயிர் ஊசலாடும் நிலைபோன்று நொந்து நொந்து நோக்காடு தீர வழியின்றி அல்லாடிக் கொண்டிருக்கும் எமது அசல் இருப்புக்கள், அடையாளங்கள் காப்பாற்றிப் பேணப்படுவதற்கு எமது அழகியல் ஆசிரியத்துவம் சார்ந்தோர்களது இனவுணர்வுடன்கூடிய முன்னெடுப்புக்கள் முழுவீச்சுப் பெற வேண்டும்.

இன்னும் இவர்கள் உறங்குநிலையிலிருந்தால் நமது தமிழ்ப் பாடசாலைகளின் அழகியற்கல்வியின் ஆடற் கல்விப் பாடப்பரப்பில் இடம்பெற ஆரம்பித்து தென்னிலங்கை ஆடல் வடிவங்களின் அறிமுறை அலகுகள் வெகுவிரைவில் செயல் முறை அலகுகளாக உள்நுழையும் காலம் குறுகிய தூரத்திலேயே உள்ளது என்ற அபாய அறிவித்தலை, இனத்துவத்தின் பேரால் நமது அழகியலாளர்கள் உள்வாங்கிச் செயற்படுவார்களா?

இனத்துவம் சார்ந்த இந்த வரலாற்றுத் தேவையை நிறைவேற்ற வேண்டியவர்கள் நமது அழகியற் கல்வி ஆசான்கள், ஆசிரியைகள் என்பதை புறந்தள்ள முடியுமா? பரீட்சையை நோக்கியதாகவே பாடப் பரப்புகள் இருப்பதால் தொழில்சார் மனப்பாங்குடன் மட்டும் அவர்களது கடமை முடிந்துவிடுமா? அதனால் இனத்துவ மரபுவழி பண்பாட்டு அடையாளங்கள் பெறுமானங்களையும் மற்றும் பல அடையாளங்களையும் பள்ளிப்பருவத்திலிருந்தே பிள்ளைகளுக்கு இனங்காட்டி அவர்கள் மயப்படுத்தப்பட வேண்டும் என்ற அழகியற்கல்வி அறிமுக இலக்கும் புறந்தள்ளப்பட வேண்டுமா?

அழகியற்கல்வி அறிமுகமாகி நான்குதசாப்த காலத்திற்கும் மேலாக இன்றுவரை அதன் நோக்கங்களும் இலக்கும் எந்த அளவுக்கு எட்டப்பட்டுள்ளது.

அது விடைகாண முடியாத ஒரு வெளியாகவே தென்படுகின்றது என்றார் அவர். (இ-4)

# 15வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறுவர்களுக்கான சித்திரப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி கந்தர் மடத்தில் அமைந்துள்ள ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறுவர்களுக்கான சித்திரப்போட்டி இரு பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது.

பங்குபற்ற விரும்புபவர்கள் தரம் 2 தொடக்கம் 5 வரையான மாணவர்கள் காவடி ஆட்டம் என்னும் தலைப்பிலும் தரம் 6- 7 வரையான மாணவர்கள் தாலாட்டும் அம்மா எனும் தலைப்பிலும் தமது ஆக் கத்தை ஏ 4 அளவு வரைதாளில் வரைந்து நவம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் ஐ.ஏ.ரி.சித்திரப் பயிற்சி நிறுவனம். 154/31, ஆத்திசூடி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம் எனும் முக வரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்க ப்பட்டுள்ளது. (இ

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 90 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 90 | 140 |
| தக்காளி | 100 | 80 | 80 | 120 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 40 | 50 | 60 |
| கோவா | 100 | 100 | 90 | 100 |
| கரட் | 120 | 100 | 100 | 140 |
| பூசணி | 30 | 30 | 30 | 50 |
| புடோல் | 60 | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 50 | 90 | 50-80 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 160 | 140 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 110 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 180 | 60 |
| பய்ற்றங்காய் | 120 | 140 | 150 | 120 |
| லீக்ஸ் | 160 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 160 | 120 | 130 | 160 |
| முருங்கைக்காய் | 120 | 140 | 160 | 160 |
| போஞ்சி | 220 | 50 | 160 | 20 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | 60 | 100 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 120 | 120 | 130 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 | 30-35 |
| இராசவள்ளி | 140 | 140 | 100 | 160 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 168

Search for people, places and things Nagendram Home


யுவராஜ்



ஆயுள் தண்டனை வேணும்னா "காதல் செய்"......




மரண தண்டனை வேணும்னா "திருமணம் செய்"......





நிம்மதியா இருக்கணும்னா உன் "வேலையை மட்டும் செய்"......


டி.டிலக்ஸ்




சுதா ரகு




விமல் தாஸ்




பிருந்தன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுக்கலை பயிற்சி

சுவீடன் நாட்டு நிறுவனத்தின் யாழ். சேவை நிலையத்தினால் தீபாவளியை முன்னிட்டு 20% கட்டணக்கழிவில்..

இந்தியாவில் விசேட பயிற்சி பெற்று சிறப்புப் பெற்ற ஆசிரியையினால்...

- டிப்ளோமா அழகுக்கலை பயிற்சிகள்
- துரித 1 மாத கால அழகுக்கலைப் பயிற்சிகள்
- கேக் ஐசிங் பயிற்சிகள் அனைத்தும் மிக குறைந்த கட்டணத்தில் ஆரம்பமாகவுள்ளன.

அனைத்து பயிற்சிகளும் இந்திய முறைப்படி கூடுதலான செய்முறை விளக்கத்துடன் இடம்பெற்று ஒவ்வொரு மாணவர் மீதும் தனித்தனியாக கவனம் செலுத்தப்பட்டு பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பிரிவு 1- 21.10.2014 அன்று 10.00 மணிக்கு
பிரிவு 2- 25.10.2014 அன்று 10.00 மணிக்கு

குறிப்பு- பயிற்சியை நிறைவு செய்த பழைய மாணவர்களும் இப் பயிற்சியில் இணைந்து கொள்ளலாம். பதிவுகளையும் மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ள 25.10.2014 முன்னர் அலுவலக நேரத்தில் வருகை தரவும். நிறுவன அமைவிடத்தினை அறிந்து கொள்வதற்கு தொடர்புகொள்ள 021 4546026

(8097)

ஒறிபிளேம்
லே. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (வேம்படி சந்தியில்)


# மன்னார் மனிதப் புதைகுழி; இறுதி அறிக்கை 27ம் திகதி

மன்னார் மனிதப் புதைகுழி தோண்டும் நடவடிக்கைகளை நிறைவு செய்வது தொடர்பிலான இறுதி அறிக்கை எதிர்வரும் 27 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

தற்போது அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக அநுராதபுரம் விசேட சட்ட வைத்திய அதிகாரி தனஞ்சய வைத்தியரத்ன குறிப்பிட்டுள்ளார். மன்னார் - திருக்கேதீஸ்வரம் வீதியில் நீர்க் குழாய் பொருத்தும் நடவடிக்கைகளின் போது, அங்கு மனிதப் புதைகுழிகள் இருப்பது முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் பொலிஸார் பரிசோதனைகளை மேற்கொண்ட தோடு, நீதிமன்றத்தின் உத்தரவின் படி விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (இ)


# நீங்களும் ஒரு அனுமதி பெற்ற விமான பொறியியலாளர் ஆகுங்கள் !

LPAA

## BE AN AIRCRAFT LICENSE ENGINEER



SCHOLARSHIP AVAILABLE

Lanka Pacific Aviation Academy is proud to
BE THE FIRST TO offer
EASA part 66 Aircraft Maintenance Licence Course
as a Satellite out location of AIR-TECH BUILDING GERMANY.
Approved reference DE 147.0014 GERMANY
EASA 147 Approved Training Institute

முதல்முறையாக தென் இந்திய மாணவர்கள் விமான பொறியியல் பாடநெறியை கற்க இலங்கையில்!

குறிப்பிட்ட அளவு ஆசனங்களே உள்ளன!

முதல் வருபவர்களுக்கு முதல் சேவை அடிப்படையில்

தற்போது அனுமதிக்கப்படுகிறார்கள்!

LANKA PACIFIC AVIATION ACADEMY

எமது முதல் தொகுதி மாணவர்கள் ஜேர்மனி செல்ல தயார் நிலையில் !

அனுமதி பெறும் அலுவலகம்:
35/1, Angulana Station Road, Rathmalana. (Close Soysapura)
தொலைபேசி. 0777 273844, 0777 709049, 0112638617

LANKA PACIFIC AVITAION ACADEMY

Apply online -www.lpaavi.com

FLEX Graphic

கனவை நனவாக்க.....



# கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 35 செவ் 4 இல்<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்: அரச தொழில்<br>தொ.இ: B/1948 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 62 1/2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/2832 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 24 செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc/ அபி விருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/1952 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 16 1/4 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.COM<br>தொ.இ: G/2834 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 41 1/2 செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் A/L(UK Not PR)<br>தொ.இ: B/1954 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 41<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/2835 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 24<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: B.COM,MBA/ (UK Not PR)<br>தொ.இ: B/1957 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 26<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/2839 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல: 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



# மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்







வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியில் (யாழ். நகர் மேற்கு) கடமைபுரியும் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்கள் தங்கள் கடமையினை மேலும் அதிக வினைத்திறமையுடன் மேற்கொள்வதற்கு ஏதுவாக மோட்டார் சைக்கிளை வழங்கிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் இதற்காக அரும்பாடுபட்ட மேதகு ஜனாதிபதி அவர்களை யாழ். நகருக்கு அழைத்து வந்த ஏழைகளின் ஒளி விளக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் மனமுவந்து எமக்கு அதனை பெற்றுத்தந்த எமது மதிப்பிற்குரிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களுக்கும் எமது தயவு கூர்ந்த நன்றிகளைத் தெரிவித்து மகிழ்ச்சியடைகிறோம்.


வார்த்தைகளும் எம் வசம் இல்லை உங்களை வாயினால் வாழ்த்துவதற்கு. பூக்களும் எம் வசம் இல்லை உங்களை பூக்கொண்டு பூசிப்பதற்கு

வாழ்வின் எழுச்சி முகாமையாளரும் உத்தியோகத்தர்களும்
(யாழ். நகர் மேற்கு சமுர்த்தி வங்கி, யாழ்ப்பாணம்.)

(8105)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சிறுவர் தின நிகழ்வாக யாழ்.மானிப்பாய் பிறைற் விளையாட்டுக் கழகம் அண்மையில் நடத்திய விளையாட்டுப் போட்டிகளின் நிகழ்வுகளை படங்களில் காணலாம்.





கைதடி வடக்கு யூப்பிற்றர் கல்வி நிறுவனத்தின் ஆசிரியர்தின விழா அண்மையில் நடைபெற்ற போது. (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)




கொட்டடி கிராம அபிவிருத்தி சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய சர்வதேச சிறுவர் , முதியோர் தின விழா அண்மையில் நடைபெற்றபோது...

இருபாலை மதுரம் கிட்ஸ் பாக் முன்பள்ளி ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்ற போது மாணவர்களால் கௌரவிக்கப்பட்ட ஆசிரியர்களையும் மாணவர்களையும் படத்தில் காணலாம். (படம்:-நல்லூர் செய்தியாளர்)





## நிகழ்வின் நிழல்கள்






நல்லூர் றோட்டறிக் கழகமும் காலி றோட்டறிக்கழகமும் இணைந்து கோப்பாய் மகா வித்தியாலய மாணவர்களுக்கு சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை அண்மையில் வழங்கியுள்ளன. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் காலி றோட்டறிக்கழகத்தலைவர் கீர்த்தி டயஸ் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

கொக்குவில் வீனஸ் கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்ற போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும்,பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ந.உமாதரந் மாணவி ஒருவரைக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## அச்சுறுத்தும் விபத்து

விபத்தின் பிடியிலே
தெருவோரங்களிலே
பாதகம் பலவற்றின் நர்த்தனங்கள்
திடுக்கிடும் மோதல்கள்
திசை திருப்பிடும் உன் வாழ்வை
வாகனம் என்ற வடிவினிலே
யமன் உலாவி வரும் தருணம் இது
இரத்தவெள்ளம் சூழ்ந்திருக்க
வீதியிலே விதியின் சாபம் அது
ஆங்கே...
பெற்றெடுத்த தாய்
வேரற்ற மரமாய்
கற்பனையில் கரம்பிடித்த மனைவி
மறுபுறமே...
பாதி அன்பை இழந்துவிட்ட
உன் பாலகன் கண்ணீருடன்
சாபம் என்று சொல்லிவிட
நீ பாவம் எதுவும் செய்யவில்லை
பாதையில் நீ பக்குவமாய்
வேகம் இன்றி சென்றிருக்கலாமே?
உன் வாழ்விற்கு முற்றுப்புள்ளி
வைத்த இவ்விபத்து
உன் குடும்ப வாழ்வின்
கண்ணீர் துளிக்கு
பிள்ளையார் சுழியா?

**செ.வினுஷா**
**பிளவத்தை**

## சொப்பனம்

தூங்கும் போது என்
தூக்கத்தில்
நிம்மதியைக் கெடுத்து
உள்ளத்தில் விரக்தியை
ஏற்படுத்தி- என்
உணர்வுகளை உறங்க வைத்து
உறக்கத்தில் திகிலை
ஏற்படுத்தி என்
இதய அறைகளை
மெல்லத்திறந்து கொண்டு
அருகில் வருகிறது
சொப்பனம்
இடிபோல் என்னுள்
வந்துபோகும் சொப்பனங்கள்
இதயத்தை ஒருமுறை
அதிரவைத்து
சீண்டிப் பார்க்கிறது
துவண்டுபோன என் மனதை
துருவித்துருவி வம்பிழுத்து
சோகக்கதைகளை
சொல்லிச் சொல்லிச்
சோகக் கடலில் மூழ்கடிக்கிறது
கண்ணீர் பெருகும் என
கண்களோடு விளையாடி
வேடிக்கை பார்க்கிறது
சொப்பனம்

**கப்பம்புலம்**
**பார்த்தீபன்**

## எதிர்பார்ப்பு

வேகமாய் வீசும் காற்று ஓரமாய்
ஆடும் ஓலை குடிசை வீடு
வீட்டுக்குள் ஒரு பெண்
பெண்ணின் மைந்தர்கள் இருவர்
மண்ணின் மைந்தர்களால்
மணணை உடைத்து பசியால் கதறினர்
இது அறியாத பெண்ணல்ல அவள்
வேலைக்குச் சென்ற கணவர்
திரும்பி வரும் வரை வேறுவழியில்லை
காத்திருப்பாள் அவன் வருகைக்காய்

**பு.பிரதீபா**
**அல்லைப்பிட்டி**

## இமயம் தொட...

நீ விதைக்கப்படாமல்
எறியப்பட்டாலும்
கவலையை விட்டுவிடு
எறியப்பட்ட இடத்திலேயே
முளைத்தெழு...
விதைக்கப்பட்டவைதான்
முளைக்கவேண்டும் எனும்
விதிமுறை இருந்திருந்தால்
உலகில்
விருட்சமே இருந்திருக்காது

மாவை. நா.கஜேந்திரன்

## ஓர் இதயம் அழுகிறது...

நட்பென்று உன்னிடத்தில்
நம்பிக்கையோடு நான் கொண்ட அன்பு
நனைகிறதடி கண்ணீர் மழையோடு
நனைகிறேன் - நானும்
நம்பிக் கெட்ட வேதனை கரையுமென
சிந்தித்திருந்தேன் பெண்ணே! என்றும்
இந்த மன சிந்தையெங்கும்
தூரமாய் ஏனடி விலகியென்னுள்
இராட்சத நினைவலைகளை தாக்கவிட்டாய்
ஜெயமே வாழ்க்கை என்றிருந்தேன்
சிரிப்பே ரசனை என்றிருந்தேன்
கரகமாக்கி விட்டாயேடி - பெண்ணே!
காத்திருப்பேன் மீண்டும் கிடைக்குமென

**செ.ஜெசிக்கா**
**பூம்புகார்**



# மௌனத்தின் தேடல்- 225

## இலட்சியக் கல்வி

கோகுல வாசலேறிய குழந்தைகளே!
தீதெண்ணம் போக்கித்
தேனமுதாய்த் தமிழால்
நல்லெண்ணம் நன்றாய் ஏறிட
நாயகனிவ னூட்டும் ஞானம்
நீர்நில மதற்குமேல் வானென
நீள் ஆய்வில்விஞ் ஞானமுயர்ந்திட
தோள் கொடுக்கும் கல்வியன்றோ
தொடருங்கள் துயரகன்று- இந்
நாடும் நலமுற

*வீ. வினிஸ்*
*பண்டத்தரிப்பு*

## எம் ஆசான்கள்

அன்பின் சிகரங்கள்
அறிவின் இராஜகிரீடங்கள்
சித்திக்கு வழிகாட்டும் முத்துக்கள்
நித்தமும் எமக்காய் வாழும்
தியாகத்தின் தீபங்கள்
கல்லூரி கடவுளர்கள்
எம் ஆசான்கள்

*பி.வேதிகா*
*வ/ கனகராயன்குளம் ம.வி.*

## உறுதி

எமது உறவுகளையும்
உடைமைகளையும் அளித்து
எம்மை ஏதிலியாக்கியதுபோல்
எமது கல்விக்கூடத்தை
அடுத்து நம் கற்றலுக்கு
ஊறுவிளைவித்தது போல்
எமது கல்வி கற்கும்
இலக்கையும் உணர்வுகளையும்
ஒருபோதும் உன்னால்
அளிக்க முடியாது

*சி.தயாளன்*
*தெல்லிப்பழை*

## நல்லாசான்கள்

தரையிலிருந்தாலென்ன
மரக்கதிரையிலிருந்தாலென்ன
இருக்கை பெரிதல்லக் கருத்தூன்றிக்
கல்வியைக் கற்பதுதான் சிறப்பு
விண்ணில் ஒளிரும் மதிபோல்
இம்மாணவர் முகங்களிலும்
அறிவொளி வீசுவது நல்
ஆசான்களின் அர்ப்பணிப்புடனான
கற்பித்தற் செயற்பாடே

*இ.ஆராதனா*
*சாவகச்சேரி*

## வழிகாட்டிய ஆசான்

அகரத்தின் அடையாளம்
அறிமுகம் ஆனதும்
சிகரங்கள் தொடும் வழி
கல்வியே என்பதும்
கண்ணைக் கவர்வன
கரைந்துவிடும் என்றும்
காலம் பொன்னானது- அது
கடந்துவிடும் முன்பே
உணர்ந்து விடு என்றும்
நல்வழிகாட்டிய ஆசானுக்கு நன்றி

*பருத்தியூர்*
*வி.கோபிதாஸ்*

## வாழ்வுக்கு கல்வி

பள்ளிக் கல்வியில்
இளமையில் ஆர்வம்
வாழ்க்கை கல்வியில்
வாலிபம் தடுமாறுதே
வழிநடத்துவோர் வழி தவறின்
மேன்மைதரும் கல்வி
எப்பயனளிக்கும்

*ம.திருவரசுராசா*
*வவுனியா*

## நம்பிக்கை அழியாதே

குரு அருள் இருந்தால்
கூரையேது கூடமேது
விருப்பமுடன் மனமிருந்தால்
வீடேது! வெளியேது!!
தெருவிளக்கில் கற்றவன்
தேசத்து ஜனாதிபதி
ஆகவில்லையா!
வரும் துன்பம் யாவையும்
விரட்டுவோம்
வாழ்ந்து காட்டுவோம்
நாளைய தலைவராவோம்

*பொ.புனிதன்*
*வரியபுலம்*

## எம் இனிய ஆசானே

ஏதும் அறியாத
வயதினிலே- எம்மை
ஏடுபிடிக்க வைத்து -நல்
அறிவினை எமக்கு தந்தவரே
பாரிலே பாறைகளாய்
பயனற்று கிடந்த எம்மை
பயனுள்ள சிலைகளென
பக்குவமாய்ச் செதுக்கி விட்ட
எம் இனிய ஆசானே
என்றென்றும் உம் சேவை
இந்த உலகிற்கு தேவை

*வி.சுகன்யா*
*கோப்பாய்*

## உன்னைத் தேடுகிறேன்

குறும்பு செய்யும் வயதினிலே
கட்டியணைத்து கல்வியெனும்
பெருங்கடலை கடக்கவைத்த
என்குருவே இன்றும் என்
முதுமைப்பருவத்திலே தேடுகிறேன்
நீயிருந்தால் எனது நித்திய
மனம் உனை வந்து சேரும்


*செ.பத்மராணி, பருத்தித்துறை*

## மாணவர்களே

சற்றும் சோர்வடையாமல்
நிற்பதில் சிரமம் பாராமல்
கற்பித்த ஆசானின்
சொற்கேட்டு மாணவர்கள்
கற்று உயர்புள்ளிகள்
பெற்று வெற்றியீட்டுதலே
மிக உயர்ந்த குருதட்சனை

*க.அபர்ணா, வட்டுக்கோட்டை*

# மௌனத்தின் தேடல் -226



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 22.10.2014 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

957




**பார்த்தா சிறுசு.. வளர்ச்சியோ பெருசு**

மடகஸ்காரில் வாழும் சிறிய பாலுட்டி இனம் டென்ரெக். இவற்றில் 5 சென்றிமீட்டர் முதல் 39 சென்றிமீட்டர் வரை பல வகைகள் உள்ளன. உருவில் சிறியதாக இருந்தாலும் இந்த விலங்கு மிகவும் வேகமாக வளரக்கூடியது. பிறந்த சிறிது நேரத்திலேயே ஓட ஆரம்பித்துவிடும். ஆறாவது நாளிலிருந்து பூச்சிகளைத் தின்னத் தொடங்கிவிடும் இதே நேரத்தில் மற்ற விலங்குகளின் குட்டிகளோ தாய்ப் பால் குடித்துக் கொண்டிருக்கும்!



# சுட்டி அட அப்படியா?





வில்கேத் கெல்லாக்

**கார்ன் ஃப்ளேக்ஸ்**

சிறுவர்களால் விரும்பி உண்ணப்படுவது கார்ன்ஃப்ளேக்ஸ். இது வில்கேத் கெல்லாக் என்பவரால் தற்செயலாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இவரது சகோதரர் ஜான் ஹார்வி கெல்லாக் புகழ் பெற்ற மருத்துவர். கெல்லாக் தனது சகோதரருக்கு உதவியாக மருத்துவமனை நோயாளிகளுக்கான உணவு தயாரிக்கும் பொறுப் பேற்று இருந்தார். ஒருநாள் ரொட்டிக்கான மாவை நீண்ட நேரம் கவனிக்காமல் விட்டு விட்டார். பிறகு வந்து பார்த்த போது அந்த மாவு மெல்லிய சீவல்களாகி இருந்தது. ஆர்வத்தினால் அதை வாணலியில் வாட்டினார். அது ஒரு மொறு மொறுப்பான சிற்றூண்டியாக ஆனது. நோயாளிகளும் ஆர்வமாக உண்டார்கள். அதனால் இதையே தொழில் துறையில் தயாரித்து வெற்றி பெற்றார்!

*(முற்றும்)*



# 10.2014 19 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1216 - இங்கிலாந்தின் ஜோன் மன்னன் இறக்க, அவனது ஒன்பது வயது மகன் மூன்றாம் ஹென்றி ஆட்சிக்கு வந்தான்.
- 1453 - பிரெஞ்சு போர்டோ நகரைக் கைப்பற்றியதுடன் நூற்றாண்டுகள் போர் முடிவுக்கு வந்தது.
- 1469 - இளவரசன் இரண்டாம் பேர்டினண்டுக்கும் காஸ்டில் நாட்டின் இளவரசி இசபெல்லாவுக்கும் திருமணம் நடைபெற்றது. இந்நிகழ்வு பின்னர் 1516 இல் ஸ்பெயின் நாடு ஒருங்கிணைக்கப்பட வழிகோலியது.
- 1655 - சுவீடனின் காரெல் பத்தாம் குஸ்டாவ் மன்னன் போலந்தின் கிராக்கோவ் நகரைப் பிடித்தான்.
- 1812 - பிரான்சின் நெப்போலியன் பொனபார்ட் மாஸ்கோவில் இருந்து பின்வாங்கினான்.
- 1813 - ஜேர்மனியின் லைப்சிக் நகரில் நெப்போலியன் பொனபார்ட் பெரும்தோல்வியடைந்தான். ரைன் கூட்டமைப்பு முடிவுக்கு வந்தது.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படையினர் கனடாவில் இருந்து வேர்மொண்ட் மாநிலத்தின் சென் அல்பான்ஸ் நகரைத் தாக்கினர்.
- 1912 - லிபியாவின் திரிப்பொலி நகரை இத்தாலியப் படைகள் ஒட்டோமான் பேரரசிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1935 - எதியோப்பியாவை இத்தாலி கைப்பற்றியதை அடுத்து நாடுகளின் கூட்டணி இத்தாலி மீது பொருளாதாரத் தடைகளை அறிவித்தது.
- 1943- காச நோய்க்கான Streptomycin என்ற நுண்ம எதிரி மருந்து றட்கஸ் பல்கலைக்கழகத்தில் பிரித்தெடுக்கப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் பிலிப்பைன்சில் தரையிறங்கின.
- 1950 - சீன இராணுவம் திபெத்தின் காம்டோ நகரைக் கைப்பற்றினர்.
- 1954 - சோ ஒயு மலையின் உச்சி முதன் முறையாக எட்டப்பட்டது.
- 1960 - ஐக்கிய அமெரிக்க நாடுகள் கம்யூனிசக் கியூபா மீது பொருளாதார தடைகளை விதித்தது.
- 1974 - நியுயே நியூசிலாந்திடமிருந்து விடுதலைப் பெற்று சுயாட்சி மண்டலமாகியது.
- 1976 - சிம்பன்சி உலகின் அருகி வரும் மிருக இனமாக அறிவிக்கப்பட்டது.
- 2003 - திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் அன்னை தெரேசாவை முத்திப்பேறு பெற்றவராக அறிவித்தார்.
- 2005 - மானிடத்துக்கு எதிரான குற்றங்களுக்காக சதாம் உசேனுக்கு எதிரான வழக்குத் தொடங்கியது.
- 2009 - தமிழ்நாதம், புதினம் ஆகிய ஈழச்சார்பு இணையத்தளங்கள் நிறுத்தப்பட்டன.

**பிறப்புகள்**

- 1910 - சுப்பிரமணியன் சந்திரசேகர், நோபல் விருது பெற்ற இந்திய இயற்பியலாளர் (இ. 1995)
- 1976 - கோசன். தென் கொரிய விண்வெளி வீரர்
- 1946 - ரா.தாமரைக்கனி, தமிழக அரசியல்வாதி (இ. 2005)

**இறப்புகள**

- 1937 - எர்ணஸ்ட் ரதர்ஃபோர்டு, நியூசிலாந்து இயற்பியல் அறிஞர் (பி. 1871)
- 2000 - நிமலராஜன், பிபிசியின் யாழ்ப்பாண நிருபர்
- 2006 - ஸ்ரீவித்யா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி 1953)

## அன்புச் சுட்டிகளே!

உங்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவங்களை,
நீங்களும் சிறுவர் பக்கத்தில் - சுட்டி மனசு- பகுதியில் பதிவு
செய்துகொள்ளலாம்.

## நீங்கள் செய்ய வேண்டியது....

உங்களால் மறக்க முடியாத சம்பவத்தைத் தெளிவாக
எழுதி, முழுப்பெயர், கல்வி கற்கும் பாடசாலை, தரம்,
உங்கள் புகைப்படம், உங்கள் வீட்டு முகவரி,
உங்கள் வீட்டு தொலைபேசி இலக்கம் என்பவற்றை,



ஆசிரியர்,சிறுவர் பக்கம்
வலம்புரி,
இல 03, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்





...நோய் வருவதும், உடல் தளர்ந்து போவதும் இயற்கைதான். அதற்கு ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம் என்று கூறினார் சச்சின் கடுகடுப்புடன். ஒரு கட்டத்தில் முதுகுவலி குணம் ஆகும்வரை யாரையும் சந்திக்கக்கூடாது என்றுகூட முடிவெடுத்தார்.

வாலு பேர்ச்சு கத்தி வந்தது என்ற பழமொழிக்கு ஏற்ப முதுகுவலி கொஞ்சம் குறைந்தது என்று சச்சின் மகிழ்ந்த வேளையில் வேறு ஒரு ரூபத்தில் வேறு ஒரு வலி அவருடன் சரசமாட கதவைத் தட்டிக் கொண்டிருந்தது. அதைப் பிறிதொரு அத்தியாயத்தில்; பார்ப்போம்.

சச்சின் முதுகுவலியில் இருந்து ஓரளவு குணம் பெற்று டெஸ்ட் போட்டிகளில் ஆடத் தகுதி பெற்றார் என்ற செய்தி இந்திய ரசிகர்கள் வயிற்றில் பாலை வார்த்தது. நான் கேப்டனாக இருக்க வேண்டும் என்றால் எனது அணியில் விளையாடுவோரைத் தேர்வு செய்யும் உரிமை எனக்கு வேண்டும். மற்றும் ஒருநாள் போட்டிகளில் நான் தான் முதலில் பேட்டிங் செய்வேன் என்ற நிபந்தனைகளை வாரியம் ஏற்றுக் கொள்ள இரண்டாவது முறை சச்சின் கேப்டனாக முடிசூடப்பட்ட அக்டோபர் 1999 ஆம் ஆண்டு நியூசிலாந்து அணி இந்தியா வந்தது. வாரியம் தனது நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்ட சந்தோஷம் தவிர வேறு சந்தோஷமும் சச்சினுடன் சேர்ந்துகொண்டது. அணியின் பயிற்சியாளராக இருந்த அன்ஷுமன் கெய்க்வாட் விலகிக் கொள்ள புதிய பயிற்சியாளராக கபில்தேவ் பொறுப்பு ஏற்றுக்கொண்டார்.

சற்று ஏறக் குறைய இருபது ஆண்டுகளுக்கு முந்தைய ஃப்ளாஷ்பேக் அப்போதைய இளைஞர்களுக்கு ஆதர்ஷ நாயகனாக

## சிரித்துக்கொண்டே அழுதார்!




வாலு போச்சு கத்தி வந்தது என்ற பழமொழிக்கு ஏற்ப முதுகுவலிகொஞ்சம் குறைந்தது என்று சச்சின் மகிழந்த வேளையில் வேறு ஒரு ரூபத்தில் வேறு ஒரு வலி அவருடன் சரசமாட கதவைத் தட்டிக்கொண்டிருந்தது.

விளங்கியவர் கபில்தேவ். இன்றைக்கு சச்சினுக்கு உள்ள கிரேஸ் அன்றைக்கு கபில்தேவிற்கு இருந்தது. பேட்டிங், பௌலிங், ஃபீல்டிங் என ஆல்ரவுண்டராகத் திகழ்ந்த கபிலுக்கு ரசிகர் பட்டாளம் அதிகம். ஆட்டம் பார்க்கும் ரசிகனுக்கே இப்படி என்றால் ஆட்டம் ஆடும் சச்சினுக்கு மட்டும் ரசனை இருக்காதா என்ன? சச்சின் ரசித்த இரு இந்திய கிரிக்கெட் வீரர்கள் கவாஸ்கர் மற்றும் கபில்தேவ். ஆனால், சச்சின் 1999 இல் கிரிக்கெட் விளையாட வந்தபோது கவாஸ்கர் போட்டிகளில் இருந்து தான் ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார். எனவே, சச்சினுக்கு தனது கனவு நாயகனாக கவாஸ்கருடன் இணைந்து கிரிக்கெட் விளையாடும் வாய்ப்பே கிடைக்கவில்லை. ஆனால், மற்றொரு நாயகனாக கபில்தேவுடன் சேர்ந்து ஆடும் வாய்ப்புகள் கிடைத்தன. இருவரும் குரு- சிஷ்யன் போன்ற கிரிக்கெட் உலகில் சில காலம் வலம் வந்தனர்.

குறிப்பாக பூஸ்ட் விளம்பரத்தில் பூஸ்ட் இஸ் த சீக்ரெட் ஓஃப் மை எனர்ஜி என்று சச்சின் சொல்ல அவருக்குப் பின்னால் வரும் கபில்தேவ் சச்சின் தோள் மீது கைபோட்டவாறே பூஸ்ட் இஸ் த சீக்ரெட் ஓஃப் அவர் எனர்ஜி என்று குதூகலிக்க அந்த வாக்கியங்களை அன்றைய காலகட்டத்தில் உச்சரிக்காத குழந்தைகளே இல்லை என்று சொல்லலாம். இன்னும் சொல்லப்போனால் குழந்தைகள் மத்தியில் பூஸ்ட் அதிகம் பாப்புலராக கபில்தேவ் மற்றும் சச்சின் இருவரும் காரணம் என்று சொன்னால்கூட தவறில்லை. எனவே, இருவருக்கும் இடையேயான ஏற்கனவே பழக்கம் இருந்தது என்பதால் வேறுபாடுகள் இல்லாமல் ஒருமித்த கருத்து நிலவும் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. கபில்தேவ் தன்னுடைய அனுபவம் அனைத்தையும் அணிக்கு வழங்கி சர்வதேச உலகில் இந்தியக் கிரிக்கெட்டின் கொடியை உயரப் பறக்கச் செய்வார் என்பதே அனைவரின் சிந்தனையாக இருந்தது.

(தொடரும்)

கே. ரமேஷ்

# ஆத்ம ஞானத்தைத் தேடி

...நீங்கள் அவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவர்களை மகிழ்ச்சியடையச் செய்கிறீர்கள் என்பதும் உண்மைதான். ஆனால் நான் சொல்வது என்னவென்றால் அதுவும் கட்டுப்பாடுகளுடனும் பாரபட்சங்களுடனும்தான் வருகிறது. அது குழந்தைகளின் போக்கைப்

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

பொறுத்தது.

**ஒரு சின்னக் கதை....**

ஒருவன் கான்கிரீட் சாலை அமைத்துக்கொண்டு இருந்தான். அவன் முடித்துக்கொண்டிருந்த சமயத்தில் அருகாமையிலிருந்து சில சிறுவர்கள் சாலையில் ஓடி வந்து அவர்களது காலடித் தடத்தைப்பதித்துவிட்டுச் சென்றனர். அவன் மிகவும் கோபமடைந்து அவர்களைத் திட்டினான். அவனது நண்பன் கேட்டான், ஹேய், என்ன விடயம்? நான் உனக்குக் குழந்தைகளைப் பிடிக்கும் என்றல்லவா நினைத்தேன்? அவன் பதில் சொன்னான், ஆம் எனக்குப் பிடிக்கும். ஆனால், கான்கிரீட் மீது அல்ல.

(சிரிப்பு)

சாதாரண அன்பு எப்பொழுதும் எங்காவது சில நிபந்தனைகளுடன் வரும்; எங்காவது சில சுய ஆதாயங்களுடன் வரும்; எங்காவது சில என்னவென்றே தெரியாத பொடி எழுத்துக்களுடன் வரும். இதைத்தான் நான் சொல்ல முயற்சிக்கிறேன். நாம் மக்களைப் பெயர் இடம், மனோபாவம், சூழ்நிலைகள் முதலிய நிபந்தனைகளுக்குட்பட்டு நேசிக்கிறோம். அது அந்த அளவு நிபந்தனைகளுடன் கூடியது.



ஆனால், ஒரு குருவின் அன்போ தூய்மையானது; உண்மையானது. அது எந்த ஒரு கேள்வியும் கேட்காமலேயே பொழிகிறது. அதற்குப் பெயர், இடம், மனோபவம், சூழ்நிலை ஆகிய எதுவும் தெரியாது. குருவிடமிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் தூய அன்பிலிருந்து உங்களுடைய சொந்த வளர்ச்சிக்காகவே வருகிறது. குருவின் ஒவ்வொரு செயலும் அன்பினால் நிரப்பப்பட்டிருக்கிறது. குருவின் ஒரே ஒரு இயற்கையான உணர்ச்சி அன்பு மாத்திரமே. அவருடைய மற்ற உணர்ச்சிகள், உங்களுக்குத் தெரிந்த மொழியில் புரிய வைப்பதற்கான நடிப்பு மாத்திரமே.

நான் கருணையுடன் இருந்தால் உங்களை ஏமாற்றுகிறேன், கோபமாக இருந்தால் உங்களுக்குக் கற்றுக் கொடுக்கிறேன் என்று எப்பொழுதும் சீடர்களி

**ஆன்மீகம் 49**

டம் சொல்வதுண்டு. எவ்வாறாயினும் நீங்கள் வளர்கிறீர்கள்! சில சமயங்களில் நான் கருணையை மிகவும் அன்பான வழியில் காட்டுகிறேன். அதனால் நீங்கள் என் உருமாற்றத்தை விளைவிக்கக்கூடிய விரல்களுக்கு வளைந்து கொடுக்கிறீர்கள். உருமாற்றத்திற்கு ஏதுவாகிவிடுகிறீர்கள். சில சமயங்களில் நான் கருணையை உங்கள் மீது வெறுமனே கோபப்படுதல் மூலம் காட்டுகிறேன். அதனால் நீங்கள் பலமாக குலுக்கப்பட்டு ஆழமான விழிப்புணர்வுக்குள் தள்ளப்படுகிறீர்கள். இரண்டு நிகழ்வுகளுக்கும் ஒரே காரணம் உங்களுக்கான தூய அன்புதான்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் பொறி...



**“சென்ற 05.10.2014 ஞாயிறு “கடன் பொறி” என்ற கதை வெளிவந்தது. கதையின் தொடர்ச்சியாக 12.10.2014 ஞாயிறு வெளிவந்த பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களின் நேர்காணலைத் தொடர்ந்து வாசகர்களிடமிருந்து வந்த கேள்விகளுக்கு பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்கள் பதிலளிக்கின்றார்”**

1. வணக்கம். வலம்புரி, சாந்திகம்,

நீங்கள் கடன் வாங்கியவரின் கடினங்களை பற்றி அழகாக எழுதியிருக்கின்றீர்கள். ஆனால் உண்மையில் கடன்கொடுத்துவிட்டு அவற்றை திருப்பிப் பெறமுடியாது எத்தனையோ வங்கிகள் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. அவற்றின் பிரச்சினைகள் பற்றி இங்கு ஒரு இடத்திலும் குறிப்பிடவில்லை? மக்களின் மனதில் சிறு விழிப்பு உருவாகவேண்டும் என்றெண்ணி சாந்திகம் இவ்வாறு ஒரு கட்டுரையை எழுதுவது நல்ல விடயம் தான். மக்கள் புரிந்து கொண்டால் வங்கிகளுக்கும் பெரியளவில் பிரச்சினைகள் வராது. நான் கேட்பது என்னவென்றால் அந்தப்பெண்மணி மறுபடியும் தற்கொலை செய்யமாட்டார் என்று உங்களால் கூறமுடியுமா? அவரின் பணச்சிக்கலை இனி எவ்வாறு தீர்க்க முயற்சிக்க போகின்றார்?

இராஜதுரை

ஓய்வு பெற்ற வங்கி அலுவலர், சுன்னாகம்.

இராஜதுரை அவர்களின் வினாக்கள் முக்கியமானவையும் பிரச்சினையோடு நெருங்கிய தொடர்புடையனவாகவும் உள்ளன. மூன்று வினாக்கள் கேட்டிருக்கின்றார். அதில் முதலாவது, வங்கிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்றார். உண்மையில் நாங்கள் கடன் பிரச்சினைகளால் மக்கள் எதிர்கொள்ளும் தாக்கங்களைப் பற்றிக்கூறுவதை நோக்கமாகக் கொண்டே இக்கட்டுரையை வெளியிட்டுள்ளோம். ஆனால் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களும் தாங்கள் கொடுத்த கடன்களை மீளப் பெறுவதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன என்பது உண்மைதான். சிலர் கட்டாமல் விட்டு ஒளித்தும் விடுகின்றனர். ஆனாலும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தங்களுடைய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தும் போதே குறிப்பிட்ட சில கடன்கள் திரும்பிவராது என்ற முடிவோடுதான் வழுங்கத் தொடங்குகின்றன. அத்துடன் ஏனையவர்களிடமிருந்து பெறப்படுகின்ற வட்டித்தொகையானது ஈடுசெய்யக் கூடிய விதத்திலும் திட்டமிடப்பட்டிருக்கும். மீளவராத கடனகளுக்காக சென்ற வருடவரவுகளினதும் நிலைமைகளினதும், பகுப்பாய்வுகளினதும் அடிப்படையில் எத்தனைபேர் மீளக்கட்டாமல் விடக்கூடும் என்பதன் அடிப்படையில் புள்ளி விபரங்களின்படி திறமைசாலிகள் வட்டி வீதத்தைக் கணிப்பிடுவர். நிறுவனங்கள் இலாபம் அடைவதையே நோக்கமாகக் கொண்டிருக்கும் எல்லாக் கடன்களும் வட்டிகளும் நேரத்தோடு கட்டப்படுகின்றனவா, என்பதை உறுதிப்படுத்துமாறு உத்தியோகத்தருக்கும் நிறுவனம் அழுத்தம் கொடுக்கக்கூடும். உத்தியோகத்தர்கள், அவர்களின் மேலாளர்கள்( வங்கிமுகாமையாளர்) போன்றோரின் பதவி உயர்வுகள், எத்தனை கடன்கள் மீளக்கட்டப்பட்டுள்ளன, எவ்வளவு நட்டம் ஏற்பட்டது என்பவற்றில் தங்கியுள்ளது. ஆனால் அந்த நிறுவனம் உள்ளூர் அல்லது சர்வதேச நிறுவனமாக இருந்தாலும் முற்றுமுழுதாக முழுக் கடன் திட்டமும் இலாபத்தில் நடக்கின்றதா? என்பதை உறுதிப் படுத்திக்கொள்ளும். இலாபம் இல்லைஎன்றால்அவர்கள்கடன கொடுக்கப்போவதில்லை.

சில நிறுவனங்கள் இவ்வாறான இழப்புக்களை “அறவிடமுடியாக்கடன்” என்று எழுதி விடுகின்றன அல்லது காப்புறுதி செய்து விடுகின் றன. உண்மையில் அவர் களுக்கு மக்கள் மீது அக்கறையில்லை. இலாபத்தில் மாத்திரமே கவனமுண்டு. அது என்னவெனில் முதலாளித்துவ பெரு நிதி நிறுவன முறையாகும்.

ஆக, நாங்கள் மக்களின் பாதிப்புக்களைத் தான் முக்கியப்படுத்திப்பார்க்க வேண்டியுள்ளது. அதிலும் பலர் கடன் மற்றும் வட்டிப்பிரச்சினைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தற்கொலை செய்து கொள்வது என்பது ஒன்றும் சிறிய விடயம் அல்ல.

வங்கிகள் கடன் கொடுக்கும்போது சில விதிமுறைகளைக் கையாளுகின்றன. அவற்றில் சாட்சிக்காக யாராவது பொருளாதார நிலையில் பெயர்பெற்றவராகவும், பணம் திருப்பிக்கட்டப்படும் என்பதை உறுதிப்படுத்தக் கூடியவர்களாகவும், பணத்தைக்கட்டக்கூடியவராகவும் இருக்கவேண்டும். இந்த முறையில் வங்கியோ அல்லது பொருளாதார நிறுவனமோ கடன் பெற்றவர் கடனைத்திருப்பிக் கட்டுவார். இவர்கள் கடன் பற்றி சரியான மதிப்பீடு செய்கிறார்கள். அவர்களது, முந்திய பொருளாதார நிலை (வங்கிக் கணக்குகள்), சொத்துக்கள், நிலையான தொழில், ஒழுங்கான உழைப்பு போன்றனவும் கடன் ஒரு தேவையான வருமானப் பெருக்கத்துக்கா? அல்லது ஏதாவது மேம்பாட்டிற்கா? வேறு முக்கியமான தேவைக்கா? என்பனவும் ஆராயப்படுகின்றன. சில வங்கிகளும் பாரம்பரிய நிதி நிறுவனங்களும் கடன் கொடுப்பதற்கு முன்னர் இவ்வாறான மதிப்பீடுகளைச் செய்து வந்தன. ஆனால் தற்போது அதிகமான வங்கிகள் உடனடியாகக் கடன்களைக் கொடுத்து விடுகின்றன. நிறுவன உத்தியோகத்தருக்கும் எவ்வளவு கடன்களைக் கொடுக்க முடியுமோ அவ்வளவு கடன்களை கொடுக்கும்படி அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

அத்துடன் ஏனைய சமூகத்தவர்களோடு ஒப்பிடுகையில் தமிழ் மக்கள் சற்று பொறுப்புணர்ச்சி மிக்கவர்களாவர். கலாசார விழுமியங்களுக்குள் கட்டுப்பட்ட நிலையில் ஒழுங்காகத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற உணர்வு மேலோங்கியவர்கள். அவ்வாறு திருப்பிக் கொடுக்க முடியாமல் போகும் போது தங்கள் கடமையை தவறவிட்ட உணர்விலும், நெருக்குதல்கள் ஏற்படும் போது அதற்கு முகம்கொடுக்க முடியாமலும் குழம்பிப் போகின்றனர்.

கேள்வி:-நான் கேடபது என்னவென்றால் அந்தப் பெண்மணி மறுபடியும் தற்கொலை செய்யமாட்டார் என்று உங்களால் கூறமுடியுமா?

பதில்:-குறித்த பெண் மீண்டும் தற்கொலை செய்வதற்கு சந்தர்ப்பங்கள் உள்ளன. ஒரு முறை தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட ஒருவர் சந்தர்ப்பம் கிடைக்கும் போது ம்ண்டும் முயற்சிப்பார் என்றே அனுபவங்கள் மற்றும் ஆய்வுகளின் வாயிலாக அறிகிறோம். பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்பட்ட பின்னரே அவரின் நிலையில் திருப்திகரமான மாற்றம் ஏற்படும். இருந்தாலும் தற்கொலை முயற்சி செய்த குறித்த பெண்மணிக்கு நாம் வேண்டிய ஆதரவுகளைச் செய்துள்ளோம். திரும்பவும் முயற்சி செய்யாத வகையில் உளசமூகத் தலையீடு செய்ய வேண்டியிருந்தது. அவரின் நெருக்கீட்டிலிருந்து அவரை விடுவிக்கும் பொருட்டு நம்பிக்கையூட்டுதல், பிரச்சினைகளுக்கு பல முறைகளில் தீர்வுகள் காணலாம் என்று ஆதரவாகப் பிரச்சினைகளைத் தீர்க்கும்முறைகளைக்கையாள வேண்டும். எவ்வாறெனில் கடன் கொடுத்த நிறுவனங்களோடு உரையாடி கடன மீளச செலுத்த வேண்டிய திகதிகளைத் தள்ளிப்போக வைக்கலாம். குறிப்பிட்ட இறுதித் திகதிகளில் கடனை க்கட்ட முடியாதவர்களை ஒரு குழுவாகச் சேர்த்தல். பொது மக்களில் நட்பார்வமுள்ள நீதிமன்றத்தை, இலவசமாக சட்ட உதவியளிக்கக் கூடிய சட்டத் தரணிகளோடு அணுகக்கூடிய வாய்ப்புக்களைக் கண்டறிந்து கடன் கொடுப் பதற்குரிய சட்ட நிலைமைகள் பின்பற்றப்படவில்லை என வாதிடலாம். அத்துடன் கடன் பற்றி அனைத்துத் தகவல்களும் தரப்படவில்லை, கடன் மீளக் கட்டாவிடில் ஏற்படும் விளைவுகள் பற்றி கடன் எடுத்தவர்களுக்கு விளங்கச் செய்தல். வழமையாக மேலெழுந்தவார்ரியாக செய்யப்படுகின்றது, கடன் எடுத்தவர் மீளச் செலுத்துவது எவ்வளவு இலேசானது என்று தெரியும் வகையில் கவர்ச் சிகரமாகச் செய்யப்படுகின்றது. ஒவ்வொரு மாதமும் “அவ்வளவுதானா?” என்று எண்ணும் வகையில் இருக்கும். முன்னர் கூறியது போல இவர்களும் கடன் கொடுப்பதற்கு முன்னர் சரியான மதிப்பீடு செய்வதில்லை. எனவே நீதி மன்றத்தில் வாதிடுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. தேவை களையும் சூழ்நிலைகளை யும் புரிந்து கொண்டுள்ள நீதிபதியொருவர், இம்மக்கள் கடனைத திருப்பிக் கட்டத்தேவையில்லை, அல்லது அவர்களுக்கு மீளளிப்பதற்கு நீண்ட கால அவகாசம் கொடுக்கலாம் என்றோ ஒரு தீர்ப்பளிப்பாரானால் அது அழுத்தமான முழு நிலைமைகளையும் மாற்றிவிடும்.

நிதி நிறுவனங்களையும் எங்கும் கடன் கொடுப்பதில் கவனமெடுக்கச் செய்துவிடும். குடும்பம் அல்லது சமூகம் மீளெழுவதற்கும், வருமானப் பெருக்கத்திற்கும், மேம்பாட்டிற்கும் கடன்கள் முக்கியமானவையும்தேவையுமாகும். அதன் போது மக்கள் ஈடுபடுதல், ஊக்கப்படுத்தல், நம்பிக்கை, முகவராதல், செயற்படுதல் போன்ற உணர்வுகளை மீளப் பெற்றுக் கொள்வார்கள். இந்தச் சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுப்பது உளவியல் ரீதியாக மிகமுக்கியமான தொனறாகும். ஆனால் கடன்கள் சரியான முறையில் மதிப்பீட்டுடன் பயனுள்ள தேவைக்கு கொடுக்கப்பட வேண்டும்.

பெரும்பாலும் ஓர் அனர்த்தத்திற்குப் பிறகு - சுனாமிக்குப் பிறகோ, போருக்குப் பின்னரான நிலைமையிலோ பல முகவர்கள், நிதியளிப்போர், அரச நிறுவனங்கள் போன்றவை வட்டியில்லாக் கடன்களை அபிவிருத்தி, வருமானப் பெருக்கத்துக்கு, வேறு தொழில் முயற்சிகளுக்கு என கொடுக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது. ஆனால்இப்போது அவ்வாறான நிதிகள் வருவதற்கு அரச, இராணுவக் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இந்த முதலாளித்துவ நிதி நிறுவனங்களே ஊக்கப்படுத்தப்பட்டு, உயர்த்தப்பட்டு கடைகள் போனறு அமைப்பு முறைக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக் கப்படுகின்றன. நாம் இப் போது வடக்கிலும் கிழக்கிலும் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் இந்த நிறுவன ங்களைக் காணலாம்.

இவர்களின்கடன், ஒருசாதாரண மனிதனின் உழைப்பையும், முயற்சியையும், வேலையையும், உயர் வட்டியுடனான கடனை மீளச் செலுத்தும்வெளிநாட்டுப்பணத்தையும சுரண்டி உறிஞ்சும் ஒரு வழியாகும். இது ஓர் இலாபத்தைப் பெறுவதற்கான முதலாளித்துவ முறையாகும்.

இறுக்க நிலையிலிருந்து விடுபடச்செய்யலாம். பணம் மட்டும் முழுமையான வாழ்க்கை கிடையாது! என்பதை உணர வைத்து அவரின் சுமையைக் குறைப்பதற்கு உதவி செய்யக்கூடிய நிறுவனங்களுடன் இணைத்து விடலாம். இவற்றுடன் தொடர்ச்சியான உளவளத் துணையும், கண்காணிப்பும் அவரின் தற்கொலை உணர்வைக் குறைப்பதுடன் அவரின் நம்பிக்கையான எதிர் காலத்துக்கும் வழிகாட்டும்.

## “தற்கொலை உங்கள் வலியை எடுப்பதில்லை... மற்றவர்களுக்கு வலியைக் கொடுக்கின்றது...”



கேள்வி:-அவரின் பணச்சிக்கலை இனி எவ்வாறு தீர்க்க முயற்சிக்க போகின்றார்?

பதில்:-அவர்களின் பணச்சிக்கலை தீர்ப்பதற்கு ஒரு சில வழிமுறைகள் இல்லாமலில்லை. கணவன் தொடர்ச்சியாக செய்யக் கூடிய வேலையை கிடைக்கச் செய்தல். மற்றும் மகனுக்கு நல்லதோர் வழிகாட்டலை ஏற்படுத்தி விடுதல். தற்காலிகமாக அவர்களின் இப்பிரச்சினையை தீர்க்க உதவக்கூடிய நிறுவனங்களுடன் இணைத்துவிடல் என்று சில செயற்பாடுகளை செய்துவிடலாம். இவ்வாறான கடன் பிரச்சினைகளுக்காக உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டியதில்லைஎன்றஉணர்வை ஆழ்மனதில் ஏற்படச் செய்தால் அவர்கள் தாமா கவே பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிகளைக் கண்டறிவர்.

### சாந்திகம் ஊடகக்குழு

வாசகர்களிடமிருந்து கேள்விகள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை பதில்களுடன் வலம்புரியில் பிரசுரிக்கப்படும்.


எழுதி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி

**சாந்திகம்**
**8, 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரிநல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**
**Email: psych@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2014 - 16.11.2014



## மேடம்

**அச்சுவினி, பரணி,**
**கார்த்திகை 1 ஆம் பாதம்**

**கனிவாகப்பேசி காரியங்களைச் சாதித்துக்கொள்வதில் வல்லவர்களாக விளங்கும் மேட இராசி நேயர்களே!**

**எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்!**

ஐப்பசி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே ராசிநாதன் செவ்வாய் 9 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். அஷ்டமத்துச் செவ்வாயால் சென்ற மாதத்தில் பட்ட அவதிகள் இனி மாறும். மனக்கசப்புகளும், மருத்துவச் செலவுகளும் குறையும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பல நாட்களாக நடைபெறாத சில நல்ல காரியங்கள் இப்பொழுது படிப்படியாக நடைபெறத் துவங்கும். பணிகளிலிருந்த தொய்வு அகலும்.

குருச்சந்திர யோகத்தோடு மாதம் பிறக்கிறது. எனவே கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். குழந்தைகளுக்கோ, கூடப்பிறந்தவர்களுக்கோ திருமண வாய்ப்புக்கான அறிகுறிகள் தென்படும். இடமாற்றம், வீடு மாற்றங்களில் எதிர்பார்த்த மாற்றங்கள் வருவதற்கான அறிகுறிகள் தென்படும். உச்ச புதனின் ஆதிக்கத்தால் உத்தியோகத்தில் உயர்வும், உதிரி வருமானங்களும் கிடைக்கும்.

பொதுவாக இம்மாதத்தில் 3 கிரகங்கள் உச்சம் பெற்றிருக்கின்றன. சனி, சப்தம ஸ்தானத்தில் உச்சம் பெற்று சூரியனுடன் இணைந்திருப்பதால் பிள்ளைகள் வழியில் எதிர்பாராத விரயங்கள் ஏற்படலாம். அவர்களின் போக்கில் மாறுதல்கள் ஏற்பட்டு மனக்கலக்கம் உருவாகலாம். எதையும் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு இருப்பதால் நீங்கள் கவலைப்படத் தேவையில்லை.

தன சப்தமாதிபதியான சுக்ரன் வலிமை இழந்து உச்ச புதனோடு இணைந்து நீச்ச பங்க ராஜயோகம் பெறுவதால் எதிர்பாராத சில நல்ல நிகழ்வுகளும் நடைபெறும். தேவைக்கேற்ற பணம் வந்துகொண்டேயிருக்கும். புத-சுக்ர யோகத்தால் இடம் வாங்கி மனை கட்ட வேண்டுமென்ற எண்ணம் நிறைவேறும். அரசுப் பணியில் இருப்பவர்கள் வீடு கட்டக் கடன் கேட்டு விண்ணப்பித்தும் இதுவரை வரவில்லையே என்ற கவலை மாறும்.

பொதுவாக ராசிநாதன் பலம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சியிலிருந்த குறுக்கீடுகள் அகலும். நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு. ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். சூரிய, சனி சேர்க்கை பெற்று ஒருங்கே இணைந்திருக்கும் ஸ்தலங்களுக்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வந்தால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். எடுத்த காரியங்களில் வெற்றிகிட்டும்.

**சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் சுக்ரன்!**

அக்டோபர் 20ஆம் திகதி துலாம் ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக வாழ்க்கைத் துணை வழியே இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். அவர்கள் உத்தியோகம், தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டாகும். வாகன யோகத்தோடு வளம் காண்பீர்கள். புதிய வாகனங்களை வாங்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். ஒரு சிலருக்கு கடல் பயண வாய்ப்புகள் கைகூடலாம். அதே நாளில் சனி கொஞ்சம் வலிமை இழக்கிறார். எனவே, உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிய துவங்குவீர்கள். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், நவம்பர் 2ஆம் திகதி சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் ஒரு பொற்காலமாக அமையப் போகிறது. காரணம் சூரியன், புதன், சுக்ரன் ஆகிய மூவரும் சப்தம ஸ்தானத்தில் இணைந்து கூட்டுக்கிரக யோகத்தை வழங்கப் போகிறார்கள். அதே நேரத்தில் சனி வலிமை இழந்திருப்பதால் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வங்கிகளில் வைப்புநிதி உயரும்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

நவம்பர் 13ஆம் திகதியிலிருந்து விருச்சிகத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். அதன் பார்வை தனஸ்தானத்தில் பதிவதால் குடும்ப வருமானம் உயரும். கொடுக்கல்-வாங்கல்கள ஒழுங்காகும். உறவினர்களின் ஒத்துழைப்போடு ஒரு நல்ல காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். இம்மாதம் கண்ணன் வழிபாடு கவலையைப் போக்கும்.


**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரும் நேரமிது. தாய்வழி ஆதரவும், ஆதாயமும் உண்டு. கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். நவம்பர் 2 இற்கு மேல் பொருளாதார நிலை உயரும். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

வாழ்க்கைத் துணை வழியே எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். தங்கம், வெள்ளி மற்றும் விலை உயர்ந்த மின்சாதனப் பொருட்களைத் தாராள மாக வாங்கி மகிழும் மாதமிது. கிருஷ்ணன் வழிபாடு கீர்த்தியை வழங்கும்.

### எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்! இம்மாதம் பணப்புழக்கம் அதிகரிக்கும்!

## சிவல்புரி சிங்காரம்



## இடபம்

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள்,**
**ரோகிணி, மிருகசீரிடம்**
**1,2 ஆம் பாதங்கள்!**

**கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தைக் கடைப்பிடிக்கும் இடப இராசிநேயர்களே!**

**வருமானம் திருப்தி தரும் நேரம்!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சுக்ரன் வலிமையிழந்திருக்கிறார். மாதம் தொடங்கிய மூன்று நாட்களுக்குப் பிறகு தனது சொந்த வீடான துலாத்திற்கு செல்கிறார். ராசிநாதன் 6இல் மறைவது அவ்வளவு நல்லதல்ல. என்றாலும், அது நீச்சம் பெற்ற சூரியனோடு இணைந்து நீச்ச பங்க ராஜயோகத்தை சூரியனுக்கு வழங்குகிறார்.

எனவே, அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பொன்னான வாய்ப்புகளும் வந்து சேரும். சுகாதிபதியாக சூரியன் விளங்குவதால் சுகக்கேடுகள் அகலும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். அரசுவழி ஆதரவுகள் கைகொடுக்கும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து வீட்டுப் பிரச்சினை முதல் விரும்பிய காரியங்களை எல்லாம் முடித்துக் கொடுக்க முன்வருவர்.

சகாய ஸ்தானத்தில் குருவும், சந்திரனும் இணைந்து மாதம் தொடங்குவதால் நன்மைதான். மூன்றாமிடத்திற்கு அதிபதியும், எட்டாமிடத்திற்கு அதிபதியும் ஒன்றுகூடி விபரீத ராஜ யோக அடிப்படையில் சில நல்ல பலன்களை உருவாக்கும். குறிப்பாக நீங்கள் சென்ற மாதத்தில் நடைபெறும் என்று காத்திருந்த காரியம் நடைபெறாமல் போயிருக்கலாம். அந்தக் காரியம் இப்பொழுது நடைபெற்று ஆதாயத்தையும் கொடுக்கும்.

அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. என்றாலும், 12 ஆம் இடத்திற்கு அதிபதியாக செவ்வாய் விளங்குவதால் பாதகத்திலும் ஒரு சாதகம் உங்களுக்கு வந்து சேரும். இடம், பூமியால் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கத்திலிருந்த விரிசல் அகலும். அந்நிய தேசத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரும்.

என்னயிருந்தாலும் கேதுவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் வளைந்து, வளைந்து செல்லும் பாம்புபோல கேதுவின் பார்வை இருக்கும் வரை ஏற்றமும், இறக்கமும் வந்து கொண்டேயிருக்கும். ஒருநாள் வளர்ச்சி, ஒருநாள தளர்ச்சி என்ற நிலை உருவாகும். இந்த நிலை மாறவும், நிம்மதி கிடைக்கவும் யோக பலம் பெற்ற நாளில் முறையாக சர்ப்ப சாந்திகளை அனுகூல ஸ்தலங்களில் செய்து கொள்வது நல்லது.

**சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் சுக்ரன்!**

அக்டோபர் 20 ஆம் திகதி துலாம் ராசியில் சொந்த வீட்டில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அந்நிய இனத்தாரின் ஒத்துழைப் போடு எண்ணிய காரியங்களை எளிதில் முடித் துக் கொள்வீர்கள். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடியே அமையும். அதே நாளில் சனி வலிமை இழப்ப தால் பங்குதாரர்களில் ஒருசிலர் உங்களை விட்டு விலக நேரிடலாம். இருப்பினும் சனி உச்ச த்தில் இருப்பதால் எதற்கும் கவலைப்படத் தேவை யில்லை. புதிய பங்குதாரர்கள் வந்திணைவர்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

2, 5இற்கு அதிபதியான புதன், நவம்பர் 2ஆம் திகதி 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். மறைந்த புதன் நிறைந்த தனலாபத்தைக் கொடுக்கும் என்பார்கள். எனவே செய்யும் தொழிலில் லாபம் கூடுதலாக கிடைக்கும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். புத ஆதித்ய யோகம் ஏற்படுவதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி மற்றும் கலைத்துறை சம்பந்தமாக எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். மாமன் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும்.

**விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!**

இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். ராசிநாதன் ராசியைப் பார்க்கும் பொழுது, வருவாய் அதிகரிக்கும். வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும். மின்சாதனப் பொருட்கள், மிக்ஸி, கிரைண்டர் என்று வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள்.

இம்மாதம் அஷ்டமத்தில் செவ்வாய் அடியெடுத்து வைத்திருப்பதால் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்படாமல் இருக்க அம்பிகை வழிபாட்டையும், ஆறுமுகப் பெருமான் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம் மாதம் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும் மாதமாகும். கூட்டு முயற்சிகளில் லாபம் பெருகும். கூடயிருப்பவர்கள் குணமறிந்து நடந்துகொள்வர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் உண்டு. மாதத்தின் மையப்பகுதியில் ஆரோக்கியத்திற்கென்று ஒரு தொகையைச் செலவழிக்கும் சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உதிரிவருமானங்கள் பெருகும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அங்காரக வழிபாடு தங்கு, தடைகளை அகற்றும். **(தொடரும்)**

### வருமானம் திருப்தி தரும் நேரம் உற்சாகத்தோடு பணி புரிவீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு கைகொடுக்குமா ஈழம்?

புலம்பெயர் தமிழர்கள் ஈழக் கோரிக்கையை கைவிட்டால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வது தொடர்பில் ஆலோசிப்பதற்கு தாம் தயாரென்று கிளிநொச்சியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டுமென்ற கருத்து தென்னிலங்கையில் வலுப்பெற்றுள்ள சந்தர்ப்பத்திலேயே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்தக்கருத்து வெளிவந்துள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதை மையப்படுத்தி, பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தும் யோசனை சில மாதங்களுக்கு முன்னர், எதிர்க்கட்சிகள் மத்தியில் வலுப்பெறத்தொடங்கியிருந்தது.

கோட்டே ஸ்ரீநாக விகாரையின் விகாராதிபதி வண. மாதுளுவாவே சோபித தேரர் தான், இந்த முயற்சியை முன்னெடுக்கத் தொடங்கியவர். அவரை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட பல்வேறு தலைவர்களும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கும் இலக்குடன் பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் பேசத் தொடங்கினர்.

எப்படியாவது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பதவியிலிருந்து இறக்கவேண்டுமென்ற நோக்கிலிருந்த சிலரும் எப்படியாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழித்துவிட வேண்டுமென்ற நோக்கிலிருந்த இன்னும் சிலரும் இந்தப் புள்ளியில் ஒன்றிணைந்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதுடன், புதிய ஜனாதிபதியைக்கொண்டே 06 மாதங்களுக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டுமென்ற யோசனை முன்வைக்கப்பட்டது. இதற்கு அரசாங்கத்துக்குள் இருக்கும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் கூட இருப்பதாக சொல்லப்பட்டது.

ஆனால், ஊவா மாகாணசபைத் தேர்தலில், ஐ.தே.க.வுக்கு கிடைத்த கணிசமான வாக்குகளும் அந்தக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு புதிய தெம்பை கொடுத்திருக்கின்றன. இதனால், தானே ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் என்று அவர் கங்கணம் கட்டத் தொடங்கியுள்ளார்.

ஐ.தே.க.வின் முக்கிய பிரமுகர்கள் பலரும் ரணில் விக்கிரமசிங்கவையே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது தொடர்பிலும் பேசத் தொடங்கியுள்ளனர். அவரையே பொதுவேட்பாளராக நிறுத்தலாமென்றும் யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. இதனால், முன்னர் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்காக பொதுவேட்பாளராக நிறுத்தப்படலாமென்று எதிர்பார்க்கப்பட்ட மாதுளுவாவே சோபித தேரர், முன்னாள பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போன்றவர்கள் தொடர்பில் இப்போது யாரும் பேசுவதைக் காணமுடியவில்லை.

ஆக, ஐ.தே.க.வுக்கு வெளியே இருந்து பொதுவேட்பாளரை தெரிவுசெய்யும் விவகாரம் இப்போது மெல்ல வலுவிழக்கத் தொடங்கியுள்ளது. ஆனால், நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்தல் என்ற பிரச்சினை இன்னமும் தீரவில்லை.

தெற்கிலுள்ள மக்களிடையே, நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கவேண்டுமென்ற கருத்து பெரும்பாலான இடதுசாரிக் கட்சிகளால் மட்டுமன்றி, ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலிய ரத்ன தேரர் உள்ளிட்டோராலும் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை, நாட்டில் ஜனநாயகத்துக்கு முக்கியமானதொரு சவாலாக மாறியுள்ளதான கருத்து தமிழ் மக்களிடத்தில் மட்டுமன்றி, சிங்கள மக்களிடத்திலும் உள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை ஒழிக்க வேண்டுமென்ற வாக்குறுதியை முன்னிறுத்தி பொதுவேட்பாளரை நிறுத்தும் முயற்சிகள் தீவிரமடைந்திருந்தபோது, அரசாங்கம் சற்று அதிகமாகவே கலக்கமடைந்திருந்தது.

அப்போது, தாமும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பில் ஆலோசிப்பதற்கு தயாராக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார். அதுமட்டுமன்றி ஆளும் கட்சிக்குள் கூட, இது பற்றி தீவிரமான ஆலோசனைகள் நடத்தப்பட்டதாகவும் கூட செய்திகள் வெளிவந்தன.

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் எதனை முன்னிறுத்தி போட்டியில் நிறுத்தப்படுகிறாரோ, அந்த அடிப்படை அம்சத்தை ஆட்டம் காணவைப்பதற்காகவே ஆளும் கட்சி அத்தகைய ஆலோசனைகளில் ஈடுபட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அதனால் தான் அவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இப்போது எதிர்க்கட்சியான ஐ.தே.க., நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதை அடிப்படையாகக் கொண்டு செயற்படவில்லை.

ஒன்றுபட்டு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை வீழ்த்துவோம் என்ற தொனியிலேயே ஐ.தே.க.வின் பிரசாரங்களும் கருத்துக்களும் வெளியாகின்றன.

எனினும், சிங்கள வாக்காளர்களிடையே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க வேண்டுமென்ற கருத்து வலுவாகக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

இத்தகைய கட்டத்திலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிளிநொச்சியில் வைத்து, புலம்பெயர் தமிழர்களும் இங்குள்ள சிலரும் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டால், அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊக்கமளிப்பதைக் கைவிட்டால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பில் தாம் ஆலோசிக்க முடியுமென்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதற்காக இந்த விடயத்தை கிளிநொச்சியில் கூறவேண்டும்? இதே கருத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெற்கிலுள்ள எங்காவது ஒரு மேடையில் கூறியிருந்தால், இந்தளவுக்கு முக்கியத்துவம் இருந்திருக்காது. இந்தளவுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களால் முக்கியத்துவப்படுத்தப்பட்டிருக்காது. கிளிநொச்சியில் தமிழ் மக்கள் மத்தியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளதாலேயே, இதன் முக்கியத்துவம் அதிகமாகியுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை ஒழிப்பதற்கும் தனி ஈழக் கோரிக்கைக்கும் முடிச்சுப்போட்டுள்ளதன் மூலம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கவோ - அதன் அதிகாரத் தித்திப்பிலிருந்து விடுபடவோ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்பவில்லை என்பதை தெளிவாக உணர முடிகிறது.

ஏனென்றால், தனி ஈழக் கோரிக்கைக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்கும் எந்தவிதமான தொடர்புமே கிடையாது. இந்த இரண்டையும் ஒன்றாக போட்டுக் குழப்பி சிங்கள மக்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் அவர் தேடிக்கொள்ள முனைந்திருக்கிறார். ஈழக் கோரிக்கையை வலுவிழக்கச் செய்வதற்காகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை உருவாக்கப்பட்டது போன்ற கருத்தை உருவாக்க முனைந்துள்ளது அவரது நிபந்தனை.

ஈழக் கோரிக்கைக்குப் பின்னதாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இலங்கையில் உருவாக்கப்பட்டது. ஆனால், அது முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமது ஆட்சியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உருவாக்கிக்கொண்டதே தவிர, ஈழக் கோரிக்கையை இல்லாதொழிப்பதற்காக அல்ல.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஈழக் கோரிக்கையை இல்லாதொழிப்பதற்காகவே உருவாக்கப்பட்டதென்று வைத்துக் கொண்டால் கூட, அந்த முயற்சி தோல்வியில் முடிந்திருக்கிறது என்றுதான் அர்த்தம். ஏனென்றால், இன்றுவரையும் ஈழக் கோரிக்கை கைவிடப்படவோ, இல்லாதொழிக்கப்படவோ இல்லை.

அதேவேளை, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டுவருவதில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை, அரசாங்கத்துக்கு கைகொடுத்தது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஏற்கெனவே பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ போன்றவர்கள் இதனை வெளிப்படையாகவே கூறியும் உள்ளனர். கோத்தபாய ராஜபக்ஷவும் முப்படைத்தளபதிகளும் தமது விருப்பப்படி போரை நடத்துவதற்கும் அதற்குத் தேவையான உதவிகள், உபகரணங்களை பெற்றுக்கொடுப்பதற்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி நிறையவே கைகொடுத்திருந்தது. அது போரில வெற்றியைப் பெறுவதற்கு மட்டுமே கைகொடுத்தது.



போரில் வெற்றி பெற்றதால் மட்டுமே ஈழக் கோரிக்கை கைவிடப்பட்டுவிட்டதாகவோ, அது செயலிழக்கச் செய்யப்பட்டுவிட்டதாகவோ அர்த்தமில்லை. இலங்கையிலுள்ள இறுக்கமான சட்ட அமைப்புகள், ஈழக் கோரிக்கையை வெளிப்படையாக முன்னெடுத்துச் செல்வதற்கு அச்சுறுத்தலாக இருப்பதால், யாரும அதனை வெளிக்காட்டிக்கொள்வதில்லை. புலம்பெயர் தமிழர்கள் அதனைக் கைவிடும் நிலையில் இல்லை.

இப்போது புலம்பெயர் தமிழர்கள் ஈழக் கோரிக்கையை கைவிட்டால்தான், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பது தொடர்பில் யோசிக்கத் தயாரென்று ஜனாதிபதி கூறியிருப்பது, ஈழக் கோரிக்கையை கைவிடச் செய்வதற்காக என்று எவரேனும் கருதினால் அது முட்டாள்தனம்.

ஏனென்றால், ஈழக் கோரிக்கையை கைவிடுமளவுக்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியொன்றும் தமிழர்களுக்கு, அதுவும் புலம்பெயர் தமிழர்களுக்கு முக்கியமான பிரச்சினை அல்ல.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை தமிழர்களுக்கு எந்தளவுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறதோ, அதேயளவுக்கு சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏனைய இனத்தவர்களுக்கும் கூடப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இந்த நிலையில்தான், ஈழக் கோரிக்கைக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்குமிடையில் முடிச்சுப் போட்டிருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இது ஈழக் கோரிக்கையை புலம்பெயர் தமிழர்கள் கைவிடச் செய்வதற்காக முன்வைக்கப்பட்ட நிபந்தனையல்ல.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை ஒழிப்பேன் என்ற தமது முன்னைய வாக்குறுதிகளை மீறி, மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை நியாயப்படுத்திக்கொள்ளும் முயற்சியாகும்.

தமிழர்களை பொறுத்தவரையில், ஈழக் கோரிக்கையை முன்வைக்க காரணமாக இருந்தது, ஆட்சியிலிருந்த அரசாங்கங்களேயாகும். தமிழர்கள் காலம்காலமாக ஏமாற்றப்பட்டதன் விளைவாகவே, ஈழக் கோரிக்கை வலுப்பெற்றது. ஏனென்றால், சுதந்திரத்தின்போதோ, அதற்குப் பின்னரோ தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்திருக்கவில்லை. ஆனால், அரசாங்கங்களின் போக்கினாலும் தமிழர்கள் ஒதுக்கப்பட்டதாலும்தான், தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கவேண்டிய கட்டாய நிலை உருவாக்கப்பட்டது. இப்போதும் கூட, தனிநாட்டுக் கோரிக்கை உள்நாட்டில் வலுவிழந்துவிட்டதாகக் கொள்ளமுடியாது.

ஒரே நாட்டுக்குள் கௌரவமான அரசியல் தீர்வொன்றை காணத் தயாரென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறினாலும், அதற்கும கூட அரசாங்கம் உடன்படத் தயாராக இல்லை.

இதுபோன்ற நிலையில், இயல்பாகவே தனிநாட்டுக் கோரிக்கை வலுப்பெற்றுவிடும். எங்கெங்கு தமது நியாயமான கோரிக்கைகள் கருத்தில் கொள்ளப்படவில்லையோ, அங்கெல்லாம் அதற்கு எதிர்மாறான விளைவுகளே தோற்றம் பெறும். தமிழர்களின் நியாயமான கோரிக்கைகள், அபிலாஷைகள் மறுக்கப்பட்டு, அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படாத நிலை தொடரும்வரை, ஈழக் கோரிக்கையை எவராலுமே இல்லாதொழிக்க முடியாது. அதுவரை அது எங்கோ ஒரு மூலையில் தெரிந்தோ, தெரியாமலோ உயிர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கும். இது அரசாங்கத்துக்குத் தெரியாத ஓர் இரகசியமல்ல.

போர் முடிந்தவுடன் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அளித்திருந்த பேட்டியொன்றில், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன், அவரது ஈழக் கோரிக்கையும் புதைக்கப்பட்டுவிட்டதாக கூறியிருந்தார். ஆனால், போர் முடிந்து 05 ஆண்டுகளுக்குப் பின்னரும் அரசாங்கம் அதே ஈழக் கோரிக்கையை வைத்துப் பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கிறது. ஈழக் கோரிக்கையை கைவிட்டால்தான், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பேன் என்று சிறுபிள்ளைத்தனமான நிபந்தனைகளை முன்வைக்கிறது அரசாங்கம்.

ஈழக் கோரிக்கையை செயலிழக்கச் செய்வதற்கு அதிகாரப்பகிர்வு, அரசியல் தீர்வு என்ற மிக வலுவான ஆயுதங்கள் இருக்கின்றன. அரசாங்கம் அவற்றைப் பயன்படுத்தினால், ஈழக் கோரிக்கை தானாகவே வலுவிழந்துவிடும். அதற்காக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை பணயம் வைக்க வேண்டிய தேவையெல்லாம் கிடையாது. ஆனால், மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இந்த இரண்டையுமே கைவிடத் தயாராக இல்லை.

தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து அரசியல் தீர்வு காணவும் தயாராக இல்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியைக் கைவிடவும் தயாராக இல்லை. எனவே தான், சிங்கள மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிக்கு ஈழக் கோரிக்கையை பணயம் வைத்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

சிங்கள மக்களை இதுபோன்ற பூச்சாண்டிகளினூடாக இன்னமும் தம்வசம் வைத்திருக்கலாமென்று அரசாங்கம் தவறாக எடைபோடுகிறது. அதனால்தான், இப்படியொரு நிபந்தனையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைக்கத் துணிந்திருக்கிறார்.


*-கே. சஞ்சயன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவுப் படையினரை உடன் உஷார்படுத்த வேண்டுமாம்

## பொதுபல சேனா அரசாங்கத்திடம் கோரிக்கை; மன்னார் ஆயரை கைது செய்யுமாறும் வலியுறுத்து

**இலங்கைக்கு எதிராக அடிப்படைவாத முஸ்லிம் பயங்கரவாதம் தலைதூக்கியுள்ள நிலையில் விடுதலைப் புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியமையானது நாட்டுக்குள் பயங்கரமான சூழ்நிலை உருவாகும். எனவே, அரசாங்கம் படையின்ரையும் உளவுப் பிரிவினரையும் உஷார்படுத்த வேண்டுமென வலியுறுத்தும் பொது பல சேனா இந்நிலை ஏற்பட மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப் ஆண்டகையே காரணம் எனவும் எனவே, அவரை கைது செய்ய வேண்டுமென்றும் தெரிவித்தது.**



கொழும்பில் கிருலப்பனையிலுள்ள பொதுபல சேனா அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய பொதுபல சேனா வின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மேலும் தெரிவிக்கையில்,

அல் கொய்தா முஸ்லிம் பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய இலங்கையர் மலேசியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளார்.

மறுபுறம் பாகிஸ்தான் ஊடாக முஸ்லிம் பயங்கரவாதிகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஊடுருவும் வாய்ப்புக்கள் உள்ளதாக இந்திய உளவுப் பிரிவினர் தகவல் வழங்கியுள்ளனர்.

அத்தோடு எமது நாட்டுக்கு எதிராக முஸ்லிம் அடிப்படைவாத பயங்கரவாதம் நாளுக்கு நாள் தலை தூக்கி வருகின்றது.

விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் பயங்கரவாதிகளுக்கும் தொடர்பு உள்ளது. இவ்வாறானதொரு நிலையில் ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் 8 வருடங்களுக்கு பின்னர் தற்போது தடையை நீக்கியுள்ளது.

இது புலிகள் மீண்டும் எழுச்சி பெறவும் ஆயுதங்கள் நிதி சேகரிப்பதற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும்.

ஆயுத ரீதியாக புலிகள் அழிக்கப்பட்டாலும் அரசியல் ரீதியாக, சர்வதேச ரீதியாக புலம்பெயர் புலி ஆதரவாளர்களின் நடவடிக்கைகளை தோல்வியடையச் செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

வெளிநாடுகளிலுள்ள எமது தூதுவர்களும் சிறப்புரிமைகளை அனுபவிக்கின்றனரே தவிர இவ்வாறான செயற்பாடுகளை தடுக்க முனைவதில்லை.

வெளிவிவகார அமைச்சு தனது கடமைகளை செய்வதில்லை.

இவையனைத்தும் புலிகளின் தடையை நீக்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு சாதகமாக அமைந்தது.

எனவே அரசாங்கம் இனியும் அசமந்தப் போக்கை கைவிட்டு வெளிநாட்டுத் தூதுவர்களை இயக்க வேண்டும். வெளிவிவகார அமைச்சை செயற்பட வைக்க வேண்டும்.

ஏனென்றால் நாடு மீண்டும் இன்று பயங்கரவாத அச்சுறுத்தலுக்கும் ஆபத்துக்கும் உள்ளாகியுள்ளது.

எனவே முப்படையினரையும் உளவுப் பிரிவினரையும் உஷார் நிலையில் வைக்க வேண்டும்.

### ராயப்பு ஜோசப்

ராயப்பு ஜோசப் தலைமையில் சில ஆயர்கள் ஐ.நா. வுக்கும் வெளிநாடுகளுக்கும் இங்கு இராணுவம் தமிழர்களை கொலை செய்ததாக கடிதம் எழுதினார்கள்.

புலிகளின் தடை நீக்க துணை போனவர் ராயப்பு ஜோசப்.

ஆனால், அரசாங்கம் அவருக்கு பயந்து போயுள்ளது, அதுதான் ஏன் என்று தெரியவில்லை.

சர்வதேசத்திற்கு எதிராக விரலை நீட்டுவதற்கு முன்பதாக உள்ளூரில் உள்ள விஷப் பாம்புகளை அடையாளம் காண வேண்டும்.

நாட்டுக்கு எதிராக செயற்படும் ராயப்பு ஜோசப்பை உடனடியாக கைது செய்ய வேண்டும்.

நாங்கள் கத்தோலிக்கர்களுக்கு எதிரானவர்கள் அல்லர். யுத்த காலத்தில் நாட்டுக்கு பல கத்தோலிக்க இளைஞர்கள் படையில் இணைந்து உயிர் தியாகம் செய்தனர்.

ஆனால், ராயப்பு ஜோசப் போன்ற சிறு குழுக்கள்தான் நாட்டுக்கு எதிராக செயற்படுகின்றன என்றும் ஞானசார தேரர் மேலும் தெரிவித்தார். (இ)

# மஹிந்த பாலசூரியவின் புதிய நியமனத்துக்கு சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்பு வெளியிட்டது

சட்டம், ஒழுங்கு அமைச்சின் செயலாளராக மஹிந்த பாலசூரியவை நியமிக்கும் அரசாங்கத்தின் தீர்மானம் குறித்து சட்டத்தரணிகள் சங்கம் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய, தனது பதவிக் காலத்தில் கட்டுநாயக்கவில் இடம்பெற்ற வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றை முடிவுக்குக் கொண்டு வர துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டிருந்தார். இதில் றொஷேன் ஷானக்க என்ற இளைஞர் உயிரிழந்தார்.

இதனைத் தொடர்ந்து நாடு முழுவதும் எழுந்த எதிர்ப்பலையை அடுத்து பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து பாலசூரிய இராஜினாமா செய்தார். பின்னர் பிரேசில் நாட்டுக்கும், அதன் பின் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் தூதுவராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் பொலிஸாரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்ட சட்டம், ஒழுங்கு அமைச்சின் செயலாளர் பதவிக்கு பாலசூரிய தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு சட்டத்தரணிகளின் தாய்ச் சங்கம் கடும் எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளது. உயிர்ப் பலியொன்று க்கு பொறுப்பேற்று பதவி விலகிய ஒருவரை மீண்டும் அதே துறையின் உயர் பதவிக்கு நியமிப்பது தார்மீகமற்ற செயல் என்று சட்டத்தரணிகளின் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடுகள் மூலம் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் அரசாங்கம் செயற்படுவதாகவும் சட்டத்தரணிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

அதற்கு உதவும் வகையிலேயே பாலசூரியவின் புதிய நியமனம் மேற்கொள்ளப்படுவதாகவும் சட்டத்தரணிகள் சங்கம் தொடர்ந்தும் குற்றம் சாட்டியுள்ளது. (இ)

# இந்திய அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க உத்தரவிடவேண்டும்

(சென்னை)

விடுதலைப்புலிகள் மீதான தடையை இந்திய அரசு நீக்க வேண்டும் என்று தொல்.திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

ஐரோப்பிய ஒன்றியத்தின் நீதிபதிகள் விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதான தடையை நீக்கி, சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளனர். 2006 ஆம் ஆண்டு முதல் விடுதலைப் புலிகளின் மீது விதித்திருந்த தடையைத் தற்போது விலக்கிக் கொண்டிருக்கிற ஐரோப்பிய ஒன்றியத்தின் நீதிமன்றம், இந்திய அரசின் நடவடிக்கைகளையும் விமர்சித்துள்ளது.

இந்திய அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரான அவதூறுகளைப் பரப்பி சர்வதேச நாடுகளை நம்ப வைத்துள்ளது. அதனடிப்படையில், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் விடுதலைப்புலிகள் மீது தடைவிதித்திருந்தது. தற்போது, சட்டபூர்வமாக விசாரணை நடத்தியதில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நீதிபதிகள் அக்கருத்தை மாற்றிக்கொண்டு,



புலிகள் மீதான தடையை விலக்கிக் கொண்டுள்ளனர்.

இந்திய அரசும் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டுமென்றும் புலிகளின் மீதான தடையை விலக்கிக் கொள்ள வேண்டுமென்றும் விடுதலைச் சிறுத்தைகள் வேண்டுகோள் விடுக்கிறது.

அத்துடன், விடுதலைப் புலிகள் இயக்கம் பொதுமக்களின் பேராதரவு பெற்ற ஒரு தேசிய இன விடுதலைப் போராட்ட இயக்கம் எனவும் இந்திய அரசு அங்கீகரிக்க ஏற்க வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் கேட்டுக் கொள்கிறது. (இ)

# வாரம் ஒரு தகவல்

## எது விரதம்?

துறவியானவர் கடுமையான விரதங்களை மேற்கொண்டு வருபவர். அவர் சூரிய உதயத்தின் பின்னர் உணவு உண்பதையோ தண்ணீர் பருகுவதையோ செய்ய மாட்டார். அவரது நெறிதவறாத தன்மையை போற்றும் வகையில் அண்ட வெளியில் பகல் வேளையில் ஒரு விண்மீன் தோன்றியது.

இவ்வாறான சிறப்புக்கள் பொருந்திய அந்தத் துறவி ஒருநாள் அருகிலிருந்த ஒரு மலையின் உச்சிக்கு செல்ல வேண்டியிருந்தது. அந்தத் துறவியுடன் அவ்வூரில் வசிக்கும் சிறுமி தானும் வருவதாக அடம்பிடித்துக் கொண்டிருந்தாள்.

"சரி வா...." என அழைத்துக் கொண்டு இருவரும் பயணத்தை தொடங்கினார்கள்.

சிறிது தூரம் சென்றதும் வெயில் அதிகமாக இருந்ததனால் தாகம் எடுத்தது.

தண்ணீர் கேட்ட சிறுமிக்கு துறவி தண்ணீர் கொடுத்து பருகுமாறு கூறினார். நீங்கள் தண்ணீர் குடித்தால் தான் தானும் குடிப்பதாக சிறுமி கூறினாள்.

"அம்மா நான் விரதத்தில் இருக்கின்றேன். சூரிய உதயத்தின் பின் எதுவும் உட்கொள்வதில்லை எனத் துறவி கூறினார்.

அவற்றைப் பற்றிய சிந்தனையே இல்லாத சிறுமி துறவியிடம் நீங்கள் தண்ணீர் குடித்தேயாக வேண்டும் என அடம்பிடித்தாள்.

துறவிக்கு குழப்பம் ஏற்பட்டது.

ஒரு புறம் தம்முடைய விரதம். மறுபுறம் சிறுமியின் தாகம்... எதைப் பார்ப்பது என்றே அவருக்கு புரியவில்லை. சிறிது யோசனை செய்த பின்னர் துறவி தண்ணீரை எடுத்துப் பருகினார். சிறுமியும் தண்ணீரைப் பருகித் தாகத்தைத் தீர்த்தார்.

ஆனால் துறவியோ தலைகுனிந்த படியே ஆகாயத்தைப் பார்க்க துணிவில்லாமல் நடந்து சென்றார்.

"விரதத்தை விட்டு விட்டோமே.... எனவே வானில் காணப்பட்ட அந்த விண்மீனும் மறைந்து போயிருக்கும்" என நினைத்துக் கொண்டிருந்த துறவி, மலை உச்சிக்கு சென்றபின் தற்செயலாக ஒருமுறை தலை நிமிர்ந்து வானைப் பார்த்தார்.

அங்கே.:..

இரண்டு விண்மீன்க்ள் இவருக்காக ஒளி வீசிக் கொண்டிருந்தன.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு அமைச்சினது அனுமதியில்லை சிறப்பு விருந்தினர் திருப்பி அனுப்பப்பட்டார்

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் ஏற்பாட்டில் உலக உணவு தினம் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. உணவு மற்றும் விவசாய நிறுவனம் ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதியன்று உலக உணவு தினத்தைக் கொண்டாடி வருகிறது. ஐக்கிய நாடுகள் சபை நடப்பு 2014 ஆம் ஆண்டை குடும்ப விவசாயத்துக்கான சர்வதேச ஆண்டாகப் பிரகடனப் படுத்தியிருப்பதையொட்டி, உணவு மற்றும் விவசாய நிறுவனமும் இந்த ஆண்டின் உலக உணவு தினத்துக்கான கருப்பொருளாகக் குடும்ப விவசாயத்தையே தேர்வு செய்துள்ளது.

பாரிய பண்ணைகளுக்குப் பதிலாகக் குடும்ப உறுப்பினர்கள் பங்கேற்கும் சிறிய அளவிலான பண்ணைகளை ஊக்குவிப்பதே இதன் நோக்கம் ஆகும்.

குடும்ப விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலம் உலகில் நிலவி வரும் பட்டினியைக் களைவதோடு, கிராமியப் பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியும்.

அத்தோடு பாரிய பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாயச் செயன் முறைகளால் ஏற்பட்டுவரும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் இருந்து பூமியைப் பாதுகாக்கவும் முடியும்.

இவற்றை அடிப்படையாகக் கொண்ட சிறப்புரைகளும், கலை நிகழ்ச்சிகளும் விவரணப்படக் காட்சிகளும் இந்நிகழ்ச்சியின்போது இடம் பெற்றன.

வடக்கின் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்த உலக உணவு தின நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் இலங்கைக்கும் மாலைதீவுக்குமான பிரதிநிதி பேர்த் குரோஃபேர்ட் அழைக்கப் பட்டிருந்தார்.

ஆனால், வெளிநாட்டவரான இவர் வடக்குக்குள் நுழைவதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறாத காரணத்தால் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து திருப்பி அனுப்பப் பட்டார். இவருக்குப் பதிலாக உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் திட்டமிடலின் உதவிப் பிரதிநிதி கலாநிதி டி.எஸ்.பி.குருப்புஆராச்சி கலந்து கொண்டிருந்தார்.

இவர்களோடு, உலக உணவுத் திட்ட அதிகாரி இஸ்மாயில் ஓமர், உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் ஆலோசகர் ப.இராமநாதன், விவசாய ஆராய்ச்சிப் பிரிவின் வடக்குக்கான மேலதிகப் பணிப்பாளர் எஸ்.ஜே. அரசகேசரி, வடமாகாணக் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் சி.வசீகரன் ஆகியோரும் அதிக எண்ணிக்கையில் விவசாயிகளும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்நிகழ்ச்சியின்போது உலக உணவு நிறுவனத்தின் நிதி உதவியோடு விவசாயத்தில் ஈடுபடுபவர்களின் உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்தும் கண்காட்சி இடம்பெற்றதோடு கூட்டுறவு மற்றும் விவசாய அமைப்புகளுக்கு நிலக்கடலைச் செடிகளில் இருந்து நிலக்கடலையைப் பிரித்தெடுக்கும் இயந்திரங்களும், நிலக்கடலையில் இருந்து கோதுகளை உடைத்து வேறாக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ)

# அரசியல்வாதிகளுக்கு இடம்கொடாமல் மக்கள் தேவையை பூர்த்தி செய்யுங்கள்

## வடக்கு முதல்வர் சுட்டிக்காட்டு

**வடபகுதியில் இதுவரை காலமும் சூழல் வித்தியாசமாகயிருந்தது. இயக்கத்தினரின் ஆணை களை நாம் நிறைவேற்ற வேண்டியிருந்தது. இராணுவத்தினரின் ஆணைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது. அல்லது ஒருசில அரசியல்வாதிகளின் ஆணைகளையும் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டியிருந்தது. இந்த மூன்று தரப்பாருமே தமது சுயநலம் கருதியே செயற்பட்டார்கள். ஆனால் எமது வடமாகாண சபை வந்ததன் பின்னர் முறையான நிர்வாகம் நடக்க வேண்டிய ஒரு கடப்பாடு எம்மைச் சார்ந்துள்ளது. இனியும் எங்கள் அலுவலர்கள் பழைய மாதிரி நடந்து கொள்ளாமல் அரசியலுக்கு இடங் கொடுக்காமல் மக்கள் தேவைகளை முறைப்படி பூர்த்தி செய்யமுன்வரவேண்டும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

எந் நேரமும் மற்றவர்கள் ஆணையை எதிர்பாராமல் பொறுப்புள்ள ஒரு அதிகாரி என்ன நடவடிக்கையை ஒரு குறிப்பிட்ட தருணத்தில் எடுக்க வேண்டும் என்று சிந்தித்து அதன் அடிப்படையில் செயலாற்ற முன்வர வேண்டும். எமது உறுப்பினர்கள் கூட முன்னர் அவ்வாறு நடந்ததே, தற்பொழுதும் அதேபோன்று நாம் கூறுவதுபோல் நீங்கள் நடக்க வேண்டும் என்று அலுவலர்களிடம் இருந்து எதிர் பார்க்கலாம். இப்பேர்ப்பட்ட நடமாடும் சேவைகள் அப்பேர்ப் பட்ட சிந்தனைகளுக்கும் ஆற்றுப்படுத்தலுக்கும் முற்றுப புள்ளி வைக்கின்றது. எது சரி, எது முறை, எது நியாயம் என்று அறிந்து சட்டப்படி செயலாற்ற விழைவதே இந்த நடமாடும சேவையின் குறிக்கோள்.

வடமாகாண சபையால் நடத்தப்படும் நடமாடும் சேவை வவுனியா வடக்கு புளியங்குளம இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடமாடும் சேவை ஒன்றை நடத்தி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று பல மாதங்களாக எண்ணிக் கொணடிருந்தோம்.

ஆனால் பல காரணங்களால் இதனைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வர வேண்டிய அவசியம் எழுந்தது. நடமாடும் சேவையை இங்கு நடத்த நாம் எத்தனிக்கும் போதும் பல சிக்கல்களையும் புறக்கணிப்புக்களையும் எதிர் கொண்டே நடத்த வேண்டியுள்ளது. இன்று பிரதம செயலாளர் சமுகமளிக்கவில்லை. இதுபற்றி பல நாட்களுக்கு முன்னர் அவருக்கு தெரிவித்திருந்தாலும் அவர் கொழும்புக்குப் போய்விட்டார் என்று அறிகின்றோம். ஏன் உங்களால் நடவடிக்கை எடுக்க முடியாதா என்று கேட்பீர்கள். ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்க வேண்டியது மத்திய பொது சேவைகள் ஆணைக்குழுவே என்று புதியதொரு கருத்தை நாம் கேட்காமலே உள்ளடக்கியுள்ளார் எமது பிரதம நீதியரசர் என்று அரசாங்கத்தால் அடையாளம் காட்டப்படுபவர் அண்மைய வழக்கொன்றில்.

எனவே எந்தளவுக்கு எமது நடவடிக்கைகளில் எமது ஆளுநரும் பிரதம செயலாளரும் பங்குபற்றுவார்கள் என்பதில் கருத்து வேற்றுமைகள் உருவாகியுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# தமிழ்ப் பிரதேசத்தில் தமிழில் தேசியகீதம்

## சட்டமா அதிபர் வலியுறுத்து

தேசிய கீதம் தமிழ்ப்பகுதிகளில் தமிழில் இசைக்கப்பட வேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வைத்து சட்டமா அதிபர் பாலித பெர்ணாந்து தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றுக்குசட்டமா அதிபர்பாலித பெர்ணாந்து மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் லிவேரா மற்றும் பிரதி சொலிசிற்றர் ஜெனரல் தர்மவர்தன ஆகியோர் அண்மையில் விஜயம் மேற் கொண்டிருந்தனர்.

இதன்போது முல்லை. மாவட்ட நீதிபதி மாணிக்க வாசகர் கணேசராஜா, சட்டத்தரணிகள், சங்க பிராந்திய உபதலைவர் அன்ரன் புனிதநாயகம், சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் கங்காதரன், பரஞ்சோதி மற்றும்சட்ட உதவிஆணைக்குழு சட்டத்தரணிகளும்வரவேற்றனர்.

இதனையடுத்து அங்கு நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றியசட்டமா அதிபர், தனக்கு தமிழ் தெரியவில்லை என வருத்தமடைவதாகவும் தேசிய கீதம் தமிழ்ப்பகுதிகளில் தமிழில் இசைக்கப்படவேண்டும் எனவும் வழக்குகளை துரிதப் படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் எடுத்துரைத்தார்.

முல்லைத்தீவில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பை எண்ணி தாம் மகிழ்ச்சியடைவதாகவும், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் தமக்கு சிறப்பான வரவேற்பை அளித்திருப்பதாகவும்சட்டமா அதிபர் குறிப்பிட்டார்

மேற்படி நிகழ்வில் சட்டத்தரணிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், நீதிமன்ற பதிவாளர், உத்தியோகத்தர்கள்ஆகியோரும் கலந்து கொண்டி ருந்தனர்.

இலங்கையின் சட்டமா அதிபர், பிரதம நீதியரசர் ஆகியோர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றுக்கு விஜயம் செய்வது இதுவே முதற்தடவையாகும்.

மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவினதும், சட்டத்தரணிகள் சங்கத்தினதும் அழைப்பின் பேரிலேயே இவ்விருவரும் விஜயம் மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)





## விலகுவதாக அறிவித்தனர்

கனகபுரம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் நிர்வாகத்தினர் பதவி விலகுவதாக அறிவித்துள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி இடம் பெற்ற சிறப்புப் பொதுக் கூட்டத்தில் கனகபுரம் வாழ் மக்களுக்கான நன்மதிப்புநிகழ்வை நடத்திய பின்னர் கிராம அபிவிருத்தி சங்க நிர்வாக தெரிவிற்கான ஆண்டு பொதுக் கூட்டத்தை இம்மாத இறுதியில் நடத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

அந்த வகையில் கரைச்சி கிராம அபிவிருத்தி அலுவலகருடன் உரையாடியதற்கேற்ப எதிர்வரும் 25 ஆம் திகதி பொது கூட்டத்தை நடத்துவதாகவும் அதற்கு முன்னர் நன்மதிப்பு நிகழ்வுகளையும் கி.அ.ச மண்டபத் திறப்பு விழாவையும் நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டது.

சிறப்புப் பொதுக்கூட்டத்தில் இதற்கான செலவு மதிப்பீடு முழுமனதுடன் அவையால் அங்கீகரிக்கப்பட்டது.

இதற்கான அனுமதியை மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளர்களிடமிருந்துபெறுவதற்கான அனுமதி கோரும் கடிதம் கரைச்சி கிராம அபிவிருத்தி அலுவலரிடம் கொடுக்கப் பட்டது.

ஆனால் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமையினாலும் ஐ.நா. வாழ்வாதார அமைப்பினால் பொதுநோக்கு மண்டபம் அமைப்பதற்கான முதற்கட்ட பணம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கணக்கில் வைப்பிலிடப்பட்ட நிலையில் கடந்த 6 மாத காலமாக கரைச்சி பிரதேச செயலர் இதற்கு முட்டுக் கட்டை போடுவதாலும் தமது நிர்வாகத்தை கலைத்து முன்னைய நிர்வாகத்தை பதவிக்கு கொண்டு வர மறைமுக முயற்சிகள் நடப்பதாலும் தற்போது பதவியில் இருக்கும் நிர்வாகத்தினர் கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் பதவி விலகிக் கொள்வதாக உறுப்பினர்கள் சார்பில் கனகபுரம் கி.அ.ச செயற்குழு அறிவித்துள்ளது. (இ)

# முல்லை. மாவட்ட நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் விஜயம்





முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் பாலித பெர்ணாந்து மேலதிக சொலி சிற்றர் ஜெனரல் லிவேரா மற்றும் பிரதி சொலி சிற்றர் ஜெனரல் தர்மவர்தன ஆகியோர் அண்மையில் விஜயம்மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது பொலிஸ் அணி வகுப்பு மரியாதையுடன் மாலை அணிவித்து தமிழ் முறைப்படி மங்கள விளக்கேற்றி சட்டமா திணைக்களத்தை சேர்ந்தவர்களை மாவட்ட நீதிபதி மாணிக்க வாசகர்கணேசராஜா, சட்டத்தரணிகள் சங்க பிராந்திய உபதலைவர் அன்ரன் புனித நாயகம், சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் கங்காதரன், பரஞ்சோதி மற்றும் சட்ட உதவி ஆணைக்குழு சட்டத்தரணிகளும் வரவேற்றனர். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மறைமுக அச்சுறுத்தலை எதிர்கொள்ள முப்படையினரும்

# தயாராக இருங்கள்


பிரதமர் மோடி அறிவுறுத்து

(புதுடில்லி)

**இந்தியாவுடன் எதிரி நாடுகள் நேரடியாக முழுவீச்சில் போர் புரிவதற்கான சாத்தியங்கள் குறைவு. ஆனால் மறைமுக அச்சுறுத்தல்கள் இந்தியாவுக்கு ஏற்படலாம். எனவே அதனை எதிர்கொள்ள முப்படையினரும் தயாராக இருக்க வேண்டும் என பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்தார்.**

முப்படைகளைச் சேர்ந்த தளபதிகளை பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் முதன்முறையாக சந்தித்து, நாட்டின் பாதுகாப்பு குறித்து முக்கிய ஆலோசனை நடத்தினார்.

கூட்டத்தில் பேசிய மோடி, இந்தியாவுடன் எதிரிநாடுகள் நேரடியாக போர் தொடுப்பதற்கான வாய்ப்புகள் குறைவு என்றார்.

மறைமுக அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள தயாராக இருக்கும்படி முப்படைகளுக்கு அவர் உத்தரவிட்டார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த முதலாம் திகதியிலிருநது, இந்திய வீரர்களையும், பொதுமக்களையும் குறிவைத்து பாகிஸ்தான் வீரர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதில் 8 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இவ்வாறு எல்லையில், சீனாவும், பாகிஸ்தான் தொந்தரவு அளித்து வரும் நிலையில, பிரதமர் நரேந்திர மோடி, முதல்முறையாக முப்படையைச் சேர்ந்த தளபதிகளை நேற்றுமுன்தினம் சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சர் அருண் ஜெட்லி மற்றும் முப்படை தளபதிகள் மற்றும் 100க்கும் மேற்பட்ட தளபதிகள் பங்கேற்றனர். கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது,

இந்தியாவுடன் எதிரி நாடுகள் நேரடியாக, முழு வீச்சில் போர் புரிவதற்கான சாத்தியங்கள் குறைவு. ஆனால், மறைமுக அச்சுறுத்தல்கள் இந்தியாவுக்கு உள்ளன.

அவற்றை எதிர்கொள்ள நீங்கள் தயாராக இருக்க வேண்டும். தொழில்நுட்ப ரீதியிலான அச்சுறுத்தல்கள் நமக்கு பெரும் சவால்களை ஏற்படுத்தலாம். அச்சுறுத்தல்கள் நமக்கு தெரியும்படி இருக கும். ஆனால், எதிரி யார் என்று தெரியாமல் மறைமுகமாக இருக்கலாம். சைபர (இணைய) அச்சுறுத்தல்கள் நமக்கு சவாலாக இருக்கும்.

நிலம் கடல் வானம் ஆகியவற்றை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது போல், விண்வெளியை கட்டுப்பாட்டுக்குள வைத்திருக்கும் சூழலும் நாளை ஏற்படலாம். அதற்கும நாம தயாராக இருக்க வேணடும்.

முப்படைகளை முழுவதுமாக பலப்படுத்துவதற்கு, தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கும், தனது இலக்குகளை எட்டுவதற்கும் இந்தியாவுக்கு பாதுகாப் பான, அமைதியான சூழல்தேவைபடுகிறது. அதற்காக வெளிநாடுகளின் ஆதரவையும் பாதுகாப்பை பலப்படுத்தும் முயற்சியிலும் மத்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது.

பொருளாதாரம், இராஜதந்திரம், பாதுகாப்பு கொள்கைகளில் புதிய சிந்தனை மூலமாக, உலகில் மாற்றத்தை கொண்டுவர இந்தியா தயாராகி வருகிறது என பிரதமர் மோடி மேலும் தெரிவித்தார். (இ)



## சிறை நான் சென்றதற்கு யார் மீதும் குற்றச்சாட்டினை சுமத்த வேண்டாம்

### ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

என்னை கைது செயதமை குறித்து யார் மீதும் குற்றம் சுமத்த வேண்டாம் என்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று முன் தினம் வெளியிட்ட அறிக்கையில்,

எனது வழக்கு தொடர்பாக இன்று உச்சநீதிமன்றம் வழங்கிய உத்தரவின் விபரம் எனக்கு தெரிவிக்கப்பட்டது. என் மீதுள்ள பாசத்தின் காரணமாகவும், பற்றின் காரணமாகவும், அன்பின் காரணமாகவும், நீதிமன்ற தீர்ப்பு குறித்தோ, தீர்ப்பு வழங்கிய நீதிபதி குறித்தோ, நீதிமன்றங்களின் நடவடிககைகள் குறித்தோ யாரும் விமர்சனம் செய்ய வேண்டாம் என்றும் நீதித்துறையின் புகழுக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் எந்த செயலிலும் யாரும் ஈடுபட வேண்டாம் என்றும் யார் மீதும் எவ்வித குற்றச்சாட்டையும் சுமத்த வேண்டாம் என்றும் யாரும் குறை கூற இடமளிக்காத வகையில் அமைதி காத்து தமிழ் நாட்டில் சட்டம்-ஒழுங்கினை எப்பொழுதும் போல் செவ்வனே பராமரிக்க ஒத்துழைக்க வேண்டும் என்றும் எனது அன்பார்ந்த தமிழக மக்களையும், எனது ஆதரவாளர்களையும், என் உயிரினும் மேலான கழக உடன்பிறப்புகளையும் அன்புடன் கேட் டுக்கொள்கிறேன் என்று அந்த அறிக்கையில் தெரி வித்துள்ளார்.

மேலும் நீதிமன்றத்தில் நான் செய்துள்ள மேல் முறையீட்டில் நிச்சயம் வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என் பதை தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் அந்த அறிக்கையில் ஜெயலலிதா மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## எபோலா தாக்குதல் பற்றி பீதியடைய தேவையில்லை

### மத்திய அரசு விளக்கம்

ஆபிரிக்க நாடுகளில் தோன்றிய கொடிய வைரஸ் நோயான 'எபோலா', லைபீரியா, யாராலியோன், கினியா உள்ளிட்ட மேற்கு ஆபிரிக்க நாடுகளில் மிக வேகமாக தாக்கியதுடன், அமெரிக்கா, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளுக்கும் தற்போது பரவி யுள்ளது.

எபோலா நோய்க்கு மரணததை தவிர மருந்து இல்லை என்று கூறப்படும் நிலையில் இந்நோய்க்கு பலியானவர்களின் எண்ணிக்கை நான்காயிரத்தை கடந்துள்ளது. இநத ஆண்டில் மட்டும் சுமார் 8 ஆயிரம் பேர் எபோலாவின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இநத நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக எடுக்கப்படும் முயற்சிகளைவிட, நோயின் தாக்கம் மிக வேகமாக பரவக்கூடியது என உலக சுகாதார நிறுவனமும், ஐக்கிய நாடுகள் சபையும் எச்சரித்துள்ளன.

இந்நிலையில், எபோலாவின் தாக்குதல் பற்றி மக்கள் பீதியடைய தேவையில்லை என மத்திய அரசின் அமைசசரவை செயலாளர் அஜித் சேத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, மத்திய சுகாதர அமைச்சர் ஹர்ஷ்வர்த்தன் இது. தொடர்பாக விளக்கம் அளக்கையில், 'எபோலாவை எதிர்கொள்ள நாடு தயாராக உள்ளது. இது தொடர்பாக யாரும் வருத்தமோ, பீதியோ அடைய வேண்டாம்' என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக, நேற்று முன்தினம் டில்லியில் பேட்டியளித்த மத்திய அரசின் அமைச்சரவை செயலாளர் அஜித் சேத், உலகளாவிய அளவில பரவி வரும் எபோலாவை எதிர்கொள்வது தொடர்பாக தயார்நிலையில் இருப்பது பற்றிய உயர்மட்ட குழுவின் கூட்டம் நடத்தி விவாதிக்கப்பட்டுள்ளதாகவும், எபோலா பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு விமானம் மற்றும் கப்பலகள் மூலம வருபவர்களை தீவிரமாக பரிசோதித்த பின்னரே நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

'எபோலாவை எதிர்கொளவது எப்படி?' என்பது தொடர்பாக இன்று தொடங்கி 3 நாட்கள் வரையில் அனைத்து மாநிலங்களை சேர்ந்த மருத்துவப் பணியாளர்களுக்கு டில்லியில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், எபோலா பாதித்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பவர்கள் அணியக் கூடிய பாதுகாப்பு கவச உடைகள் அனைத்து மாநிலங் களுக்கும் அனுப்பப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (இ)

பாரதச் செய்தி

## இந்தியர்களின் வெளிநாட்டு வங்கி விபரங்களை வெளியிட முடியாது

### உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவிப்பு

வெளிநாட்டு வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் இந்தியர்களின் பெயர்களை பகிரங்கமாக வெளியிட முடியாது என்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு நேற்று முன்தினம் தாக்கல் செய்த மனுவில் தெரிவிககப்பட்டுள்ளது.

மேலும் அந்த மனுவில், 'வெளி நாடுகளுடன் இந்தியா இரட்டை வரிவிதிப்பு தடுப்பு ஒப்பந்தங்களை மேற்கொணடுள்ளது. இதுவே வெளிநாட்டு வங்கிகளில் கணக்கு வைத் துள்ள இந்தியர்களின் பெயர்களை வெளியிட முடியாததற்கு காரணம்' என்று கூறப்பட்டுள்ளது.

முன்னதாக வெளிநாட்டு வங்கிக் கணக்கு வைத்திருக்கும் இந்தியர் களின் பெயர்களை வெளியிட வேணடுமென சிரேஷ்ட சட்டத்தரணி' ராம் ஜெத்மலானி மனு தாக்கல் செய்திருந்தார்.

ஜனநாயக முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மக்கள் நலனை முதன்மையாக கொண்டு செயற்பட வேண்டும்.

கறுப்புப் பணத்தை பதுக்கு வோருக்கு ஆதரவாக செயறபடக் கூடாது. வெளிநாட்டு வங்கிகளில் கறுப்புப் பணத்தை பதுக்கி வைத்திருப்பவர்களை பாதுகாக்கவே மோடி தலைமையிலான மத்திய அரசு முயற்சிக்கிறது என்று ராம் ஜெத்மலானி குற்றம்சாட்டியுள்ளார்.

மத்திய அரசு தாக்கல் செய்துள்ள மனுவை எதிர் வரும் 28 ஆம் திகதி விசாரிப்பதாக உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

மத்திய அரசின் வரி, வருவாய் துறை உயரதி காரிகள், விரைவில் சுவிட்சர்லாந்து சென்று அங்குள்ள வங்கிகளில் கறுப்புப் பணத்தை பதுக்கி வைத்துள்ள இந்தியர்கள் குறித்த தகவல்களை சேகரிக்க இருப்பதாகவும், இதற்கு மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி ஒப்புதல் வழங்கி விட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (இ)

## ஜெயாவினை பிணையில் விடுவிக்க 6கோடி பெறுமதியான உத்தரவாதம்

(சென்னை)

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை பிணையில் வெளியே விட சுமார் 6 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் உத்தரவாதமாக அளிக்கப்பட்டுள்ளன.

ஜெயலலிதா சார்பில் பரத் மற்றும் குணஜோதி என்ற இருவரும் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று முறையே 5 கோடி ரூபா மற்றும் ஒரு கோடி ரூபா மதிப்பிலான சொத்து ஆவணங்களை பிணையம் அளித்தனர்.

அவற்றைபெற்றுக்கொண்ட நீதிபதி குன்ஹா, ஜெய லலிதா தப்பியோடிவிட்டால் இந்த சொத்துக்கள் அனைத்தும் முடக்கப்படும் என்று கூறினார். அதற்கு இருவரும் சம்மதம் அளித்ததை அடுத்து, சொத்து உத்தரவாதத்தை நீதிபதி ஏற்றுக் கொண்டார். (இ)

## தண்டனை இரத்து செய்யாதவரை ஜெயலலிதா முதல்வராக முடியாது


(சென்னை)

அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை உச்சநீதிமன்றம் நிறுத்தி தான் வைத்துள்ளது. இரத்து செய்யவில்லை. எனவே தணடனை இரத்து செய்யப்படாத வரை ஜெயலலிதாவால் மீணடும் முதல்வராக முடியாது என்று சொத்துக் குவிப்பு வழக்கில் முதலில் அரசு சட்டத்தரணியாக செயற்பட்ட ஆச்சார்யா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், ஜெயலலிதாவுக்கு தனி நீதிமன்றம் விதித்துள்ள தண்டனையை உச்ச நீதிமன்றம் நிறுத்தி மட்டுமே வைத்து உத்தரவிட்டுள்ளது. அதை இரத்து செய்யவில்லை. இது தொடர்பான பதில் மனுவை 3 மாதத்திற்குள் விசாரிக்க உத்தரவிட்டுள்ளது. கர்நாடக உயர்நீதிமன்றத்திலும், அதில் சாத்தியப்படாவிட்டால் உச்சநீதிமன்றத்திலும், இந்தத் தீர்ப்பை இரத்து செய்து உத்தரவிட்டால், மட்டுமே ஜெயலலிதா மீண்டும் முதல்வராக முடியும், தேர்தலிலும் போட்டியிட முடியும்.

தற்போதைய நிலையில் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட தண்டனை அப்படியேதான் உள்ளது. எனவே பதில் மனு வழக்கில் தீர்ப்பு வரும் வரை ஜெயலலிதாவால் தேர்தலில் போட்டியிட முடியாது என்றார் ஆச்சார்யா. (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





அரசியல், சினிமா பொழுதுபோக்கு கேள்விகளை சுருக்கமாக பெயர், முகவரி குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.




வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குறுந்தகவல் (SMS)
021 567 1532

Email
vijasarpathil@gmail.com



## மகிந்த வந்தாரு. உங்களுக்கு என்ன தந்தாரு?

வியா அங்கிள்!

அகிலன் , கிளிநொச்சி

**Hi. அங்கிள் I LOVE YOU ஒரு கவிதை சொல்லுங்க பிளீஸ்?**

ஒளிர்ந்து கொண்டிருக்கிறது
சீபம் போல.... உன் கண்களும்.

வியாசரே!

ந.மரியநாயகம், கொழும்புத்துறை

**அழகான பெண்டாட்டியை வைத்துக் கொண்டு அடுத்தவன் பெண்டாடிக்கு ஆசைப்படும் ஆண்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

ஐஸ்கிறீமுக்குள் பிஸ்கட் துண்டை குத்துவது எதற்காகத் தெரியுமா? நாக்கு ஒரே சுவையை சுவைக்கும் போது அதன் சுவை தெரியாது போய்விடும். சிறு மாற்றமான சுவையை சுவைக்கும் போது ஐஸ்கிறீம் சுவை அதிகமாகும் என்பதற்காக. அப்பிள் தோட்டக்காரன் ஈச்சமரத்தை விரும்புவது ஒன்றும் புதிதில்லையே!

வியாசரே!

வாசுதேவன், மருதன்கேணி

**முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தேர்தல் காலத்தைப் போலில்லாமல் தன்னை ஒரு மிதவாதியாகக் காட்டிக் கொள்கின்றாரே?**

தம்பி வாசுதேவன், அவர் நீதி அரசராக இருந்தவர் அவருக்கு உசுப்பேற்றி பேசத் தெரியாது. மக்கள் நலன்சார்ந்த விடயங்களை நயத்தக்க நாகரகத்துடன் எடுத்துக் கூறக் கூடிய ஒரு தலைவர். அப்படிப்பட்டவரை மிதவாதி என்றால் யாம் என்ன செய்ய?




**Hi** அங்கிள்!

பி.மதன், அல்வாய்.

**மகிந்த வந்தாரு. உங்களுக்கு என்ன தந்தாரு?**

வயல் உழ வாங்கிய ரக்டரை லீசிங்காரன் பறிக்க வந்த நேரத்தில் தமிழீழ வைப்பகத்தில் அடகு வைத்த தங்க நகைகளைத் தந்தார். அதேபோல் மகன்களை தொலைத்து விட்டு ஏங்கும் தாய்க்கு மகன்களையும் சொந்த ஊரில்தான் உயிர் பிரியும் என இழுத்துக் கொண்டு கிடக்கும் தாத்தாவின் ஆத்மா சாந்தியடைய உயர் பாதுகாப்பு வலய காணிகளையும் திருப்பித் தந்தால் போதும்.

**Hi** வியா!

ஜசிந்தன், புத்தூர்

**உங்கள் கருத்துப்படி வடமாகாண நிலை எப்படி?**

தீர்மானங்களை நிறைவேற்றும் களம். அவ்வளவுதான்.

## முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தேர்தல் காலத்தை

வணக்கம் தோழா!

கிருஷாந், தம்பளை.

**ஆறுவருடமாக ஒரு பெண்ணை ஒருதலைக் காதலாக காதல் செய்கின்றேன். என் காதலை அவிளிடம் எப்படி வெளிப்படுத்துவது?**

அந்த பெண்ணுக்கு திருமணமாகிவிட்டதா என்பதை கூறுங்கள். ஏனென்றால் பலபேர் ஏற்கனவே அத்திபாரம் போடப்பட்ட இடத்தில்தான் வீட்டைக் கட்டுகிறார்கள்.

அன்பின் வியாசர் அண்ணா!

கௌறீஸ், அல்வாய்.

**காதல் திருமணத்திலா, நிச்சயிக்கப்பட்ட திருமணத்திலா ஒருவனின் வாழ்க்கை அவன் நினைத்த மாதிரி சந்தோசமாக இருக்கும்?**

சந்தோசம் என்பது அமைந்து கொள்வதல்ல. அமைத்துக் கொள்வது அவ்வளவுதான்.

வியாசர் அவர்களே!

க.தில்லையம்பலம், கரவெட்டி

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பலமுறை கூடியும் எதுவித முடிபும் எடுக்காமல் மக்களையும் திரிசங்கு நிலையில் வைத்திருப்பதன் காரணம் என்ன?**

குளத்தில் மீனும் வாழ்கிறது. பாம்பும் வாழ்கிறது. அங்கேதான் விலாங்கும் வாழ்கிறது.

# அடித்தது உண்மையே சுஜின் வாஸ் ஒப்புதல்

பிரிட்டனுக்கான முன்னாள் தூதுவர் கிறிஸ் நோனிஸைத் தாக்கியது உண்மைதான் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் ஏற்றுக் கொண்டுள்ளார்.

பிரிட்டனுக்கான முன்னாள் தூதுவர் கிறிஸ் நோனிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாசுவினால் தாக்கப்பட்ட விவகாரம் கடந்த சில நாட்களாக அரசியல் அரங்கில் சூடான விவகாரமாக மாறியுள்ளது.

எனினும் சஜின் வாஸ் தொடக்கம் அரசாங்கத்தின் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வரை அப்படியொரு சம்பவம் நடைபெறவே இல்லை என்றே மறுப்புத் தெரிவித்துவந்தார்கள்.

இருவருக்குமிடையில் வெறும் வாய்த் தர்க்கம் மட்டுமே நடைபெற்றிருந்ததாகவும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது கிறிஸ் நோனிஸை தாக்கிய விவகாரம் உண்மைதான் என்று முதற்தடவையாக சஜின் வாஸ் ஏற்றுக் கொண்டுள்ளார்.

"ஆமாம், அவரை அடித்தது உண்மைதான். அதுபற்றி உங்களுக்கு என்ன பிரச்சினை? அவரை அடித்தது எங்களுக்கிடையிலான தனிப்பட்ட விவகாரம், அது பற்றி நான் கருத்துக் கூற விரும்பவில்லை" என்று மிகவும் அலட்சியமாக ஊடகவியலாளர்களின் கேள்விக்கு சஜின் பதிலளித்துள்ளார். தூதுவர்கள் மீது தாக்குதல் நடத்துவது சர்வதேச இராஜதந்திர நெறிமுறைகளுக்கு முரணான ஒரு விடயமாகும், ஜெனீவா சாசனத்தின் பிரகாரம் இது கடும் நடவடிக்கைக்குரியது.

இந்நிலையில் கிறிஸ் நோனிஸ் மீது தாக்குதல் மேற்கொண்டது மாத்திரமன்றி, அதனை அலட்சியமாக ஏற்றுக் கொண்டுள்ள தன் காரணமாக சஜின் வாஸ், சர்வதேச ரீதியில் பெரும் நெருக்கடியொன்றுக்குள் அரசாங்கத்தை தள்ளி விட்டிருப்பதாக கூறப்படுகின்றது. (இ)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்



கடந்த 21.09.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்.

அமரர் தம்புத்துரை விஜயேந்திரன்

B.A. (Hons), M.A

(அபிவிருத்தி உத்தியோகத்தர்- கரவெட்டி பிரதேச செயலகம்)

அவாகளின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 19.10.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 4.00 மணியளவில் கொடுக்குளாய் கடற்கரையில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து நாளை 20.10.2014 திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கொடுக்குளாய்,
உடுத்துறை.

(சி-8806)

இங்ஙனம்:- குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



(8098)

செல்வச்சந்திரன் நிவேரகன்

2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யா/உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி மாணவன் செல்வச்சந்திரன் நிவேரகன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு 100 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம்
அருந்தவராசா விதூரன்-153

யாழ்/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளான
1.ரஞ்சன் அஸ்வினி-143
2.புஸ்பராசா டியான்சி-124
3.உதயகர்ணன்-உஷானி-114
4.தேவநாயகம் சாரங்கா-109

வாழ்த்துவோர்:-
ஜீவகன் சனசமூக நிலையம், இமையாணன் மேற்கு, தூப்புலம், கோம்பு, உடுப்பிட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எபோலா' நோயினால் உணவுப்பஞ்ச அபாயம்

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

'எபோலா' என்ற கொடிய வைரஸ் நோய் லைபீரியா, சியாரா லியோன், கினியா உள்ளிட்ட மேற்கு ஆபிரிக்க நாடுகளில் மிக வேகமாக பரவுகிறது. தற்போது அமெரிக்கா, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளுக்கும் பரவியுள்ளது. இதற்கிடையே ஐ.நா. சபையின் சார்பில் உலக உணவு நாள் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. அப்போது, எபோலா நோய் இன்னும் தொடர்ந்து பரவினால் உலகளவில் உணவுபற்றாக்குறை பஞ்சம் உருவாகும் அபாயமுள்ளதாக எச்சரிக்கப்பட்டது.

த்ற்போது எபோலா நோய் கடுமையாக பாதித்துள்ள லைபீரியா, சியாரா லியோன், கினியா ஆகிய நாடுகளில் 7 லட்சத்து 50 ஆயிரம் பேர் போதிய உணவு கிடைக்காமல் தவிக்கின்றனர். இதே நிலை சர்வதேச அளவில் ஏற்படும் அபாயமுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட் வந்த 'ஏர்பிரான்ஸ்' விமானம் ஒரு இடத்தில் ஒதுக்குப்புறமாக நிறுத்தி வைக்கப்பட்டது. ஏனெனில், அந்த விமானத்தில் 'எபோலா' நோயின் அறிகுறியான கடுமையான காய்ச்சல் மற்றும் நடுக்கத்துடன் ஒரு பயணி இருந்தார். அதனால் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (இ)

# போகோஹறாம் தீவிரவாதிகளுடன் அரசாங்கம் போர் நிறுத்த ஒப்பந்தம்

## 219 மாணவிகள் விரைவில் விடுதலை



நைஜீரியாவின் போர்னோ மாகாணத்தில் சிபோக் என்ற இடத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி பாடசாலை விடுதியில் இருந்து 276 மாணவிகளை போகோஹறாம் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். மாணவிகளை மீட்கும் நடவடிக்கையில் நைஜீரிய இராணுவத்தோடு இணைந்து அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் இராணுவ வீரர்களும் ஈடுபட்டுள்ளனர். ஆனால் அவர்களை மீட்க முடியவில்லை. இதற்கிடையே கடத்தப்பட்ட மாணவிகளில் சிலர் தப்பி ஓடி வந்து விட்டனர். தற்போது தீவிரவாதிகளின் பிடியில் 219 மாணவிகள் சிக்கியுள்ளனர்.

மாணவிகள் கடத்தப்பட்டு 6 மாதமாகியும் மீட்கப்படாததால், நைஜீரியாவில் போராட்டம் வெடித்துள்ளது. இந்தநிலையில் போகோஹரம் தீவிரவாதிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து இருப்பதாகவும், கடத்தப்பட்ட மாணவிகள் விரைவில் பத்திரமாக மீட்கப்படுவார்கள் என்றும் நைஜீரியாவின் இராணுவ தளபதி அலெக்ஸ் படே தெரிவித்துள்ளார். இதனை ஜனாதிபதி குட்லக் ஜோனர்த்தனின் உதவியாளர் டுக்கூரும் உறுதி செய்துள்ளார். இதனால் மாணவிகள் 219 பேரும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்று தெரிகிறது. (இ)

# அமெ. ஜனாதிபதியின் கடனட்டை நிராகரிப்பு

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின்கடன் அட்டையை அங்குள்ள உணவகம் ஒனறு நிராகரித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, நுகர்வோர் நிதி பாதுகாப்பு பணியகம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கடன் அட்டை மோசடியை தடுப்பது தொடர்பான புதிய நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தினார். பின்னர் ஒபாமா கூறுகையில்,

ஐ.நா. சபையின் பொதுச் சபை கூட்டத்தின் போது நான் நியூயோர்க் சென்ற போது அங்குள்ள ஒரு உணவகத்திற்கு சென்று இருந்தேன்.

அப்போது அந்த உணவகத்தில் எனது கடன் அட்டை நிராகரிக்கப்பட்டது. நான் போதுமான அளவு எனது அட்டையை பயன்படுத்தாத காரணத்தால் அதில் மோசடி நடந்திருக்கலாம் என்று அவரகள் நினைத்து இருக்கலாம். இதன் காரணமாக கடன் அட்டை நிராகரிக்கப்பட்டு இருக்கலாம் என்று நான் நினைத்தேன் என்று சிரித்தாவறே கூறினார். அதிர்ஷ்டவசமாக மிச்சேல் அருகில் இருந்தார் என்று தெரிவித்தார். (இ)

# 39பேருக்கு ஜமனான கொலைகாரன் கைது

பிரேசிலில் 39 பேரை சுட்டுக் கொன்ற கொலைகாரனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரேசில் நாட்டின் கொயானியா நகரை சேர்ந்தவர் தியாகோ ரோச்சா (வயது26). அப்பகுதியில் தொடர் கொலைகள் நடைபெற்று வந்தன. இதனால் சந்தேகம் அடைந்த பொலிஸார் இவனது வீட்டை சோதனையிட்டனர்.

அப்போது அங்கு ஒரு துபபாக்கி இருந்தது. இதனால் சந்தேகம் அடைந்த அவர்கள் அவனிடம் தீவிர விசாரணை நடத்தினார்கள். அப்போது அவன் 39 பேரை கொலை செய்தது தெரிய வந்தது.

எனவே அவனை பொலிஸார் கைது செய்தனர். கொலை செய்தவர்களில் 14 வயது சிறுமி உட்பட 16 பேர் பெண்கள் ஆவர். கடந்த ஆண்டுகளில் மட்டும் 33 பேரை கொன்ற இவன் இந்த ஆண்டில் இது வரை 6 பேரை கொலை செய்து இருக்கிறான்.

இந்த தகவலை அவன் பொலிஸாரிடம் வாக்கு மூலமாக கொடுத்திருக்கிறான். மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டே பலரை சுட்டுக் கொன்றதாக கூறினான். தனக்கு யார் சரியாக படவில்லையோ அவர்களை சுட்டுக் கொன்றதாக தெரிவித்திருக்கிறான் அந்தப் படுபாதகன். (இ)

# இசைநிகழ்ச்சியின் போது கட்டடம் இடிந்து விழுந்ததில் 16 பேர் பலி!

தென்கொரியா தலைநகர் சியோல் அருகே சியோங்னம் நகரில் உள்ள திறந்த வெளி அரங்கத்தில் தென் கொரியாவின் பேண்ட் 4 மினிட்ஸ் என்ற பிரபல குழுவின்றின் பொப் இசைநிகழ்சசி நடந்தது. அதை சுமார் 700 இற்கும் மேற்பட்டோர் கூடியிருந்து இரசித்தனர். கூட்டம் அதிகமாக இருந்ததால் வாகன நிறுத்தம் கட்டடத்தின் காற்று வெளியேறும் பகுதி மீது ஏறி ஏராளமானவர்கள் இசை நிகழ்ச்சியை பார்த்து இரசித்து கொண்டிருந்தனர்.

அது சுமார் 60 அடி உயரம் உள்ளது. அதிகமான பேர் ஏறியதால் எடை தாங்காமல் அந்த பகுதியின் கட்டடத்தின் கூரை திடீரென இடிந்து விழுந்தது. அதில் சிக்கி 12 பேர் சம்பவ இடத்தில பலியானார்கள். 15 பேர் படுகாயம் அடைந்தனர்.

அவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி 4 பேர் உயிரிழந்தனர். இதனால் பலி 16 ஆக உயர்ந்தது. இதற்கிடையே, காயம் அடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அதனால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. (இ)




# ரஷ்ய ஆதரவாளர்கள் கைப்பற்றிய மாகாணங்களுக்கு தனி அந்தஸ்து

உக்ரைனின் தன்னாட்சிப பகுதியாக இருந்து வந்த கிரிமியா, ரஷ்யாவுடன் இணைந்ததை தொடர்ந்து கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு கிளர்சசியாளர்கள் சுயாட்சி கோரி ஆயுதங்களை கையில் எடுத்தனர். உக்ரைன்படையினருடன் அவரகள் போரிட்டு, டன்ட்ஸ்க், லுஹான்ஸ்க் ஆகிய இரு மாகாணங்களை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். அவற்றை உக்ரைன் படையினரால் மீட்க முடியவில்லை.

இரு தரப்புக்கும் இடையே நடந்த 5 மாத மோதலில் 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து இரு தரப்பினரும் போர் நிறுத்த உடன்படிக்கை செய்து கொண்டனர். இந்த நிலையில், கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் இருந்து வரும் டன்ட்ஸ்க், லுஹான்ஸ்க் ஆகிய 2 மாகாணங்களுக்கும் தனி அந்தஸ்து வழங்கும் சிறப்பு சட்டத்துக்கு உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ போரோஷெங்கோ நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்து கையெழுத்திட்டார். இதன்படி, இரு மாகாணங்களுக்கும் சுயாட்சி வழங்கப்படுகிறது. இந்தசட்டம்3 ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும். இரு மாகாணங்களிலும் டிசெம்பர் 7ஆம் திகதி தேரதல் நடத்தப்படும். (இ)

# விமான பயிற்சியில் ஈடுபடும் ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள்

உலக நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், போர் விமான பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசைன் படையில் பணியாற்றிய போர் விமானி ஒருவர் தீவிரவாதிகளுக்கு விமான பயிற்சி வழங்கி வருகிறார்.

இந்த தகவலை சிரிய மனிதவுரிமைக் கண்காணிப்பு அமைப்பு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

சிரியாவின் அலெப்போ, ராக்கா மாகாணங்களில் சிரிய படையிடமிருந்து ஐ.எஸ. ஐ.எஸ அமைப்பினர்சில விமான தளங்களைக் கைப்பற்றினர்.

இதன் மூலம் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சில போர் விமானங்கள் ஐ.எஸ். ஐ.எஸ. பயங்கரவாதிகளின் வசமாகியுள்ளன. அவை மிக்-21, மிக்-13 ரக போர் விமானங்கள் எனத் தெரிகிறது.

எனினும், அவை பறக்கும் நிலையில் உள்ளனவா, அவற்றில் ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்கள் பொருத தப்பட்டுள்ளனவா என்பது குறித்து தெரியவில்லை.

ஐ.எஸ்.ஐ.எஸ.தீவிரவாதிகள் அந்த விமானங்களை இயக்குவதற்கான பயற்சி அளிக்கப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

முன்னாள் ஈராக் ஜனாதிபதி சதாம் உசைனின் விமானப் படையில் பணி யாற்றிய அதிகாரி ஒருவர், அலெப்போ மாகாணத்தின் ஜர்ரா நகர இராணுவ விமான தளத்தில் இந்தப் பயிற்சிகளை மேற்பார்வையிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

# ஹொங்கொங் போராட்டம் மோதலாக தீவிரமடைகிறது



உலகின் நிதி மையம் என்ற சிறப்பு பெயரைப் பெற்றுள்ள ஹொங்கொங், பிரிடடனின் ஆளுகையின் கீழ் இருந்து வந்தது. கடந்த 1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1ஆம் திகதி, சீனாவின்வசம் ஹொங்கொங் ஒப்படைக்கப்பட்டது. அது முதல், ஹொங்கொங், சீனாவின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

ஒரு நாடு இரு ஆட்சி முறை என்ற அடிப்படையில் ஹொங்கொங் செயற்பட்டு வருவதாக கூறப்பட்டாலும், சீனா தனது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ்தான் அந்த நகரை வைத்துள்ளது. தற்போது ஹொங்காங்கின் ஆட்சியாளராக தலைமை நிர்வாகி என்ற பெயரில் லீயுங் சன் யிங் செயல்பட்டு வருகிறார்.

ஹொங்கொங்கில், அடுத்த தலைவரை தேர்ந்தெடுப்பதற்கு 2017ஆம் ஆண்டு தேர்தல் நடத்தப்படும் என சீனா அறிவித்துள்ளது. ஆனாலும் ஹொங்கொங் மக்கள் தாங்கள் விருப்பத்தின்படி அந்தத் தலைவரை தேர்ந்தெடுக்க முடியாது.

இந்த முறையும், சீன அரசு அமைக்கின்ற குழு தான் வேட்பாளர்களை தேர்வு செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தங்கள் தலைவரை தாங்களே ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுதது்க்கொள்ள சுதந்திரமான வாக்குரிமை வேண்டும் என கேட்டு மாணவர்களும், பொது மக்களும் கடந்த மூன்று வாரங்களாக போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டக்காரர்களை ஒடுக்க பொலிசார் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்தபோதிலும், போராட்டம் ஓய்ந்தபாடில்லை.

இந்த நிலையில் ஹொங்கொங் அரசுக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே கடந்த வெள்ளிகிழமை முறையான பேச்சுவார்த்தை நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. மோங் காக் பகுதியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஆர்ப்பாட்டகாரர்கள் மீது தாக்குதல் நடத்தியதால் கேரி லாமுடன் நடக்க இருந்த பேச்சு வார்த்தையை ஆர்ப்பாட்டக்காரர்களின் ஒருங்கிணைப்பாளர்கள் இரத்து செய்தனர்.

இதனையொட்டி, மோங் காக் பகுதியில் நீடித்த போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், போராட்டக்காரர்கள் ஆக்கிரமித்திருந்த சாலைப் பகுதியை ஓரளவுக்கு மீட்டு, போக்குவரத்துக்கு பொலிஸார் வழியமைத்து தந்தனர்.


இந்த நிம்மதி ஓரிரு நாட்களுக்கே பொலிஸாருக்கு நீடிதது. நேற்று முன்தினம் சுமார் 10 ஆயிரம் பேர் மோங்காக் பகுதியில் உள்ள சாலையில் திரண்டனர். தண்ணீரை பீய்ச்சி அடித்தல், மிளகு ஸ்பிறே போன்ற பொலிஸாரின் எவ்வித பலப்பிரயோகத்துக்கும் அஞ்சாத போராட்டக்காரர்கள, பொலிஸாருடன் தள்ளுமுளளில ஈடுபட்டனர். பொறுமையிழந்த பொலிஸார் லேசான தடியடி நடத்தி கூட்டத்தை கலைக்க முயன்றனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணம்

# கே.சி.சி.சி. அணி தொடர்ந்து முன்னிலை

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 5 ஆவது ஆண்டாக நடத்தும் ஜோர்ஜ் வெப்ஸ்டர் வெற்றிக்கிண்ணத்துக்கான யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவில் கே.சி.சி.சி. அணி தொடர்ந்து முன்னிலையில் உள்ளது.



01.01.2014 தொடக்கம் 31.07.2014 வரை நடைபெற்று முடிந்த 92 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் தரவரிசை பட்டியல் பின்வருமாறு,

கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் 17 போட்டிகளில் 15 போட்டிகளில் வெற்றி பெற்று 86.82 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 13 போட்டிகளில் 12 போட்டிகளில் வெற்றி பெற்று 77.41 புள்ளிகள் பெற்று இரண்டாமிடத்தையும் யாழ். பல்கலைக் கழகம் 12 போட்டிகளில் 7 போட்டிகளில் வெற்றிபெற்று 70.60 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 59.70 புள்ளிகள் பெற்று 4 ஆம் இடத்தையும் ஸ்ரீகாமாட்சி விள்ளயாட்டுக்கழகம் 56.56 புள்ளிகள் பெற்று 5 ஆம் இடத்தையும் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகம் 49.28 புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்தையும் மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக்கழகம் 46.30 புள்ளிகளைப் பெற்று 7ஆம் இடத்தையும் யூனியன்ஸ் விளையாட்டுக்கழகம் 45.02 புள்ளிகளைப் பெற்று 8 ஆம் இடத்தையும் யாழ்.ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் 42.13 புள்ளிகளைப் பெற்று 9 ஆம் இடத்தையும் ஜொலிஸ்டார் விளையாட்டுக்கழகம் 32.93 புள்ளிகளைப் பெற்று 10 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (க)

# கோலி, சாமுவேல்ஸ் சதம்

# இந்திய அணி வெற்றி

நான்காவது ஒரு நாள் போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணியை இந்தியா 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி 5 ஒருநாள் போட்டியில் விளையாடி வருகிறது.


இதன் 4 ஆவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் இமாச்சல பிரதேச மாநிலம் தர்மசாலாவில் நடைபெற்றது. இதில் நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய தீவுகள் அணி களத்தடுப்பை தெரிவு செய்துள்ளது.

இதைத் தொடர்ந்து இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக தவான், ரஹானே களமிறங்கினர். இவர்கள் சிறப்பான தொடக்கம் கொடுத்தனர்.

தவான் 35 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்த நிலையில், ரஹானே அரைசதம் கடந்தார். இவர் 79 பந்துகளில் 68 ஓட்டங்கள் குவித்து வெளியேறினார்.

பின்னர் களமிறங்கிய கோலி பொறுமையான ஆட்டம் மற்றும் அதிரடி ஆட்டத்தால் ஓட்டங்கள் குவிக்க ஆரம்பித்தார். இவருடனும் ஜோடி சேர்ந்த ரெய்னா அதிரடியில் இறங்கினார்.

இவர் 58 பந்துகளில் (5 சிக்சர், 3 பவுண்டரி) 71 ஓட்டங்கள் குவித்து வெளியேறினார். டோனி (6 ஓட்டங்கள்), ஜடேஜா (2 ஓட்டங்கள்) ஆகியோர் வந்த வேகத்தில் நடையை கட்டினர்.



அதிரடியில் அசத்திய கோலி தனது 20 ஆவது சதத்தை விளாசினார். இவர் 114 பந்துகளில் 127 ஓட்டங்கள் (13 பவுண்டரி, 3 சிக்சர்) குவித்து ஆட்டமிழந்தார். ராயுடு 12 ஓட்டங்களுடன் 1 சிக்சர் விளாசிய நிலையில் ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன் மூலம் இந்திய அணி 50 ஓவர் முடிவில் 6 விக்கெட்டுகள் இழந்து 330 ஓட்டங்கள் குவித்துள்ளது.

பின்னர் 331 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 48.1 ஓவர்களில் 271 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியுற்றது.

. மேற்கிந்திய தீவுகள் அணியின் சாமுவேல்ஸ் சதம் அடித்தார். அவர் 97 பந்துகளில் 100 ஓட்டங்கள் எடுத்தார். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணியின் கோலி தெரிவானார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## டென்மார்க் பட்மிண்டன் சாய்னா நேவால் தோல்வி



டென்மார்க் ஓபன் சுப்பர் சீரிஸ் பட்மிண்டன் போட்டி டென்மார்க்கின் ஒடென்ஸ் நகரில் நடந்து வருகிறது.

இதில் நடந்த பெண்கள் ஒற்றையர் கால் இறுதி ஆட்டத்தில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால், உலக தர வரிசையில் 2 ஆவது இடத்தில் இருக்கும் சீன வீராங்கனை ஷிசியான் வாங்கை சந்தித்தார்.

45 நிமிடம் நடந்த மோதலில் சாய்னா நேவால் 20-22, 15-21 என்ற நேர்செட்டில் அதிர்ச்சி தோல்வி கண்டு வெளியேறினார். (க)

# குப்பையை அள்ளிய சானியா

இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்து வைத்த தூய்மை இந்தியா திட்டத்தில் இந்தியாவின் நட்சத்திர டெனிஸ் வீராங்கனை சானியா இணைந்துள்ளார்.



கடந்த 2ஆம் திகதி காந்தி ஜெயந்தியை முன்னிட்டு தூய்மையான இந்தியாவை உருவாக்கும் நோக்கில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியினால் தூய்மை இந்தியா திட்டம் டில்லியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் திரையுலக நட்சத்திரங்கள், விளையாட்டு துறை நட்சத்திரங்கள் உள்ளிட்ட 9 பேருக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்திருந்தார்.

இவ்வழைப்பினை ஏற்று நட்சத்திரங்கள் பலரும் தூய்மை இந்தியா அமைப்பில் தொடர்ச்சியாக இணைந்து வருகின்றனர். இந்நிலையில் இந்திய நட்சத்திர டெனிஸ் வீராங்கனை தனது தந்தையுடன் இவ்வமைப்பில் இணைந்து ஐதராபாத்தில் வீதிகளை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இந்த சவாலை ஏற்ற சானியா, நடிகர்கள் ஷாரு க்கான், ரித்தேஷ் தேஷ் முக், ஸ்குவாஷ் வீராங் கனை தீபிகா பல்லிகல், பட்மிண்டன் வீராங் கனை பி.வி. சிந்து, டெனிஸ் வீரர் சோம்தேவ் தேவ்வர்மன், தெலுங்கானா அமைச்சர் கேடி ஆர் ஆகியோருக்கு சவால் விடுத்துள்ளார்.

அண்மையில் இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம் பவான் சச்சின் டெண்டு ல்கர் தனது ரசிகர்களுடன் சேர்ந்து தெருக்களை சுத் தம் செய்தது குறிப்பிடத்த க்கது. (க)

# விபுலானந்தன் ஞாபகார்த்த

# கூடைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபையால் வருடாவருடம் நடத்தப்படுகின்ற அமரர் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியானது இவ்வருடம் வடமாகாண ரீதியில் மிக விமர்சையாக நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் நடைபெற்ற பெண்களுக்கான போட்டியில் யா/திருக்குடும்ப கன்னியர்மடத்திற்கும் யா/இராமநாதன் பெண்கள் பாடசாலைக்கும் இடையில் நடைபெறவிருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தினால் திருக்குடும்ப கன்னியர்மடம் வருகை தராமையால் பெண்கள் அணியில் இராமநாதன் கல்லூரிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

ஆண்களுக்குரிய போட்டியில் யா/கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்திற்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 33 புள்ளிகளைப் பெற்று 8 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றியடைந்தது. இச் சுற்றுப்போட்டியில் மதுமிதன் 17 புள்ளிகளை தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். மற்றும் யா/ இந்துக்கல்லூரிக்கும் கிளி/மல்லாவி மத்திய கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி 34 புள்ளிகளைப் பெற்று வெற்றி பெற்றது. இதில் லதீசன் 14 புள்ளிகளைத் தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூது கௌவும் முன்னே
தர்மம் வெல்லும் பின்னே
– விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு கிழக்கு பிரிப்பிற்காக மன்னிப்புக் கேட்பது எப்போது?

இலங்கையின் நீதித்துறையில் பக்கச் சார்புகள் இருக்கின்றது என்பதை முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஆற்றிய உரை ஒன்று தெளிவுபடுத்தியுள்ளது.

ஹெல்பிங் அம்பாந்தோட்டை ஊழல் குற்றச்சாட்டில் மகிந்த ராஜபக்ஷ சிறையில் அடைக்கப்பட வேண்டியவராக இருந்தார். ஆனால் அவரை சிறையில் அடைக்காமல் நான் தடுத்தேன் என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கூறுவதில் இருந்து இலங்கையின் நீதித்துறையின் போக்கு எத்தகையதாக இருந்துள்ளது என்பது நிரூபணமாகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கும் இடையே முரண்பாட்டு நிலைமை வலுவடைந்து வருகின்றது.

மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தகைமை மகிந்த ராஜபக்ஷவுக்கு இல்லை என்று வெளிப்படையாகக் கூறி இருந்த ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, இப்போது தான் வழங்கிய தீர்ப்பு ஒன்றைச் சுட்டிக் காட்டி, மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு அவரை சிறையில் அடைக்கக் கூடியதான குற்றச்சாட்டு ஒன்று இருந்தது எனவும் எனினும்தான் அதனைச் செய்யாமல் விட்டதனாலேயே அவர் ஜனாதிபதி ஆனார் என்றும் கூறியுள்ளார்.

அப்படியானால் சட்டம், நீதி என்பனவற்றுக்கு அப்பால், நீதிபதிகளின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களும் நீதி பரிபாலனத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றதா? என்ற கேள்வி எழுகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடயத்தில் தான் தவறு விட்டதாகக் கூறும் ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் இவ்வாறு கூறியதன் மூலம் இலங்கையின் நீதிபரிபாலனத்தின் செம்மைபற்றி சீர்தூக்கி ஆராய்வதற்கு வழிகோலியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சிறையில் அடைக்கக் கூடிய நிலைமை இருந்த போதிலும் அதனைத் தான் செய்யாமல் தடுத்தமைக்காக நாட்டு மக்களிடம் மன்னிப்பு கேட்பதாகக் குறிப்பிட்டுள்ள ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சரத் என் சில்வா,

இணைந்திருந்த வடக்குக் கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கும் தீர்ப்பு வழங்கியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இணைந்த வடக்குக் கிழக்கு மாகாண சபையை பிரிக்க வேண்டும் என உயர்நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் அக்காலத்தில் இருந்த பிரதம நீதியசரர்கள் தீர்ப்பு எதனையும் வழங்காமல் வழக்கை ஒத்தி வைத்தே வந்தனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பது என்பது இந்த நாட்டில் சிறுபான்மை இனத்திற்குச் செய்யும் அநீதியாகும் என்ற அடிப்படையில் அத்தகையதொரு முடிவை அவர்கள் எடுத்திருந்தனர்.

ஆனால் சரத் என் சில்வா அவர்கள் இந்த நாட்டின் பிரதம நீதியரசராக இருந்த போது வடக்கு கிழக்கு மாகாண சபையைப் பிரித்தாக வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினார்.

நீதித்துறை சார்ந்த விமர்சனங்கள் இலங்கையில் ஆகாது என்பதால் உண்மை உணர்ந்த அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் மௌனமாகி இருந்தனர்.

எனினும் கால ஓட்டத்தில்–ஓய்வுபெற்ற நிலையில் சரத் என் சில்வா அவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறித்த தீர்ப்பு தொடர்பில் கவலை வெளியிட்டு மக்களிடம் மன்னிப்பு கேட்டுள்ளார்.

அவ்வாறாயின் வடக்கு கிழக்கு மாகாண சபை பிரிக்கப்பட்டது தொடர்பில் ஓய்வுபெற்ற நீதியரசர் சரத் என் சில்வா தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பது சர்வ நிச்சயம்.

## 1 கோடியே 17,99628 லீற்றர் மதுபானம் குடாநாட்டு குடிமகன்கள் குடித்தனராம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த குடிமகன்கள் கடந்த வருடம் ஒரு கோடியே 17 இலட்சத்து 99 ஆயிரத்து 628 லீற்றர் மதுபானத்தினை குடித்து தீர்த்துள்ளனர் என யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்கள புள்ளிவிபரம் தெரிவித்துள்ளது.

2002ஆம் ஆண்டு 44 இலட்சத்து 6 ஆயிரத்து 688 லீற்றர் ஆகக் காணப்பட்ட மதுபான நுகர் அளவு தற்போது பன்மடங்கு பெருகியுள்ளதாக அப்புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போருக்கு முன்னர் மிகவும் குறைவாக காணப்பட்ட மதுபான நுகர் அளவு போர்முடிவுற்ற பின்னர் சடுதியாக அதிகரித்துக் காணப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டிற்கு முன்னர் குறைவாகக் காணப்பட்ட மது நுகர் அளவு 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் இரட்டிப்படைந்துள்ளது.

2013ஆம் ஆண்டு மதுபான நுகர்விற்காக யாழ்.மாவட்ட குடிமகன்கள் பில்லியன் ரூபாய் கணக்கில் பணத்தை செலவு செய்துள்ளனர்.

இவற்றில் கள் விற்பனை முதலிடத்திலும் பியர் மதுபானம் இரண்டாவது இடத்திலும் அட் ராக் ரக மதுபானம் 3ஆவது இடத்திலும் வெளிநாட்டு மதுபானங்கள் 4ஆவது இடத்திலும் விற்பனையில் உள்ளன.

வருடமொன்றுக்கு யாழ்.மாவட்ட குடிமகன்கள் குடிப்பதற்காக செலவிடும் பணத்தொகை மூலம் யாழ்.மாவட்டத்தில் பாரிய முதலீட்டுக் கம்பனிகள் பல ஆரம்பிக்க முடியும் எனவும் குறித்த தரவினை மேற்கோள்காட்டி குறிப்பிடப் பட்டுள்ளது.

வருடந்தோறும் படிப்படியாக அதிகரித்து வருகின்ற இம்மதுபானநுகர்வு 2012ஆம் ஆண்டில் சடுதியாக அதிகரித்து 2013 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்துமுள்ளது.

போரின் இறுதிக்கட்ட ஆண்டுகளான 2007, 2008 காலப்பகுதிகளில் மதுநுகர்வு கடந்த 10 ஆண்டுகளிலும் பார்க்க மிகவும் குறைவானதாக உள்ளது.

எனினும் 2009 இல் இலட்சத்தில் காணப்பட்ட மதுபான அளவு 2010 இல் கோடி அளவில் அதிகரித்துமுள்ளது.

கடந்த தசாப்த காலத்தில் யாழ். மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்ட மதுபானத்தின் அளவு பல கோடிகளாக இருக்கலாம் என கணக்கிடப்பட்டுள்ளது. (இ-4)

## சைவநெறித் தேர்வு பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையில் இம்மாதம் 25ஆம் திகதி நடத்தப்படவிருந்த சைவநெறித் தேர்வு தவிர்க்கமுடியாத முடியாத காரணத்தால் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை நடத்தப்படும் எனவும் பாடசாலைகள், வினாத்தாள்கள் மற்றும் பரீட்சை காகிதப் பொதிகளை அறிவிக்கப்பட்ட இணைப்பு நிலையத்தில் இம்மாதம் 30 ஆம் திகதி பெற்றுக்கொள்ளுமாறும் தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

## பேச்சுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர்க் கிளை நூலகம் மாநகர சபை நடத்தும் வாசகர்களுக்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள போட்டிகளில் முற்பகல் 9.30 மணிக்கு தரம் 3, 4,5 மாணவர்களுக்கான ஆங்கில பேச்சு போட்டி, தரம் 6 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கான தமிழ் பேச்சு போட்டி மற்றும் தரம் 6 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கான ஆங்கிலப் பேச்சு போட்டி ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

போட்டிகளுக்கான தலைப்புக்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**பேச்சு ஆங்கிலம்**

தரம் 3- My self
தரம் 4-My hobby is Reading
தரம் 5- Our School Library

**பேச்சு தமிழ்**


தரம் 6,7,8- வாசிப்பின் அவசியம், கற்றது கை மண் அளவு
தரம் 9,10,11- கற்றதனாலாய பயன் என் கொல், நூலகங்களின் பயன்பாடு
தரம் 12,13- வாசிப்பு பழக்கத்தின் சவால்

**பேச்சு- ஆங்கிலம்**

தரம் 6,7,8-Important of Reading
தரம் 9,10,11-Books are my friends
தரம்12,13- The Challenges in Reading

ஆகிய தலைப்புக்களில் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (இ)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### சொல்லு சிவமே

சொல்லு சிவமே சொல்லு சிவமே
சுகம்பெற மார்க்கமொன்று சொல்லு சிவமே
வெல்லும் பகையொழியச் சொல்லு சிவமே
வேறுபொரு ளில்லையென்று சொல்லு சிவமே
அல்லும் பகலுமறச் சொல்லு சிவமே
அன்பே சிவமென்று சொல்லு சிவமே
கல்லுங் கரையக் கவி சொல்லு சிவமே
காயமே கோயிலென்று சொல்லு சிவமே.

## சமயத்தையும் அரசியலையும் சேர்த்து நாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்பாது பார்த்துக்கொள்வோமாக

உரோம பேரரசின் ஆட்சிக்குட்பட்டதாயிருந்த அன்றைய யூதேயா நாட்டில் மதத்திற்கும் கடவுளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பவர்களாக காட்டிக் கொண்டு தம்மையே முதன்மைப்படுத்தி மக்களிடையே பிரபல்யம் பெற்றிருந்த பரிசேயர் எனப்பட்ட ஒரு சாராரும் பேரரசர் சீசரின் கீழ் உள்ளூர் சிற்றரசர்களாக அரசியல் அதிகாரப் புகழ்பெற்றவர்களாயிருந்த ஏரோது மன்னர் சார்ந்த ஏரோதியர் எனப்படும் மற்றுமொரு அரசியல் சாராரும் ஏட்டிக்குப் போட்டியான இரு துருவ சக்திகளாக இயங்கிக் கொண்டிருந்தனர்.

ஜென்ம பகைவர்களாக இருந்த இந்த இரு சக்திகளும் இயேசுவையும் அவரது போதனைகளையும் புதுமைகளையும் கண்டு அவரை மூன்றாவது

### பரமபிதா காட்டிய பாதை

சக்தியொன்றாகக் கண்டு வெறுப்புக் கொண்டிருந்தனர். இயேசுவின் புகழ் மக்களிடையே பரவிவருவதையிட்டு கவலை கொண்ட அவர்கள் தாம் மக்களிடையே அதிகாரமிழந்து விடுவோமோ என்று பயந்தனர்.

எனவே, உரோமரின் அடிமைத் தளையிலிருந்து விடுபடக் காத்திருந்த மக்களுக்கும் பேரரசின் எதிர்பார்ப்புக்களுக்கும் விரோதமான ஒரு கருத்தை அவர் மூலம் உருவாக்கும்படி திட்டமிட்டு இயேசுவை அணுகினர். தமது கேள்வி மூலம் இயேசுவை சிக்கவைத்து குற்றவாளியாக்குவதே அவர்களது திட்டமாக இருந்தது.

நாம் சீசருக்கு வரி செலுத்தலாமோ என்பதே அவர்களது கேள்வியாக இருந்தது. ஆம் என்று பதில் கூறினால் மக்களுக்கு அவர் எதிரியாவார். இல்லையென்று கூறினால் சீசருக்கு எதிரி. இவர்களது கபடத்தனத்தை அறிந்து கொண்ட இயேசு ஒரு நாணயத்தைக் கொண்டு வரும்படி கேட்டு அதில் சீசரின் உருவம் பொறிக்கப்பட்ட முத்திரையைக் காட்டி இது யாருடைய அதிகாரமுத்திரை என்று கேட்டார். அவர்களோ அது சீசருடையதென்று கூறினார்கள். அப்போது இயேசு "சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றை கடவுளுக்கும் கொடுங்கள்" என்ற தனது பதிலின் மூலம் அவர்களது வாயடைத்துப் போகச் செய்தார்.

பைபிளில் மத்தேயு 22:15-21 இல் எழுதப்பட்டுள்ள இயேசு கூறிய இப் புகழ் பெற்ற வரிகள் இன்று நமக்கான பைபிள்பகுதியாக கொடுக்கப்படுகின்றது.

பைபிளைத் தாண்டி, கத்தோலிக்க மறையைத் தாண்டி, பொருளாதாரம், அரசியல் என்ற பல சூழல்களில் மேற்கோளாகப் பயன்படுத்தப்படும் ஒரு புகழ்பெற்ற வரிகள் இது.



இயேசு கூறிய அந்தப் புகழ் மிக்க கூற்றை இன்று சிந்திப்போம்.

அவரவருக்கு உரியதையும் நாம் வழங்க வேண்டும் என்று இயேசு நம்மிடம் இன்று கேட்கிறார். நம் பதில் என்ன? அதிகாரத்தை, சுயநலத்தை காத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எழும் போது, கொள்கைகளை மூட்டை கட்டி வைத்து விடும் அரசியல் பச்சோந்திகளைப் போல், நாமும் வாழ்வில் அவ்வப போது நிறம் மாறுகிறோமா? ஒரு குறிப்பிட்ட ஆதாயத்திற்காக நம் உயர்ந்த கொள்கைகளை விட்டுக்

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

கொடுத்த நேரங்கள், அலலது உண்மையை மறுத்த நேரங் கள் எத்தனை, எத்தனை? குறிப்பிட்ட ஒருவரைப் பழிவாங் குவதற் காக, அல் லது அவரை வெல்வதற்காக எம்மை எத்தனை தடவை அடைமானம் வைத்தோம்? இந்தக் கேள்வி களுக்கு விடைதேட நம் மனங்களைக் கொஞ்சம் இன்று அலசிப்பார்ப்போமா?.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள் – சினிமா விமர்சனம்



கல்லூரிப் பேராசிரியர் விதார்த் (படத்தில் அமீர்) தன் காதலியின் குடும்பத்தினரைச் சந்திக்க சென்னை வருகிறார். வந்த இடத்தில் அவரது லக்கேஜ் பறிபோக, ஒரு செல்போன் கையில் திணிக்கப்படுகிறது. அதில் வரும் அழைப்பை ஏற்கிறார். அப்போது தான்,
தன் உடைமைகள், குடும்பம்... என அனைத்தும் வேறு ஒருவன் கட்டுப்பாட்டில் இருப்பது தெரிய வருகிறது. ஏன், எதற்கு, என்ன நடக்கிறது என்பதுதான் படம்! 'அமீர்' என்ற இந்திப் படத்தை தமிழ் பேச வைத்திருக்கிறார் அறிமுக இயக்குநர் ஆனந் கிருஷ்ணா. தீவிரவாதம் - தேசப்பற்று இடையில் ஒரு மதம் எவ்வளவு பெரிய பிரச்சினையாக இருக்கிறது என மிகக் கனமான கதைக் களம். சர்ச்சைக்குரிய மதப் பின்னணி இருந்தாலும், முடிந்த வரை பலன்ஸ் பண்ணியிருக்கிறார் இயக்குநர். மிகவும் சின்னக் கதைக்கு, அதைவிட சின்ன திரைக்கதை அமைத்துவிட்டார்கள். இதனால் இரண்டே மணி நேரத்தில் சினிமா, அத்தனை மெதுவாகப் பயணிக்கிறது! செம சீரியஸ் கதையை, தனி ஆளாகச் சுமக்க வேண்டிய பொறுப்பு விதார்த்துக்கு. முகம் தெரியாத ஒருவன், எங்கேயோ?

## தனுஷைப் பின்பற்றும் 10இலட்சம் பேர்!



'துள்ளுவதோ இளமை' படம் மூலம் சினிமாவுக்குள் நுழைந்த தனுஷ் 'காதல் கொண் டேன்', 'திருடா திருடி', என அடுத்தடுத்து படங்களில் வெற்றியைத் தக்கவைத்துக் கொண் டார். 'ஆடுகளம்' படத்திற்காக சிறந்த நடிகருக்கான தேசிய விருது உள்ளிட்ட பல விருது களைக் குவித்தார். எல்லாவற்றிற்கும் மேல் 'வை திஸ் கொலவெறி' பாடல் மூலம் இந்தியா முழுக்க பிரபலம் ஆகி உச்சம் தொட்டார்.
தற்போது இந்தியிலும் பட்டையைக் கிளப்பிவரும் தனுஷ், பல பாடல்களுக்கு வரிகளும் எழுதுவதோடு, இசை மேதைகள் கூட இவரது வரிகளுக்குப் பின்னணி பாடும் அளவிற்கு தன்னை தகுதிப்படுத்திக் கொண்டார்.
தனுஷ் தற்போது டுவிட்டர் தளத்தில் ஒரு மில்லியன் ஃபாலோயர்களைப் பெற்றுள்ளார்.
10 இலட்சத்து பத்தொன்பதாயிரத்திற்கும் மேற்பட்ட ஃபாலோயர்களை பெற்ற தனுஷ் தனக்கு ஆதரவு அளித்த ரசிகர்களுக்கு டுவிட்டரில் நன்றி தெரிவித்துள்ளார்.



லிங்கா ஸ்பெஷல் சூட்டிங்
ஸ்பொட்டில் சுப்பர் ஸ்டாருடன் சந்தானம்



Catherine Tresa

## நயனின் முன்னுரிமை...


அப்படி என்ன மாயம் செய்தாரோ தெரியவில்லை, நயன்தாராவுக்கு தமிழ், தெலுங்கு இரண்டிலுமே இளம் நடிகர்களிடமிருந்து வாய்ப்புகள் வந்தவண்ண முள்ளதாம். இதைப் பயன்படுத்திக்கொள்வதில் தீவிரம் காட்டும் நயன்தாரா, காதல், சோகம் எல்லாம் போதும், இனி அக்ஷன் கதைகளுக்குத்தான் முன் னுரிமை எனக் கூற ஆரம்பித்துள்ளாராம்.
சக நடிகையான அனுஷ்கா, வரலாற்று கதைகளில் நடித்து வருகிறார். ருத்ரமாதேவி, பாகுபலி ஆகிய திரைப்படங்களில் ராணி வேடத்தில் நடிக்கிறார். வாள் சண்டை, குதிரையேற்றம் பயிற்சிகள் எடுத்து அக்ஷனிலும் கலக்குகிறார். நயன்தாராவுக்கும் வழக்கமான காதல் படங்களில் நடித்து அலுத்துவிட்டதாம். நல்ல அக்ஷன் படங்கள், தன் பாத்திரத்துக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளில் நடிக்க விரும்புகிறார்.
தமிழ், தெலுங்கில் சரித்திர கதையம்சம் உள்ள படங்களில் நடிக்கவும் ஆர்வம் காட்டுகிறாராம். இப்போதைய நிலவரப்படி இன்னும் மூன்று ஆண்டுகள் வரை நயன்தாரா இதே இடத்தில் நீடிக்க வாய்ப்புள்ளது. அத்தனைப் படங்களைக் கையில் வைத்துள்ளாராம்.



### f வலைபாயுதே



தலயுடன் சாலினி



விஷ்ணுவின் சுப்பர் குடும்பம்



தனுஷ், ஐஸ்வர்யா, சௌந்தர்யா செல்ஃபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலின்...

இதில் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் சுமார் ஐயாயிரம் பௌத்த பிக்குகள் கலந்து கொண்டனர்.

இந்த வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின ஆதரவாளர், அவர் ஐரோப்பாவிற்கு விஜயம் செய்து இரண்டு வாரத்தில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கனவான தனித் தமிழ் ஈழத்தை அமைக்கும் நோக்கில் தற்போதும் புலம்பெயர் நாடுகளில் நிதி சேகரிப்பு நடைபெறுகின்றது.

எனினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியில் நான் இருக்கும் வரை ஈழம் என்பது கனவாகவே இருக்கும்.

அதன் காரணமாகத் தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை ரத்துச்செய்ய முயற்சிக்கின்றார்கள்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி ரத்துச் செய்யப்பட வேண்டியதுதான், ஆனால அதற்காக புலம் பெயர் தமிழர்களினதும், விடுதலைப் புலிகளினதும் தேவைக்காக அதனைச் செய்ய முடியாது.

நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்ற நினைப்பவர்கள் நாட்டைக் காட்டிக் கொடுக்கக் கூடாது, மக்கள் மத்தியில் செல்வாக்கைக் கட்டியெழுப்பி, அதன் மூலமாகவே அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும்.

ஆனால் இன்று நாட்டைக் காட்டிக் கொடுத்து அதிகாரத்துக்கு வரும் நோக்கில் சதித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

அவற்றுக்கு இடமளிக்கக் கூடாது என்றும் ஜனாதிபதி தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.(எ-11)

## ஜனாதிபதி...

நாட்டுக்கு விஜயம் செய்வதில்லை என்பது வத்திக்கானின் கொள்கையாக உள்ள நிலையிலேயே தேசிய சமாதானப் பேரவை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதித் தேர்தலை எதிர்வரும் ஜனவரி மாதமளவில் நடத்துவது தொடர்பான கருத்துக்கள் வெளியாகியுள்ளன. இத்தேர்தலை சட்டப்படி 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை நடத்த முடியாது.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்கும் வரை ஜனாதிபதி தேர்தலை நடத்தக்கூடாது என அரசியல் கட்சிகளை சேர்ந்த பல உறுப்பினர்களும் அரசாங்க மற்றும் மதத்தலைவர்களும் கோரியுள்ளனர்.

இந்நிலையில், புனித பாப்பரசர் பிரான்சிஸின் இலங்கைக்கான விஜயத்தை கவனத்தில் கொண்டு தேர்தல் தினத்தை தீர்மானிக்க வேண்டும் என இலங்கை அரசாங்கத்தை தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்துகிறது.

கடந்த ஜூன் மாதம் தீர்மானிக்கப்பட்டவாறு பாப்பரசர் எதிர்வரும் ஜனவரி மாதம் 13ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அவர் கொழும்பிலும், முன்னாள் போர் வலயத்திலுள்ள மடுவிலும் மத ஆராதனைகளை நடத்துவார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இது தேசிய நல்லிணக்கத்தை நோக்கிய மேலதிக உந்துசக்தியை வழங்கக் கூடியது.

இந்த நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் முயற்சியில் மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள பெருந்தொகையான கத்தோலிக்க தமிழர்களும், இரு ஆயர்களும் முக்கிய பங்கு வகித்துள்ளனர்.

இந்நிலையில் பாப்பரசரின் விஜயம் அரசாங்கத்துக்கும் தமிழ் மக்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஊக்குவிக்க உதவும். அவரை வரவேற்பதில் தென்பகுதியிலுள்ள சிங்கள கத்தோலிக்கர்கள் தமிழ் கத்தோலிக்கர்களுடன் ஐக்கியத்துடன் செயற்படக் கூடியதாகவுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலை எதிர்வரும் ஜனவரி மாதம் முன்கூட்டியே நடத்துவதற்கு எதிர்ப்பார்ப்பது பாப்பரசரின் விஜயம் பிற்போடப்படவோ அல்லது இரத்துச் செய்யப்படவோ வழிவகுக்கலாம். அது கத்தோலிக்க சமூகத்திற்கும் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தும்.

நாடெங்குமுள்ள வேறுபட்ட மதங்கள் தொடர்பான வன்முறை செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகளால் இலங்கை தற்போது மோசமான சர்வதேச பிரதிமை ஒன்றைக் கொண்டுள்ளது. ஆனால் புனித பாப்பரசரின் விஜயம் பல்வேறு மதப்பிரிவினரதும் உணர்வுகளுக்கு எவ்வாறு கௌரவம் அளிக்கிறது என்பதை சாதகமான முறையில் வெளிப்படுத்துவதற்காக அமையும் என தேசிய சமாதானப் பேரவையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-11)

## வட மாகா...

செய்த அவர்கள் உங்களுக்கு திருமணமாகி விட்டதா? மனைவி யார்? குழந்தைகள் உள்ளனரா? எத்தனை பேர்? என தேவையற்ற பல வினாக்களை எழுப்பி விசாரித்தனர்.

இவ்வாறு என்னைப்பற்றியும், குடும்ப உறுப்பினர்கள் பற்றியும் தனது அரசியல் நடவடிக்கைகள் பற்றியுமே கேள்விகள் கேட்கப்பட்டது இராணுவமயப்படுத்தப்பட்டுள்ள சமூக சூழ்நிலையில் என்னைப்பற்றி இராணுவத்தினர் சகல தகவல்களையும் அறிந் துள்ள போதிலும் விசாரணைக்கான காரணத்தைக கோரியபோது தாம் மேலிட உத்தரவின் பிரகாரமே விசாரணைகளில் ஈடுபடுவதாக குறித்த அதிகாரி தெரிவித்ததாக உறுப்பினர் கஜதீபன் கூறினார்.

அண்மைக்காலங்களில் தமிழ்த் தேசியக கூட்டமைப்பினரால் இராணுவத்தினரின் நில அபகரிப்புக்கு எதிரான போராட்டங்கள் முனனெடுக்கப்பட்டு வரும் சூழ்நிலையில் அதன் உறுப்பினர்களை உளவியல்ரீதியாக பாதிப்படையச்செய்யும் சம்பவங்களின் ஒரு பகுதியாகவே இவ்விசாரணை நடவடிக்கை இடம் பெற்றிருப்பதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-6)

## பரந்தனில்...

கப்படுகிறது. சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## மின்சாரம்...

டிருந்த போது மின்னிணைப்பு வேலை செய்து கொண்டிருக்கும் சமயம் மேற்படிச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மின்சாரம் தாக்கப்பட்டதை அடுத்து அவர் மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் மாத்தளை மாவட்டம் லக்கலவைச் சேர்ந்த ரி.ஜி.டி.பண்டார (வயது-26) என்ற சிப்பாயே உயிரிழந்தவராவார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-10,60)

## ஜெயலலிதா...

விக்கப்பட்டுள்ளார்.

இந்திய உச்சநீதிமன்றம் வெள்ளியன்று ஜாமீன் வழங்கியதை அடுத்து பெங்களூர் சிறையில் இருந்து நேற்று சனிக்கிழமை ஜெயலலிதா விடுவிக்கப்பட்டார்.

தமிழக முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் மற்றும் தமிழக அமைச்சர்கள் பரப்பன அக்ரஹாரத்திற்குச் சென்று விடுதலையாகும் ஜெயலலிதாவை வரவேற்று கூட்டிச் சென்றனர்.

சிறைச்சாலையிலிருந்து வாகனத் தொடரணியாக ஹெச். ஏ. எல். விமான நிலையத்துக்கு சென்று அங்கிருந்து தனி விமானம் மூலமாக சென்னை வந்தார்.

சாலையோரமாக பெருந்திரளான அதிமுக தொண்டர்கள் கூடி நின்று ஜெயலலிதாவுக்கு வரவேற்பு அளித்திருந்தனர்.

கூட்டத்தைக் கட்டுப்படுத்த ஏராளமான பொலிசார் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஜாமீன் வழங்க நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், வழக்கை விசாரித்த பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் நேற்று அதற்கான ஆணையை வழங்கியிருந்தது.

ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன ஆகியோருக்கு தலா இரண்டு பேர் வீதம் எட்டு பேர் தலா ஒரு கோடி ரூபாய்க்கான உத்தரவாதம் அளித்ததையடுத்து சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜோன் மைக்கல் டி குன்ஹா நான்கு பேரையும் ஜாமீனில் விடுவதற்கான உத்தரவை அளித்திருந்தார்.

ஜெயலலிதாவுக்கு ஜெயபால், குணவதி ஆகிய இருவர் தலா ஒரு கோடி ரூபாய்க்கான உத்தரவாதத்தை அளித்திருந்தனர். (எ-11)

## யாழ்தேவி...

2016ஆம் ஆண்டில் மின்சார ரயில் சேவை ஆரம்பிக்கவும் திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர் ரயில் சேவையை நவீனமயப்படுத்த புதிதாக ரயில் என்ஜின்கள், ரயில் பெட்டிகள் என்பன கொள்வனவு செய்வதற்காகவும் அரசாங்கம் 1200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வடபகுதிக்கான ரயில் சேவையை ஆரம்பிப்பதற்காக 2009ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே நான் அதற்கான திட்டப் பணிப்பாளராக அங்கு சென்று பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்தேன்.

யாழ்தேவி யாழ்ப்பாணம் வரை சேவையை ஆரம்பித்துள்ளது. யாழ் - காங்கேசன்துறை மற்றும் மடு - தலைமன்னார் இடையிலான ரயில் பாதைகள் ரயில் நிலையங்கள் என்பன துரிதமாக நிர்மாணிக்கப்படுகிறது. டிசம்பரில் அப்பகுதிகளுக்கான சேவை ஆரம்பிக்கப்படும்.

2016இல் மின்சார ரயில் சேவை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனூடாக ரயில் சேவைகளுக்கு செலவிடும் தொகை குறைவடையும் என்றார். (எ-11)

## புலிகள் மீதான...

மதிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை நீக்கிய போதிலும், அந்த அமைப்பின் மீதான தடையை இந்தியாவில் நீக்குவது குறித்து மத்திய அரசு இதுவரை ஆலோசிக்கவில்லை என்றும் கூறினார். (எ-11)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க லொத்தர் விசா

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
55000 பேருக்கான வாய்ப்பு, இலவசமாக உங்கள் வெற்றி வாய்ப்பினை உறுதி செய்துகொள்ளுங்கள்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
2015 இல் A/L எடுப்பவர்கள் கூட விண்ணப்பிக்கலாம்
உடனே விரையுங்கள் - தாமதம் வேண்டாம்
அலட்சியம் வேண்டாம் நம்பிக்கையுடன் பதியுங்கள் வெற்றிபெறுங்கள்

கிளிநொச்சி
A9 வீதி - பழைய ஆஸ்பத்திரி முன்னால்
0771516537

யாழ்ப்பாணம்
49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால்
0773867257

நெல்லியடி
முடக்காட்டுச்சந்தி
0776699892

வல்வெட்டித்துறை
யாழ்வீதி - வல்வெட்டி
0776697960

குறைந்த கட்டணத்தில் V2 Travels and Tours (Pvt) Ltd (8111)
● அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள் ● உள்நாட்டு, வெளிநாட்டு துரிதபொதிகள் சேவை



## 2016 DV Lottery

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
விண்ணப்ப முடிவுத்திகதி
02.11.2014
திருமுருகன் கொம்நெற்
இல. 271A, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
0212227835
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
இல.18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
பிரதான வீதி, சங்கானை.
(வைத்திலிங்க கட்டிடம் மேல்மாடி, ஆசை பிள்ளை நகைக்கடை முன்பாக)
(7823)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## காணி விற்பனைக்கு

மருதனாமடம், கே.கே.எஸ் வீதியில் பிரதேச சபைக்கு முன்பாக 2 ஆவது காணி 6 1/2 பரப்பு விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:
077 550 4438
(8086)



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி
கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள் (பிரெஞ் ஆசிரியர் உட்பட) சரியான உச்சரிப்பு, CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும் படிக்கலாம்.
உடன் பதிவுசெய்யுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம.
(8050)


# புலிகளின்...

மேற்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.


இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச உள்ளிட்டவர்களை படுகொலை செய்தமை,

இராணுவ அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட படையதிகாரிகளை கொலை செய்தமை என பல்வேறு குற்றச் செயல்களுடன்புலிகளுக்கு தொடர்பு உண்டு என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை தளர்த்துவது தொடர்பில் விடுத்த அறிவிப்பினைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் இந்த குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.(எ-11)

## 45-ம் நாள் நினைவஞ்சலி

### செல்வன் அருந்தவராசா கிருசாங்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 - 01 - 1997 | 05 - 09 - 2014 |

*எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு*
*இடையில் அணைந்தது ஏனோ?*
*இருண்டுவந்த கருமேகம் இடியாய் நெஞ்சைப் பிளக்கின்றதே*
*பல்லாயிரம் காலம் கடந்தாலும் நீயின்றி ஆறுதல் வருமோ?*

எமது குடும்ப விளக்கு அருந்தவராசா கிருசாந்தின் அந்தியேட்டிக் கிரியை இன்று (19.10.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு கருகம்பன் ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெறும். இத்தருணம் அனைத்து நண்பர்கள், உறவினர்கள் யாவரும் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவிகள் செய்த நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கருகம்பன்
புலோலி தெற்கு, மந்திகை.
(சி-8797)
இங்ஙனம்:-குடும்பத்தினர்.


Happy Diwali! விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை! Merry Christmas!

## பண்டிகைக்காலத்தை முன்னிட்டு

இரண்டு தசாப்தங்களுக்கு மேல் கடிதங்கள், பொதிகள் சேவையில் பல்லாயிரக் கணக்கான வாடிக்கையாளர்களின் மனதில் இடம்பிடித்து நிற்கும்
### திருமுருகன் கொம் நெற்
தமது வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகளை வழங்கவுள்ளது.
220 க்கு மேற்பட்ட நாடுகளுக்கான துரித சேவை.
3 - 5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.
உங்கள் இல்லங்களில் வந்து பொறுப்பேற்று உரிய முகவரியில் ஒப்படைக்கும் வசதி.
கடிதங்கள், உடுபுடவைகள், அன்பளிப்புப் பொருட்கள், கடலுணவுகள், மருந்துப் பொருட்கள், மற்றும் இதர பொருட்களையும் அனுப்பிட முடியும்.

தற்போது 11Kg ற்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகைகள்.
(1kg க்கான கட்டணம்).
(லண்டன் 625/=, கனடா 950/= பிரான்ஸ் 675/=, ஜேர்மனி 650/=, சுவிஸ் 750/= இத்தாலி 800/=, அவுஸ்ரேலியா 700/=)
(இச்சலுகை எமது நிறுவனத்தில் மட்டுமே உள்ளது.)

திருமுருகன் கொம் நெற் பிறைவேட் லிமிட்டட்
271A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
(ஆல் சிலோன் புத்தகக் கடைக்கு முன்பாக)
கிளைகள்:
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. 18, பிரதான வீதி, நெல்லியடி.
30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 50, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
பிரதான வீதி, சங்கானை.
(ஆசைப்பிள்ளை நகைக்கடைக்கு முன்பாக)
தொடர்புகளுக்கு:
0777554528 / 0212227835
நிபந்தனைக்கு உட்பட்டது.
(7823)



SPEED LANKA EXPRESS Courier

## வெளிநாடுகளுக்கான

தபால் பொதி விநியோக சேவை

- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

Speed Lanka Express (Pvt) Ltd.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net
(சி-8799)



## சிங்கர் தீபாவளி சிறப்பு தள்ளுபடி

* தளபாடங்களுக்கு 20% வரை விலைக்கழிவு
* குளிர்சாதன பெட்டிகளுக்கு வட்டி இன்றிய இலகு தவணை கொடுப்பனவு மற்றும் விசேட விலைக்கழிவுகள்
* பழைய தொலைக்காட்சி பெட்டிகளுக்கு புதியதொரு தொலைக்காட்சி, விசேட விலைக்கழிவு மற்றும் வட்டியின்றிய இலகு தவணை கொடுப்பனவு
* மழை காலத்தை எதிர் கொள்ள சலவை இயந்திரங்களுக்கு விசேட விலைக்கழிவு
* மடிக்கணனிகளுக்கு வட்டியின்றிய இலகு தவணை கொடுப்பனவு, விசேட விலைக்கழிவு மற்றும் பல சலுகைகள்
* சமையல் அறை உபகரணங்களுக்கு விசேட விலைக்கழிவுகள்
* Budry இலத்திரனியல் தராசுகளுக்கு 10% விசேட விலைக்கழிவு

(சி-8802)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 021 222 5408 | சுன்னாகம். 021 224 0555 | மானிப்பாய். 021 225 5343 | சங்கானை 021 225 1100 | சாவகச்சேரி 021 227 0197 | கொடிகாமம் 0776433888 | நெல்லியடி. 021 226 4937 | பருத்தித்துறை 021 226 3411 | கிளிநொச்சி 021 228 0199 | முல்லைத்தீவு 021 229 0180
www.singersl.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.